# செயலாற்றுகை அறிக்கை

# 2015

## வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

### தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சு

©2015 வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்

வெளிநாட்டு வளங்கள் திணைக்களம்
செயலகம் (3 ஆம் மாடி)
த. பெ. இ: 277
கொழும்பு 00100
இலங்கை

info@erd.gov.lk
http://www.erd.gov.lk

# உள்ளடக்கம்


மேனோக்கு 01

நிறுவனக் கட்டமைப்பு 03

வெளிநாட்டு நிதியீடு 06


## பிரிவுகள் வாரியான செயலாற்றுகை


ஆசிய அபிவிருத்தி வங்கி 15

ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா, மற்றும் சிங்கப்பூர் பிரிவு 20
- ஜப்பான்
- கொரியா

மூலதனச் சந்தை, உலக வங்கி, மற்றும் சர்வதேச நாணய நிதிப் பிரிவு 31
- மூலதனச் சந்தை
- உலக வங்கி

சீனா பிரிவு 38

மத்திய கிழக்கு மற்றும் தென்னாசிய நாடுகள் பிரிவு 41
- மத்திய கிழக்கு
- தென்னாசிய நாடுகள்

ரஷ்யா, அவுஸ்திரேலியா, மற்றும் மேற்குப் பிரிவு 48

ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள், தொழில்நுட்ப உதவி, மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரிவு 53
- ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள்
- தொழில்நுட்ப உதவி

படுகடன் முகாமைத்துவப் பிரிவு 60

கொள்கைத் திட்டமிடல் பிரிவு 63

நிதி மீளாய்வு 65

# தூர நோக்கு

உயர்வான நடுத்தர வருமான நிலையினை அடைவதற்கு நாடு எழுச்சியூட்டப்பட்டதன் காரணமாக இலங்கையின் பொருளாதார வளர்ச்சியைத் துரிதப்படுத்துவதற்கு வெளிநாட்டு நிதியினைத் திரட்டுவதன் மூலமும், முகாமைத்துவம் செய்வதன் மூலமும் தேவையான அறிவு, மற்றும் நிபுணத்துவ ரீதியாக சிறந்த தரத்தை அடைதல்

# செயற்பணி

நாட்டின் நீண்ட காலப்படுகடனின் நிலைபேறான தன்மையைப் பேணும் அதே வேளை, இலங்கையின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டத்தின் ஆதரவுடன் குறைந்த நிபந்தனைகளுடன் குறைந்த சாத்தியமான செலவில் வெளிநாட்டு நிதியினைத் திரட்டல்

# நோக்கங்கள்

- முன்னுரிமை அளிக்கப்பட்டுள்ள துறைகளின் அபிவிருத்தித் தேவைகளுக்கு நிதி வழங்குவதற்கு குறைந்த செலவுடனும், குறைவான இடருடனும் வெளிநாட்டு வளங்களைத் திரட்டுதல்

- வெளிநாட்டு வளங்களை வினைத் திறனுடையதாகவும், பயனுறு விளைவுள்ளதாகவும் பயன்படுத்துவதற்கு வசதியளித்தல்

- நாட்டின் நீண்ட கால வெளிநாட்டுப் படுகடன்களை நிலைபேறான தன்மையைப் பேணுவதற்குப் பங்களிப்புச் செலுத்துதல்.

- வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை வினைத்திறனான பயன்பாட்டின் மூலம் அரச துறையின் மனித வள அபிவிருத்திக்குப் பங்களிப்புச் செலுத்துதல்

- திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ள பாரிய பொறுப்புக்களை பயனுறு விளைவுள்ளதாகவும், செயற்திறன் கொண்டதாகவும் நிறைவேற்றுவதற்கு திணைக்களத்தின் திறன்களை தொடர்ந்து வலுவூட்டுதல்

---

# எமது விழுமியங்கள்

- சகல சட்டங்களையும், ஒழுங்கு விதிகளையும் கடைப்பிடித்தல் மற்றும் சிறந்த குண நலன்களோடு இணங்கி நடப்பதன் ஊடாகவும், ஆளுமை, வெளிப்படைத்தன்மை, வெளிப்படுத்துகை, மற்றும் ஒழுக்க நெறிகளின் அதி உயர் தரத்தைப் பேணுதல்.

- திணைக்களத்தின் அக்கறையை முன்னிறுத்தி அதி உயர் தரமான தனிப்பட்ட நேர்மையைப் பேணுதல்

- பணிக் குழுவினரின் செயலாற்றுகைகளை வெளிக்காட்டக் கூடியவாறான பரஸ்பர மதிப்பு மற்றும் நம்பிக்கைக்கான சூழலை ஏற்படுத்திப் பூரணமான சாத்தியங்களை நிறைவேற்றுதல்

- நாணயப் பொருளாளர்களுடன் உண்மையானதும், நியாயமானதுமான தொடர்புகளின் ஊடாக ஒழுக்க நெறிகளின் நீண்ட கால உறவுகளை வளர்ச்சியடையச் செய்தல்

- சகல மட்டங்களிலும் உள்ள பணியாளர்களுக்கு அதிகாரமளித்தல், தலையீடுகளைக் குறைத்தல், மற்றும் அவர்களை கடமைப் பொறுப்புள்ளவர்களாக இருக்குமாறு வேண்டுதல்

# மேனோக்கு

வருமானத்துக்கும் செலவீனத்துக்கும் இடையிலான இடைவெளிக்குப் பாலங்கட்டுவதற்கு உள்நாட்டு வளங்கள் பெரும்பாலும் போதியதாக இல்லாதமையினால், வெளிநாட்டு நிதியீடானது அரச முதலீட்டில் முக்கியமான பங்கை வகித்து வருகின்றது. எனவே, அரசாங்கத்தின் கடன் பெறுகை உபாயங்களின் முக்கியமான நோக்கங்களுள் ஒன்றாக நாட்டின் படுகடனின் நிலையான தன்மையைப் பேணி வரும் அதே வேளை, குறைந்த சாத்தியமான செலவில் தேவையான வெளிநாட்டு நிதியீட்டை திரட்டுவது விளங்குகின்றது. புதிய அரசாங்கம், ஒப்பந்தத் தரப்பினர்களுக்கிடையில் போட்டியை அதிகரிப்பதன் மூலம் ஏற்றுமதிக் கடன் ஏற்பாடுகளுடன் தொடர்புடைய கடன் பெறுகை செயன்முறையை பகுத்தறிவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளது.

குறைந்த வருமானம் கொண்ட நாடுகளுக்குப் பொதுவாகக் கிடைக்கக் கூடிய நன்கொடை நிதியீட்டின் வீழ்ச்சியுடன் அரசாங்கமானது, பல தரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் இரு தரப்பு கடன் வழங்கும் நிறுவனங்கள் ஆகியனவற்றிடமிருந்து கிடைக்கக் கூடிய சலுகை அடிப்படையிலான நிதியீட்டைப் பூரணமாகப் பயன்படுத்துவதற்கான பூர்வாங்க நடவடிக்கைகளை எடுத்துள்ளது. பல்வேறு வெளிநாட்டு நிதியீட்டு வளங்களை ஆராயும் போது, அரசாங்கத்தினால், பல விதமான நியதிகளையும், நிபந்தனைகளையும் எடுக்க வேண்டியுள்ளது. அதே வேளை, நிதி நெருக்கடிகள், உலகின் பிரதான பொருளாதாரங்களின் வளர்ச்சிக் குறைவுகள், அந்நியச் செலாவணி விகிதங்களினதும், லண்டன் வங்கிகளுக்கிடையில் வழங்கப்படும் வட்டி வீதங்கள் (LIBOR) மற்றும் ஐரோப்பிய வங்கிகளுக்கிடையில் வழங்கப்படும் வட்டி வீதங்கள் (EURIBOR) போன்ற மிதக்கும் வட்டி வீதங்களின் ஏற்றத் தாழ்வுகள், போன்ற எதிர்பாராத உலகளாவிய பொருளாதார நிபந்தனைகள் , கடன் பெறுகைகள், நிலுவையாக உள்ள படுகடன்கள் மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் ஆகியனவற்றின் செலவு அதிகரித்தல் உள்ளடங்கலாக நிதியீட்டைப் பெற்றுக் கொள்ளும் நாடுகளுக்கு புதிய சவால்களை முன் வைத்துள்ளது.

2014 ஆம் ஆண்டுடன் ஒப்பிடுகையில், 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டுக் கடன்களினதும், நன்கொடைகளினதும் அர்ப்பணிப்புக்களிலும், பகிர்வுகளிலும் குறிப்பிடத்தக்க அளவு வீழ்ச்சி காணப்பட்டது. 2014 ஆம் ஆண்டின் அர்ப்பணிப்புக்களுடனும் பகிர்வுகளுடனும் ஒப்பிடுகையில் 2015 ஆம் ஆண்டில் பகிர்வுகளில் 18 சதவீத வீழ்ச்சியொன்று பதியப்பட்ட அதே வேளை, அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நன்கொடைகளின் ஊடான வெளிநாட்டு நிதியீட்ட அர்ப்பணிப்புக்களில் பெரும்பாலும் 70 சதவீத வீழ்ச்சியொன்று காணப்பட்டது. மேலே கூறப்பட்ட இவ்வீழ்ச்சிக்கான பிரதான காரணங்களுள் ஒன்றாக 2015 ஆம் ஆண்டில் நிகழ்ந்த நாட்டின் ஜனாதிபதி மற்றும் பொதுத் தேர்தல்களின் ஊடான அரசியல் நிர்வாகத்தில் மாற்றம் காணப்பட்டது. புதிதாகத் தேர்ந்தெடுக்கப்பட்ட அரசாங்கம், பேச்சு வார்த்தைகளின் கீழ் நடைமுறையிலுள்ள கடன் உடன்படிக்கைகளை ஆராய்வதற்கு சில காலங்களை எடுத்துக் கொண்டதோடு, கடன் உடன்படிக்கைகளை மீளாய்வு செய்வதற்கும் கவனம் செலுத்தியது. மேலும்

நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் கருத்திட்டங்கள் அதிக அளவிலான வெளிப்படைச் செயன்முறைகளை ஏற்றுக் கொள்வதன் மூலம் நெருக்கமான முறையில் கண்காணித்தும், நிறைவேற்றியும் வந்தது. எதிர்காலத்தில் அழைக்கப்படாத கருத்திட்டங்கள் ஊக்குவிக்கப்பட மாட்டாது என்ற அரசாங்கத்தின் கொள்கைத் தீர்மானத்துடன் அழைக்கப்படாத கருத்திட்டங்கள் அனைத்தும் மீளாய்வுச் செயன்முறைக்கு உட்படுத்தப்பட்டன. 2015 இல் பாதகமான உலகளாவிய நிபந்தனைகளுடன் இணைந்து லண்டன் வங்கிகளுக்கிடையில் வழங்கப்படும் வட்டி வீதங்கள் (LIBOR) அதிகரிக்கும் போக்கைக் கொண்டிருந்ததனால், பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட மிதக்கும் வட்டி வீதங்களுடனான கடன் உடன்படிக்கைகளை மேலும் எச்சரிக்கையுடன் கவனம் செலுத்த வேண்டியிருந்தது. வட்டிச் செலவு அதிகரித்ததன் விளைவாக 2015 ஜனவரி மாதத்திலிருந்து பெரும்பாலும் 10 சதவீதத்தினால் ரூபாயின் பெறுமதி குறைவடைந்ததன் காரணமாக அத்தடைகள் தீவிரப்படுத்தப்பட்டன.

நாட்டின் பிரதான கடன் வழங்குனர்களுள் ஒன்றாக மாறிய சீனாவின் பொருளாதார வளர்ச்சி மந்தமடைந்ததனால், 2014 ஆம் ஆண்டில் அனுபவித்த சாதகமான நிபந்தனைகளுக்கு மாற்றமாக, 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அவர்களது நிதியீட்டின் அர்ப்பணிப்புக்களும் மற்றும் பகிர்வுகளும் குறைவடைவதற்குக் காரணமாக இருந்தது. இந்நிலைமையானது, உலகளாவிய பொருளாதார வளர்ச்சியை நோக்கி மோசமான தாக்கத்தை ஏற்படுத்தலாம். ஆயினும், அபிவிருத்திப் பங்காளர்களுடன் ஏற்கனவே கைச்சாத்திட்ட கடன்களிலிருந்து பெரும்பாலும் ஐஅடொ 8 பில்லியன் பகிரப்பட வேண்டிய பகிரப்படாத வெளிநாட்டு நிதி காணப்பட்டமையினால், நாடானது அடுத்து வரும் 3 – 5 வருடங்களில் அபிவிருத்திக் கருத்திட்டங்களினதும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களினதும் தடையில்லா நடைமுறைப்படுத்தலை எதிர்நோக்க முடியும்.

# நிறுவனக் கட்டமைப்பு

வெளிநாட்டு வளங்கள் திணைக்களமானது, பணிப்பாளர் நாயகத்தின் தலைமையில் இயங்குவதோடு, அவருக்கு உதவியாக ஒரு மேலதிகப் பணிப்பாளர் நாயகமும், 8 பணிப்பாளர்களும் பின்வரும் பிரிவுகளுக்கு பொறுப்பாக உள்ளனர்.

- ஆசிய அபிவிருத்தி வங்கி
- ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா மற்றும் சிங்கப்பூர் பிரிவு
- மூலதனச் சந்தை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியப் பிரிவு
- சீனாப் பிரிவு
- மத்திய கிழக்கு மற்றும் தென் ஆசியப் பிரிவு
- ரஷ்யா, அவுஸ்திரேலியா, மற்றும் மேற்குப் பிரிவு
- ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் மற்றும் தொழில்நுட்ப உதவி மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள் பிரிவு
- படுகடன் முகாமைத்துவப் பிரிவு
- கொள்கைத் திட்டமிடல் பிரிவு
- நிர்வாக மற்றும் நிதிப் பிரிவு

நிர்வாக மற்றும் நிதிப் பிரிவுகள் திணைக்களத்தின் சுமுகமானதும், வினைத் திறனானதுமான தொழிற்பாட்டுக்குத் தேவையான ஆதரவுச் சேவைகளை வழங்குகின்றன. இவ்வாதரவுச் சேவைகள் பிரதானமாக பௌதீக மற்றும் மனித வளங்களின் முகாமைத்துவம் மற்றும் அபிவிருத்தியோடு இணைந்தனவாகும். திணைக்களத்தின் பௌதீக வளங்கள் அளவைச் சபையின் செயன்முறையின் ஊடாக வருடாந்தம் உறுதிப்படுத்தப்பட்டு புதுப்பிக்கப்படுகின்றன.

2014 ஆம் ஆண்டில் வெற்றிடமாக இருந்த 30 சதவீதமான அங்கீகரிக்கப்பட்ட பதவியணி, 2015 ஆம் ஆண்டின் இறுதி வரை தொடர்ந்து காணப்பட்டது. இந்நிலைமையானது 2015 ஆம் ஆண்டின் வருடாந்த வேலைத்திட்டத்தில் தயாரிக்கப்பட்டுள்ள இலக்குகளை அடைவதில் திணைக்களத்துக்குச் சவாலாக உள்ளது. அவ்வாறான வெற்றிடங்கள் இருந்தாலும், திணைக்களம் 2015 ஆம் ஆண்டில் சிறந்த முறையில் செயலாற்றியது.

## உத்தியோகத்தர்களின் அபிவிருத்தி மற்றும் பயிற்சி

2015 ஆம் ஆண்டில், இத்திணைக்களமானது உத்தியோகத்தர்களின் இயலளவு அபிவிருத்தி மற்றும் அவர்களின் செயற்திறனை விருத்தி செய்வதற்காக உள்ளூர் மற்றும் வெளிநாட்டு பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதன் ஊடாக மனித வள அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கினை வகித்துள்ளது. இத்திணைக்களத்தின் பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்ளூர் மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள் பின்வருமாறு:

**பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு மற்றும் வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்கள்**

| பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் | உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை |
|---|---|
| **வெளிநாட்டு** | |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான அரச ராஜ தந்திர மேம்பாட்டு அபிவிருத்தி தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| அவுஸ்திரேலிய விருதுகள் புலமைப்பரிசில்கள் | 2 |
| பொதுநலவாய செயலகம் - படுகடன் பதிவு மற்றும் முகாமைத்துவ முறைமை (சீஎஸ்டீஆர்எம்எஸ்) வீ2 பயிற்சியாளர்களுக்கான பயிற்சிச் செயலமர்வு - ஐக்கிய இராச்சியம் தென்னாசிய நாடுகளிலிருந்தான உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவி தொடர்பான மாநாடு | 1 |
| படுகடன் முகாமைத்துவ செயலாற்ற மதிப்பீட்டுப் பயிற்சி – வியட்நாம் | 1 |
| நிலைபேறான தேசிய போட்டித்தன்மைக்கான மனித வளங்களின் அபிவிருத்திக் கொள்கையினை அிவிருத்தி செய்தல் - கொரியா | 1 |
| பொருளாதார அபிவிருத்திக் கொள்கை – கொரியா | 2 |
| மதிப்பீட்டுக் கற்கை நிகழ்வு: நிலையாக நினைத்தலும், பொறுப்பாகச் செயற்படலும், - பிலிப்பைன்ஸ் | 1 |
| நிதிச் சந்தை ஆய்வு – சிங்கப்பூர் | 1 |
| ஜடீசஏஎஸ் - ஜெட்ரோ புலமைப்பரிசில் நிகழ்ச்சித் திட்டம் - 2014 / 2015 – ஜப்பான் | 1 |
| அரச துறை உத்தியோகத்தர்களுக்கான கொள்கைப் பொருளாதாரத்தில் முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் - ஐக்கிய அமெரிக்கா | 1 |
| பொருளாதாரக் கொள்கை மற்றும் அபிவிருத்தியில் முதுமாணிப்பட்ட நிகழ்ச்சித் திட்டம் - கொரியா | 2 |
| இடைக்காலப் படுகடன் முகாமைத்துவக் கொள்கை பயிற்சி ஜேவீஜ வியன்னா, ஒஸ்ட்ரியா | 1 |
| சிறிய இராஜ்ஜியங்களுக்கான நவீன இராஜதந்திரம் - மோல்ட்டா | 1 |
| ஆசிய நாடுகளிலிருந்தான இராஜ தந்திர உத்தியோகத்தர்களுக்கான மாநாடு - சீனா | 3 |
| சீன - ஆசியான் பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் 2015 - சீனா | 1 |
| ஐரோப்பிய ஆசிய நாடுகளுக்கான சீனாவின் பொருளாதார மற்றும் சமூக அபிவிருத்தி அனுபவங்கள் தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு – சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பொருளாதார உலகமயமாக்கல் மற்றும் சீனாவின் தயாரிப்புக்கள் தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான பொருளாதார வளர்ச்சி மற்றும் நிலையான அபிவிருத்தி தொடர்பான மாநாடு – சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான அவசர தொடர்பாடல் வலையமைப்பு தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்த வரும் நாடுகளுக்கான வெளிநாட்டு உதவி நிறுவனம் தொடர்பான மாநாடு – சீனா | 7 |
| தென்னாசிய நாடுகளுக்கான இந்து சமுத்திரப் பிராந்திய அரசியல் மற்றும் பொருளாதார ஒத்துழைப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| இலங்கைக்கான உட்கட்டமைப்பு நிர்மாணம் மற்றும் திட்டமிடல் தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான வெளிநாட்டு நிபுணத்துவம் மற்றும் சமூக பொருளாதார அபிவிருத்தி தொடர்பான மாநாடு - சீனா | 1 |
| அபிவிருத்தியடைந்து வரும் நாடுகளுக்கான உள்நாட்டுப் பிரதேசங்களில் வெளிநாட்டு மூலதனத்தின் அறிமுகமும், பயன்பாடும் - சீனா | 1 |
| அரசாங்க படுகடன் முகாமைத்துவம் மாநாடு தொடர்பான பயிற்சி நிகழ்ச்சித் திட்டம் - ஜப்பான் | 1 |
| குறைந்த வருமான நாடுகளுக்கான உலக வங்கி – சர்வதேச நாணய நிதியம் இணைந்து நடாத்திய படுகடனின் நிலைபேறான தன்மையின் சட்டகம் - சீனா | 1 |
| இளைய தலைவர்களுக்கான நிகழ்ச்சித் திட்டம் பொது நிர்வாகம் / பொதுக் கொள்கையில் முதுமாணிப் பட்டம் – ஜப்பான் | 1 |
| இலங்கைக்கான மனித வள அபிவிருத்திப புலமைப்பரிசில்களுக்கான ஜப்பானிய நன்கொடை உதவி – ஜப்பான் | 1 |
| **உள்நாட்டு** | |
| இராஜதந்திரமும் தொழில் அலுவல்களில் டிப்ளோமா – பீஜடீட | 2 |

திணைக்களத்தின் நிர்வாக மற்றும் உதவி அலுவலர்களின் திறன்களை விருத்தி செய்வதற்கான தேவையை இனங்கண்டு, 2015 ஆம் ஆண்டில் முகாமைத்துவ உதவிச் சேவை மற்றும் ஆதரவான சேவைகளின் உத்தியோகத்தர்களுக்கு குறிப்பிடத்தக்க அளவிலான உள்ளூர் பயிற்சி வாய்ப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. பின்வரும் அட்டவணை அவர்கள் பயிற்றுவிக்கப்பட்ட துறைகள் தொடர்பான விபரங்களைச் சுருக்கமாகக் காட்டுகின்றது.

**ஆதரவான பணியாளர்களுக்கு வழங்கப்பட்ட உள்நாட்டு பயிற்சி வாய்ப்புக்கள்**

| பயிற்சி வழங்கப்பட்ட விடயம் | பணியாளர்களின் எண்ணிக்கை |
|---|---|
| உற்பத்தித் திறன் செயன்முறை ஒன்றிற்கான ஊழியர்களின் முன்னணி | 1 |
| களஞ்சியப்படுத்தல் தொடர்பான சான்றிதழ் பாடநெறி | 1 |

# வெளிநாட்டு நிதியீடு

## வெளிநாட்டு நிதியீட்டின் அர்ப்பணிப்புக்கள்

கடந்த தசாப்தத்தில் வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்களினாலும் கடன் வழங்கும் நிறுவனங்களினாலும் மேற்கொள்ளப்பட்ட மொத்த நிதியீட்டு அர்ப்பணிப்புக்கள் ஐஅடொ 27.1 பில்லியன்களாகும்[1]. கடந்த தசாப்த காலப்பிரிவில் வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஒருங்கிணைப்புடன் கைச்சாத்திடப்பட்ட கடன்கள் மற்றும் நன்கொடை உடன்படிக்கைகளின் ஊடாக அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வருடாந்தம் கிடைக்கப் பெற்ற சராசரி வெளிநாட்டு நிதியீட்டு அர்ப்பணிப்புக்கள் ஐஅடொ 2,140 மில்லியன்களாகும். அவற்றில் கடன்களாக கிடைக்கப் பெற்ற வருடாந்த சராசரி அர்ப்பணிப்புக்கள் ஐஅடொ 1,950 மில்லியன் தொகையைக் காட்டிய அதே வேளை, வருடாந்த நன்கொடை அர்ப்பணிப்புக்களாக சுமார் ஐஅடொ 190 மில்லியன்களைச் சுட்டிக் காட்டியது. அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட உடனே, நடைமுறைப்படுத்தல் செயன்முறையானது, அடுத்து வரும் 3 - 5 வருடங்களுக்கு நடைபெறும்.

2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்களிலிடமிருந்தும் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற மொத்த நிதியீட்டு அர்ப்பணிப்புக்கள் ஐஅடொ 1,333.6 மில்லியன்களாகும். அத்தொகையில், ஐஅடொ 1,268.4 மில்லியன்கள் 2015 ஆம் ஆண்டில் கைச்சாத்திடப்பட்ட 23 உடன்படிக்கைளின் ஊடாக கடன்களாகப் பதிவு செய்யப்பட்டுள்ளதோடு, எஞ்சிய ஐஅடொ 65.2 மில்லியன்கள் 10 நன்கொடை உடன்படிக்கைகளின் ஊடாகவும் பதிவு செய்யப்பட்டுள்ளன.

2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில், கடன் அர்ப்பணிப்புக்கள் ஜப்பானிய அரசாங்கத்தினால் நிதி உதவி வழங்கப்பட்ட தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் , (ஐஅடொ 200 மில்லியன், சவூதி நிதியத்தினால் நிதி உதவி வழங்கப்பட்ட (ஐஅடொ 60 மில்லியன்) பேராதனை – பதுளை- செங்கலடி வீதி விருத்திக் கருத்திட்டம், எச்எஸ்பீசீயினால் நிதி வழங்கப்பட்ட (ஐஅடொ 74 மில்லியன்) பதலகமயில் பால் பதப்படுத்தும் நிலையத்தின் ஸ்தாபிப்பு, ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நிதி வழங்கப்பட்ட ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் கட்டம் 2 (ஐஅடொ 98 மில்லியின்), ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சிதித் திட்டம் கட்டம் 3 (ஐஅடொ 175 மில்லியன்), மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 – (ஐஅடொ 147.8 மில்லியன்), நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் விருத்திக் கருத்திட்டம் (ஐஅடொ 163.2 மில்லியன்), உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்திச் சங்கத்தினால் நிதி வழங்கப்பட்ட ஆரம்ப குழந்தைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம் (ஐஅடொ 50 மில்லியன்), ஒபெக் நிதியத்தினால் நிதி வழங்கப்பட்ட (ஐஅடொ 60 மில்லியகன்) பதுளை- செங்கலடி வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் உள்ளடங்கலாக பிரதான கருத்திட்டங்களை நடைமுறைப்புடுத்துவதற்கு கிடைக்கப் பெற்றன. இணைப்பு I , 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் கைச்சாத்திடப் பட்ட கடன் உடன்படிக்கைகளை அவற்றின் நிதி வாரியான நியதிகளுடனும், இணைப்பு II , நன்கொடை உடன்படிக்கைகளையும் சுட்டிக் காட்டுகின்றது.

பின்வரும் வரைபுகள், மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களை புவியியல் ரீதியாக பிரதிபலித்துக் காட்டும் அதே வேளை, கருத்திட்டங்களின் பட்டியல்களும், அவர்களது நிதி நியதிகள் இணைப்பு I , II இலும் சித்தரித்துக் காட்டப்பட்டுள்ளன.

[1] ஐஅடொ 7,650 மில்லியன் பெறுமதியான சர்வதேச அரச முறிகளை வழங்குவதன் மூலம் பெற்றுக் கொண்ட கடன்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. திறைசேரியின் உண்டியல்கள் மற்றும் பிணைகளுக்கான வெளிநாட்டு முதலீடுகள் உள்ளடக்கப்படவில்லை. வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களினால் அரசுடமை தொழில்முயற்சிகளுக்கு வழங்கிய நிதி அர்ப்பணிப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை.

**2015 இல் அபிவிருத்திப் பங்காளர்களினால் மேற்கொள்ளப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டு அர்ப்பணிப்புக்கள் (ஐஅடொ மில்லியன்)**

| அபிவிருத்திப் பங்காளர் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை | | |
|---|---|---|---|
| | கடன் | நன்கொடை | மொத்தம் |
| **இரு தரப்பு** | **504.9** | **23.4** | **528.3** |
| ஜப்பான் | 199.9 | 4.1 | 204.0 |
| பிரான்ஸ் | 58.2 | | 58.2 |
| கொரியா | 17.3 | 3.2 | 20.5 |
| ஸ்பெய்ன் | 58.9 | | 58.9 |
| இந்தியா | | 7.6 | 7.6 |
| ஐக்கிய இராச்சியம் | 74.2 | | 74.2 |
| ஐக்கிய அமெரிக்கா | | 2.1 | 2.1 |
| ஜேர்மன் | | 6.4 | 6.4 |
| அவுஸ்திரேலியா | 21.3 | | 21.3 |
| சுவீடன் | 3.1 | | 3.1 |
| சவூதி நிதியம் | 72 | | 72 |
| **பல் தரப்பு** | **763.5** | **41.8** | **805.3** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 453.7 | | 453.7 |
| உலக வங்கி ( சர்வதேச அபிவிருத்திச் சங்கம்) | 232.8 | | 232.8 |
| ஐக்கிய நாடுகள் | | 41.8 | 41.8 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 77.0 | | 77.0 |
| **மொத்தம்** | **1,268.4** | **65.2** | **1,333.6** |

**குறிப்பு:** இவ்வறிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட மாற்றல் விகிதங்கள் ஒவ்வொரு உடன்படிக்கையும் கைச்சாத்திடப்பட்ட திகதியில் வேறுபட்ட நாணயங்களில் காணப்பட்ட பரிமாற்ற விகிதங்களாகவே காணப்பட்டன.

## வெளிநாட்டு நிதியீட்டின் பகிர்வுகளும், பயன்பாடுகளும்

2015 ஆம் ஆண்டில், அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் ஊடாக வெளிநாட்டு அபிவிருத்திப் பங்காளர்கள் மற்றும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன்கள் மற்றும் நன்கொடைகளைப் பொருத்த வரை மொத்தப் பகிர்வுகள் ஐஅடொ 1,515 மில்லியன்களாகும். அத்தொகையில், கடன் பகிர்வுகள் ஐஅடொ 1,440.7 மில்லியன்களாகும். எஞ்சிய ஐஅடொ 74.5 மில்லியன் தொகைக்குரிய 94 சதவீத நிதி கடன்களின் ஊடாகப் பகிரப்பட்டிருந்ததோடு, ஐஅடொ 80.76 மில்லியன் தொகையான மீதித் தொகை வெளிப்படையான நன்கொடைகளாக பகிரப்பட்டுள்ளன. இக்காலப்பிரிவில் ஒவ்வொரு அபிவிருத்திப் பங்காளர்களினாலும் மேற்கொள்ளப்பட்ட பங்களிப்புக்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனங்கள் | கடன் | நன்கொடை | மொத்தத் தொகை |
|---|---|---|---|
| | ஐஅடொ மில்லியன் | ஐஅடொ மில்லியன் | ஐஅடொ மில்லியன் |
| இரு தரப்பு | 914.4 | 43.8 | 961.2 |
| சீனா | 407.8 | | 407.8 |
| ஜபுப்பான் | 167.9 | 7.2 | 175.1 |
| இந்தியா | 73.1 | 31.9 | 104.9 |
| நெதர்லாந்து | 72.6 | | 72.6 |
| தென் கொரியா | 20.9 | 2.2 | 23.1 |
| சுவீடன் | 4.3 | | 4.3 |
| ஸ்பெய்ன் | 9.8 | | 9.8 |
| அவுஸ்திரேலியா | 9.8 | | 9.8 |
| ஓஸ்ட்ரியா | 6.8 | | 6.8 |
| ஹங்கேரி | 7.7 | | 7.7 |
| பிரான்ஸ் | 6.9 | | 6.9 |
| பெல்ஜியம் | 9.8 | | 9.8 |

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனங்கள் | கடன் ஐஅடொ மில்லியன் | நன்கொடை ஐஅடொ மில்லியன் | மொத்தத் தொகை ஐஅடொ மில்லியன் |
|---|---|---|---|
| டென்மார்க் | 24.7 | | 24.7 |
| ஜேர்மன் | 7.4 | 2.6 | 10.0 |
| சவூதி நிதியம் | 15.0 | | 15.0 |
| குவைட் | 9.2 | | 9.2 |
| ஐக்கிய இராச்சியம் | 56.7 | | 56.7 |
| ஐக்கிய அமெரிக்கா | 7.1 | | 7.1 |
| **பல தரப்பு** | 523.3 | 30.7 | 553.9 |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 288.0 | 1.6 | 289.6 |
| உலக வங்கி | 132.9 | 22.0 | 154.9 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியம் | 5.0 | 1.0 | 6.0 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம் | 16.5 | | 16.5 |
| ஐநாஅநி (UNDP) | | 0.2 | 0.2 |
| ஐநாசசஜ நி (UNICEF) | | 4.6 | 4.6 |
| உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO) | | 0.3 | 0.3 |
| ஐநாசநி ( UNFPA) | | 1.0 | 1.0 |
| ஐரோப்பிய முதலீட்டு வங்கி | 80.8 | | 80.8 |
| **மொத்தம்** | **1,440.7** | **74.5** | **1,515.2** |

**குறிப்பு:** இவ்வறிக்கைக்காகப் பயன்படுத்தப்பட்ட மாற்றல் விகிதங்கள் ஒவ்வொரு பகிர்வும் மேற்கொள்ளப்பட்ட திகதியில் வேறுபட்ட நாணயங்களில் காணப்பட்ட பரிமாற்ற விகிதங்களாகவே காணப்பட்டன.

## அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதியும், பயன்பாட்டு விகிதங்களும்

2015 ஆம் ஆண்டு இறுதியில் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்குப் பயன்படுத்துவதற்கு கிடைக்கக் கூடியதாகவுள்ள வெளிநாட்டு நிதியீட்டில் மொத்தப் பகிரப்படாத மீதி ஐஅடொ 7,867.5 மில்லியன்களாகும். அத்தொகையில் 40.2 சதவீதம் வீதி மற்றும் பாலங்கள் துறைக்குப் பயன்படுத்தப்படவுள்ள அதே வேளை, 114. சதவீதம் நீர் வழங்கல் துறைக்கும் சக்தி மற்றும் வலுத்துறைக்குத் தனியாகப் பயன்படுத்தப்படவுள்ளது.

| கடன் வழங்குவோர் | ஐஅடொ (மில்லியன்கள்) | % |
|---|---|---|
| **இரு தரப்பு** | **5,262.0** | **66.9** |
| சீனா | 2,254.6 | 28.7 |
| ஜப்பான் | 1,273.3 | 16.2 |
| இந்தியா | 326.7 | 4.2 |
| ஐக்கிய இராச்சியம் | 100.1 | 1.3 |
| நெதர்லாந்து | 72.8 | 0.9 |
| தென் கொாரியா | 85.0 | 1.1 |
| ஹங்கேரி | 17.7 | 0.2 |

| கடன் வழங்குவோர் | ஐஅடொ (மில்லியன்கள்) | % |
|---|---|---|
| சுவீடன் | 5.2 | 0.1 |
| ஸ்பெய்ன் | 58.7 | 0.7 |
| பிரான்ஸ் | 164.2 | 2.1 |
| ஒஸ்ட்ரியா | 7.0 | 0.1 |
| பெல்ஜியம் | 6.9 | 0.1 |
| ஜேர்மன் | 34.3 | 0.4 |
| டென்மார்க் | 49.7 | 0.6 |
| குவைட் | 61.9 | 0.8 |
| அவுஸ்திரேலியா | 14.1 | 0.2 |
| ஐக்கிய அமெரிக்கா | 44.8 | 0.6 |
| சவூதி நிதியம் | 136.0 | 1.7 |
| ஈரான் | 399.4 | 5.1 |
| பாகிஸ்தான் | 14.9 | 0.2 |
| ரஷ்யா | 134.7 | 1.7 |
| **பல தரப்பு** | **2,605.5** | **33.1** |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 1,453.3 | 18.5 |
| உலக வங்கி - சர்வதேச அபிவிருத்திக்கான அமைப்பு- | 727.9 | 9.3 |
| உலக வங்கி - புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கி | 242.9 | 3.1 |
| விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி | 34.1 | 0.4 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஓபெக் நிதி (OFID) | 145.4 | 1.8 |
| நோர்டிக் அபிவிருத்தி வங்கி | 1.9 | 0.0 |
| **மொத்தம்** | **7,867.5** | **100.0** |

**2015 டிசம்பர் இறுதியில் துறை வாரியாக அர்ப்பணிக்கப்பட்டு பகிரப்படாத மீதி**

| | ஐஅடொ (மில்லியன்கள்) | % |
|---|---|---|
| **விவசாயம்** | **746.0** | **9.5** |
| விவசாயம் | 22.5 | 0.3 |
| கால்நடை அபிவிருத்தி | 54.3 | 0.7 |
| காணியும், நீர்ப்பாசனமும் | 669.2 | 8.5 |
| **பொருளாதார உட்கட்டமைப்பு** | **5,477.1** | **69.6** |
| போக்குவரத்து | 380.8 | 4.8 |
| துறைமுகங்களும், கப்பலிலேற்றலும் | 116.5 | 1.5 |
| சக்தியும், வலுவும் | 901.9 | 11.5 |
| நீர் வழங்கலும், வடிகாலமைப்பும், | 895.9 | 11.4 |
| வீதியும், பாலங்களும் | 3,182.0 | 40.4 |
| **சமூக உட்கட்டமைப்பு** | **942.6** | **12.0** |
| கல்வியும், தொழில்சார் பயிற்சியும் | 299.7 | 3.8 |
| சுகாதாரமும், சமூக நலனும் | 181.1 | 2.3 |
| வீடமைப்பும், நகர அபிவிருத்தியும் | 263.7 | 3.4 |
| புனர்வாழ்வு மற்றும் அனர்த்த முகாமைத்துவம் | 198.1 | 2.5 |
| **பிராந்திய மற்றும் கிராமிய அபிவிருத்தி** | **2.9** | **0.0** |
| **நிதி மற்றும் வங்கியியல்** | **11.6** | **0.1** |
| **நிறுவன மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி** | **43.7** | **0.6** |
| **சுற்றாடல்** | **61.2** | **0.8** |
| ஏனையவை | 582.4 | 7.4 |
| **மொத்தம்** | **7,867.5** | **100.0** |

## வெளிநாட்டுப் படுகடன் நிலுவை மற்றும் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்


2015 ஆம் ஆண்டின் இறுதியில், அரசாங்கத்தின் வெளிநாட்டுப் படுகடன் நிலுவையானது ஐஅடொ 22.5 பல்லியன்களாகும்[2]. 2015 ஆம் ஆண்டின் மொத்தப் படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள்[3] ஐஅடொ 1,821.1 மில்லியன் தொகையாகும். அத்தொகையில் ஐஅடொ 1,270.1 மில்லியன் தவணைக் கட்டணமாகவும், எஞ்சிய ஐஅடொ 550.9 மில்லியன் வட்டிக் கொடுப்பனவுகளாகவும் காணப்பட்டன.

2010 – 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவிலான படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும், 2020 வரையிலான மதிப்பிடப்பட்ட படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகளும் வரைபில் குறித்தக் காட்டப்பட்டுள்ளன.

[2] அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காகப் பெற்றுக் கொண்ட கடன்களின் படுகடன் நிலுவையும், சர்வதேச அரச நாணய முறிகளின் படுகடன் நிலுவையும் உள்ளடக்கப்பட்டுள்ளன. அரசுடமை தொழில்முயற்சிகளுக்குப் பெற்றுக் கொண்ட கடன்களின் படுகடன் நிலுவை உள்ளடக்கப்படவில்லை.

[3] படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் = அடிப்படைக் கொடுப்பனவுகள் + வட்டிக் கொடுப்பனவுகள், அரசுடமை தொழில்முயற்சிகளுக்குப் பெற்றுக் கொண்ட கடன்களின் படுகடன் தீர்ப்பனவு.


படுகடன் தீர்ப்பனவுக் கொடுப்பனவுகள் (ஐஅடொ மில்லியன்)




## வெளிநாட்டுப் படுகடனின் முதிர்வுக் கட்டமைப்பு

அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதியிடுவதற்குப் பெற்றுக் கொள்ளப்பட்ட ஐஅடொ 22.5 பில்லியன் மொத்த வெளிநாட்டுப் படுகடன் நிலுவையில் அண்ணளவாக 13 சதவீதம் அடுத்து வரும் 5 வருட காலப்பிரிவில் முதிர்வடையும். பெரும்பான்மை (28 சதவீதம்) 5 – 10 வருட காலப்பிரிவில் முதிர்வடையும். ஏனைய 35 சதவீதமும் 10 – 20 வருடங்களில் முதிர்வடையும். மீதியாகவுள்ள 24 சதவீதமும் 20 வருடங்களின் பின்னர் முதிர்வடையும்.

## கடன் தொகுதியின் முதிர்வுக் கட்டமைப்பு – மீதியாகவுள்ள முதிர்வு




**குறிப்பு:** இப்புள்ளி விபரங்கள் நடைமுறையிலுள்ள கடன் தொகுதியை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ளன.

# பிரிவுகள் வாரியான செயலாற்றுகை

# ஆசிய அபிவிருத்தி வங்கி

## இலங்கையின் அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக ஆசிய அபிவிருத்தி வங்கி

ஆசிய அபிவிருத்தி வங்கியானது, 49 வருடங்களுக்கு மேலாக உற்பத்தித் திறன் வாய்ந்த பங்கேற்புடன் மிகப் பிரதானமான பல் நோக்கு அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக விளங்கி வந்துள்ளது. 1966 ஆம் ஆண்டில் இவ்வங்கி ஆரம்பிக்கப்பட்ட காலத்திலிருந்து, இவ்வங்கியானது, திரண்ட கடன் பெறுகையாக அண்ணளவாக ஐஅடொ 7.23 மில்லியன்களுடன் மொத்தம் 190 அரச முறிக் கடன்களுக்கும், அரச முறியல்லாத கடன்களுக்கும் அங்கீகாரம் வழங்கியுள்ளது. மேலும், ஆசிய அபிவிருத்தி வங்கி கருத்திட்டங்களுக்கு ஐஅடொ 358 மில்லியன் நன்கொடை உதவியை (ஆசிய அபிவிருத்தி வங்கியின் துணை நிதி நன்கொடைகள் உள்ளடங்கலாக) வழங்கியுள்ளதோடு, தொழில்நுட்ப உதவி நன்கொடைகளின் ஊடாக ஐ.அ.டொ 129.54 மில்லியன்களை வழங்கியுள்ளது. தற்போது ஆசிய அபிவிருத்தி வங்கியிலிருந்தான வருடாந்தக் கடன் பெறுகை சுமார் ஐஅடொ 400 – 500 மில்லியன்களாகவோ அல்லது மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 0.5–0.6 சதவீதமாகவோ உள்ளது.

**நாட்டின் பங்கேற்பு உபாயம் (CPS) 2016-2018**


2015 இல் இலங்கை அரசாங்கமும், ஆசிய அபிவிருத்தி வங்கியும் ஒன்றிணைந்து தயாரித்த 2016-2018 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் பங்கேற்பு உபாயமானது பின்வரும் பிரதான மூன்று நோக்கங்களை மையமாகக் கொண்டுள்ளது. அவையாவன, (i) பூரண மற்றும் நிலையான பொருளாதார வளர்ச்சி (ii) தனியார் முதலீட்டினை ஊக்குவித்தலும், பொது முதலீட்டின் வினைத்திறனை அதிகரித்தலும் (iii) மனித வள மற்றும் அறிவு அபிவிருத்தி ஆகியனவாகும். இந்த நாட்டின் பங்கேற்பு உபாயமானது, 2015 ஜனவரி மாதத்தில் ஆட்சிக்கு வந்த பொருளாதாரா வளர்ச்சிக்கான அபிவிருத்தித் தேவைகளுக்குத் தீர்வு காணக்கூடிய வகையில், புதிய அரசாங்கத்தினால் ஆரம்பிக்கப்பட்ட கொள்கைகளுக்கு ஏற்பத் தயாரிக்கப்பட்டுள்ளதோடு, இலங்கைக்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் முன்னுரிமை அளிக்கப்பட்ட துறைகளாக விவசாயம், இயற்கை வளங்கள் மற்றும் கிராமிய அபிவிருத்தித் துறைகளை இனங்கண்டுள்ளது. இதன் பிரகாரம், இலங்கை சலுகை அடிப்படையிலும், மற்றும் சலுகை அற்ற இறுக்கமான வட்டி வீதங்களின் கீழும் வருடாந்தம் சுமார் ஐ.அ.டொ 800 - 1000 மில்லியன்களைப் பெற்றுக் கொள்ளும். 2016-2018 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கு ஒதுக்கீடு செய்யப்பட்டதில் அண்ணளவாக ஐஅடொ 3 பில்லியன்களில் கணிசமான அளவிலான பங்கானது, போக்குவரத்து, நீர் வழங்கல் மற்றும் துப்பரவாக்கல், கழிவு நீர் முகாமைத்துவம், நீர்ப்பாசனம், நீர் வளங்கள், முகாமைத்துவம், சக்தியும் வலுவும் திறன்கள் அபிவிருத்தித் துறைகளுக்குப் பயன்படுத்தப்படும்.

## 2015 இல் அர்ப்பணிப்புக்களும் பகிர்வுகளும்

2015 ஆம் ஆண்டில் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்பு ஐ.அ.டொ 478 மில்லியன் தொகையாகக் காணப்பட்டது. இவ்வர்ப்பணிப்புக்கள் நீர்ப்பாசனம் மற்றும் நீர் வளங்கள் முகாமைத்துவத் துறைக்கு ஐஅடொ 150 மில்லியன், வீதிகளும், போக்குவரத்துத் துறைக்கான ஐஅடொ 200 மில்லியன்களையும், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் துறைக்கான ஐஅடொ 128 மில்லியன்களையும் உள்ளடக்குகின்றது. ஆசிய அபிவிருத்தி வங்கியின் தற்போதைய கடன் தொகுதி 39 கடன்களையும், 5 நன்கொடைகளையும் உள்ளடக்கியுள்ளது. இக்கடன்களின் கீழ் 2015 இல் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வு ஐஅடொ 293 மில்லியன்களாகும்.

.


2015 இல் பகிர்வின் துறைவாரியான விநியோகம்




## 2015 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதி

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன் தொகுதியானது, பாரிய துறையான வீதியும் போக்குவரத்துத் துறையிலும், அதனைத் தொடர்ந்து சக்தியும் வலுவும், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல், கல்வி மற்றும் திறன்கள், மனித வள அபிவிருத்தித் துறை, நீர்ப்பாசனம், பிராந்திய அபிவிருத்தி, நிதி மற்றும் அரசிறை முகாமைத்துவம் உள்ளார்ந்த பல்துறைகளுடனான 7 துறைகளிலும் பரந்துள்ளது. 2015 டிசம்பர் 31 ஆம் திகதியன்று ஆசிய அபிவிருத்தி வங்கியின் துறை வாரியான கடன் தொகுதியை பின்வரும் வரைபடம் விளக்குகின்றது.

ஆசிய அபிவிருத்தி வங்கியின் கடன்களின் துறைவாரியான விநியோகம் /ஐஅடொ மில்லியன்



# 2015 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | தொகை ஐஅடொ. மில்லியன் |
|---|---|
| **வீதி மற்றும் போக்குவரத்துத் துறை** | |
| வீதிக் கருத்திட்ட தயாரிப்பு வசதியளிப்புத் தொழில்நுட்ப உதவி | 15 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 154 |
| தேசிய நெடுஞ்சாலைகள் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் - 1 ஆம் மேலதிக நிதியீடு | 85 |
| வடக்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் – மேலதிக நிதியீடு | 98 |
| தெற்கு வீதி இணைப்புக் கருத்திட்டம் | 75 |
| ஐ – வீதி (I-Road ) – கட்டம் 1 | 100 |
| ஐ – வீதி (I-Road ) – கட்டம் 2 | 107 |
| **நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் துறை** | |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 88 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 60 |
| யாழ்ப்பாணம் - கிளிநொச்சி நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் | 90 |
| உலர் வலய நகர நீர் மற்றும் துப்புரவாக்கல் கருத்திட்டம் –' மேலதிக நிதியீடு | 40 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கருத்திட்டம் 1 | 84 |
| பாரிய கொழும்பு கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கருத்திட்டம் 2 | 88 |
| **சக்தியும், வலுவும் துறை** | |
| தூய சக்தியும், அடைவு விருத்திக் கருத்திட்டம் | 160 |
| நிலையான சக்தித் துறை ஆதரவுக் கருத்திட்டம் | 120 |
| தூய சக்தியும் வலையமைப்பு வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் | 130 |
| பச்சை சக்தி அபிவிருத்தி மற்றும் வலு வினைத் திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் | 150 |
| **நிதித் துறை** | |
| அரசிறை முகாமைத்துவ வினைத் திறன் கருத்திட்டம் | 30.8 |
| பிராந்திய அபிவிருத்தி | |
| உள்ளூராட்சி மன்ற விரிவாக்கல் துறைக் கருத்திட்டம் | 55 |
| **கல்வித் துறை** | |
| திறன்கள் துறை விரிவாக்க நிகழ்ச்சித் திட்டம் | 100 |
| கல்வித் துறை அபிவிருத்திக் நிகழ்ச்சித் திட்டம் | 200 |
| **நீர்ப்பாசனம்/ விவசாயம்** | |
| மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் - கட்டம் 1 | 150 |
| **மொத்தம்** | **2,179.8** |

## 2015 இல் பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு அமுலாக்கப்பட்ட கடன்கள்

2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் மொத்தப் பெறுமதி ஐஅடொ 578 மில்லியன்களைக் கொண்ட 4 கருத்திட்டங்களுக்கு பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டதோடு, ஐஅடொ 507 மில்லியன் பெறுமதியான 4 கருத்திட்டங்கள் அமுலுக்குக் கொண்டு வரப்பட்டன. பேச்சுவார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டவைகளில் 35 சதவீதமானவை வீதிகள் மற்றும் போக்குவரத்துத் துறைகளைச் சார்ந்தனவாகவும், 26 சதவீதமானவை நீர்ப்பாசனம் மற்றும் விவசாயத்துறையைச் சார்ந்தனவாகவும், 22 சதவீதமானவைகள் நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் துறையைச் சார்ந்தனவாகவும், 17 சதவீதமானவை நிதித்துறையைச் சார்ந்தவையாகவும், காணப்பட்டன.

**2015 இல் அங்கீகாரம் வழங்கப்பட்ட கடன்களும், அமுலாக்கப்பட்ட கடன்களின் பட்டியல்**

| கடன் | தொகை (ஐஅடொ மில்லியன் ) |
|---|---|
| **பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டவைகள்** | |
| மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | 150 |
| ஓன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 3 | 200 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ விருத்திக் கருத்திட்டம – கட்டம் 3 | 128 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகள் கடன் வரிசை | 100 |
| **மொத்தம்** | **578** |
| **அமுலுக்கு வந்தவைகள்** | |
| பச்சை சக்தி அபிவிருத்தியும் சக்தி வினைத்திறன் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 150 |
| ஓன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 100 |
| ஓன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 107 |
| மகாவலி நீர்ப் பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | 150 |
| **மொத்தம்** | **507** |

## 2016 இல் கடன் செயலாக்கம்

2016 இல் ஆசிய அபிவிருத்தி வங்கியினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கடன்களின் பிரதான கருத்திட்டங்களின் பட்டியலை பின்வரும் அட்டவணை காட்டுகின்றது.

**2016 இல் நடைமுறைப்படுத்தப்படவுள்ள பிரதான கருத்திட்டங்கள்**

| கருத்திட்டங்கள் | தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|
| பச்சை சக்தி அபிவிருத்தியும் வலு வினைத்திறன் முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | 150 |
| மின்சக்தி வழங்கல் நம்பகத்தன்மை மேம்மபடுத்துவதற்கான ஆதரவுக் கருத்திட்டம் | 115 |
| உள்ளூராட்சி மன்ற விரிவாக்கல் துறைக் கருத்திட்டம் (மேலதிக நிதியீடு) | 60 |
| சிறிய மற்றும் நடுத்தர அளவிலான தொழில்முயற்சிகள் கடன் வரிசை | 100 |
| போக்குவரத்துக் கருத்திட்டத் தயாரிப்பு வசதியளிப்பு | 20 |
| பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ விருத்திக் கருத்திட்டம்– கட்டம் 3 | 128 |
| ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 3 | 300 |
| **மொத்தம்** | **823** |

## 2015 இல் பூர்த்தி செய்யப்பட்ட ஆசிய அபிவிருததி வங்கியினால் ஆதரவளிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டங்களின் விபரங்கள் | |
|---|---|
| **வீதிக் கருத்திட்டத் தயாரிப்பு வசதியளிப்பு**<br><br>**கடன் தொகை:**<br>ஐஅடொ 15.634 மில்லியன்<br><br>**மொத்தப் பகிர்வு :**<br>ஐஅடொ 15.489 மில்லியன்<br><br>**நடைமுறைப்படுத்தும் காலப்பிரிவு:**<br>2004 - 2015 | முன் மொழியப்பட்டுள்ள தொழில்நுட்ப உதவிக் கடனின் நோக்கம் வீதி வலையமைப்பினை வினைத் திறனான முறையில் அபிவிருத்தி செய்வதில் அரசாங்கத்திற்கு ஆதரவளித்தலாகும்.<br><br>வீதிக் கருத்திட்டத் தயாரிப்பு நடவடிக்கைகளை மையமாகக் கொள்ளல்,<br>(i) வீதிக் கருத்திட்டங்களின் முன் நிர்மாண நடவடிக்கைகளுக்கு வசதியளிக்கப்பட்டது<br>(ii) தொடர்ந்து வரும் கருத்திட்ட நடைமுறைப்படுத்தலின் தயார்நிலை உறுதிப்படுத்தப்பட்டதோடு, வீதிக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வீதி நிறுவனங்களின் இயலளவை விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செலுத்தப்பட்டது.<br><br>11 வருடங்களுக்கு ஐஅடொ 15.489 மில்லியன் கடன் நிதி பகிரப்பட்டிருந்தது. 2015 இல் இரத்துச் செய்யப்பட்ட ஐஅடொ 0.145 மில்லியன் சேமிப்பொன்று காணப்பட்டது. |

## இடம் பெற்ற விஷேட நிகழ்வுகள்

- மே – ஆசிய அபிவிருத்தி வங்கியின் 47 ஆம் வருடாந்தக் கூட்டம் ஆசர்பைஜானின் பகுவில் இடம் பெற்றது.
- கடன் கைச்சாத்திடல் :
  - மே – ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 (ஐஅடொ 107 மில்லியன்)
  - செப்தெம்பர் – மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் - 1 (ஐஅடொ 150 மில்லியன்)
  - டிசம்பர் - ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 3 (ஐஅடொ 200 மில்லியன்)

- உயர் மட்ட ஆலோசனைத் தூதுவர் குழுக்கள் :
  - ஜனவரி – திரு. மௌரிசியோ கிர்கா, ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் (பெல்ஜியம் / பிரான்ஸ் / இத்தாலி / போர்த்துக்கல் / ஸ்பெய்ன் / சுவீட்சர்லாந்து )
  - மார்ச் – திரு. சோங்ஜிங்க் வேங்க், ஆசிய அபிவிருத்தி வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர் (சீனா)
  - மார்ச் – திரு. ஹுன் கிம், பணிப்பாளர் நாயகம், தென்னாசியப் பிராந்திய அபிவிருத்தி
  - செப்தெம்பர் – திரு வென்கை, உப தலைவர் (செயற்பாடு 1), ஆசிய அபிவிருத்தி வங்கி
  - அக்டோபர் – திரு. ஹான்ஸ் - ஜோச்சிம் பச்டெல்,, ஆசிய அபிவிருத்தி வங்கியின் ஜேர்மன் ஆளுணர்
  - டிசம்பர் - திரு. கௌடென்சியோ சன்திலன் ஹோர்னன்டென்ஸ் சேஆர். நிறைவேற்றுப் பணிப்பாளர், ஆசிய அபிவிருத்தி வங்கி

- 2015 இல் மேலே குறிப்பிடப்பட்ட உயர் மட்ட தூதுவர் குழுக்கள் உள்ளடங்கலாக 92 தூதுவர் குழுக்கள் இலங்கைக்கு விஜயம் செய்தன.

# ஜப்பான், கொரியா, தாய்லாந்து, வியட்நாம், மலேசியா, மற்றும் சிங்கப்பூர் பிரிவு

## ஜப்பான்

### ஜப்பானிய அபிவிருத்தி உதவி

ஜப்பானிய உத்தியோகபூர்வ உதவியானது, அறுபது ஆண்டுகளுக்கும் மேலாக இலங்கையின் சமூக மற்றும் பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கை மேற்கொண்டு வருகின்றது. 1965 இலிருந்து ஜப்பானிய உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியானது, வருடாந்த அடிப்படையில் ஜப்பானிய யென் கடன் பொதிகளின் ஊடாக வழங்கி வருகின்றது. ஆரம்பத்தில், உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் யென் கடன்கள் ஜப்பானிலிருந்து பொருட்களையும், உரத்தினையும் இறக்குமதி செய்வதற்கு மாத்திரமே பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்ததோடு, மேலும், சக்தியும், வலுவும், நீர் வழங்கலும், வடிகாலமைப்பும், துறைமுகங்களும், வீதிகளும், போக்குவரத்தும், விமானத் துறையும், சுகாதாரம், விவசாயமும், நீர்ப்பாசனமும், அனர்த்த முகாமைத்துவம், தொலைத்தொடர்பு மற்றும் கிராமிய அபிவிருத்தி உள்ளடங்கலாக பல்வேறு துறைகளை உள்ளடக்கி 1978 ஆம் ஆண்டில் மேலும் விரிவாக்கப்பட்டது.

1965 இலிருந்த 113 அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக ஐஅடொ 7,994 மில்லியன் தொகையையும், ஐஅடொ 1326 மில்லியன் நன்கொடை உதவியுடன் அதிக சலுகை அடிப்படையிலான விகிதத்துடன் 15 பொருட்கடன்களையும் ஜப்பானிடமிருந்து உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியாக அரசாங்கம் பெற்றுக் கொண்டுள்ளது.

ஜப்பானிய உதவியானது, யென் கடன் பொதிகள், நன்கொடை உதவி, அபிவிருத்தி / சாத்திய ஆய்வுகள் போன்ற பல்வேறு திட்டங்களின் கீழும் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பு நிகழ்ச்சித் திட்டங்கள் போன்றனவற்றின் கீழும் வழங்கியுள்ளது.

ஜப்பானிய தொழில்நுட்ப ஒத்துழைப்பானது, ஜப்பானிய அறிவை பகிர்வதற்கும் மற்றும் நாட்டின் பொருளாதார அபிவிருத்திக்கான திறன்கள் போன்றவற்றுக்கான வாய்ப்புடன் பெறுபேற்றை அடிப்படையாகக் கொண்டு உயர்ந்த அளவில் மீளமைக்கப்பட்டுள்ளது.

### 2015 இல் ஜப்பானிய அபிவிருத்தி ஒருங்கிணைப்பு


தற்போது நடைமுறையிலுள்ள ஜப்பானிய நிதி உதவியின் கடன் தொகுதியானது ஐஅடொ 350 – 400 மில்லியன்களிலிருந்து ஐஅடொ 500 மில்லியனை விட அதிகமாக குறிப்பிடத்தக்க அளவிற்கு வளர்ச்சியடைந்துள்ளது. அதன் பிரகாரம், நடைமுறையில் உள்ள ஜப்பானிய நிதி உதவியின் கடன் முதலீட்டுத் தொகுதியானது 2015 இல் ஐஅடொ 565 மில்லியன் தொகையையுடைய இரண்டு சலுகை அடிப்படையிலான கடன்களையும் மற்றும் ஐஅடொ 4.1 மில்லியன் தொகையைக் கொண்ட நன்கொடையினையும் கைச்சாத்திடுவதன் மூலம் அதிகரித்துள்ளது.

| 45 ஆம் யென் கடன் பொதி | |
|---|---|
| **தேசிய மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தியும், வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் - கட்டம் I**<br>**ஜஅடொ 200 மில்லியன்**<br>பாரிய கொழும்புப் பிரதேசத்திலும் மற்றும் அதைச் சூழவுள்ள பிரதேசங்களிலும் அமைந்துள்ள தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பின் இயலளவை விருத்தி செய்வதற்கும், பரிமாற்ற வரிசைகளையும், உப நிலையங்களையும் நிர்மாணிப்பதன் மூலமும், மேம்படுத்துவதன் மூலமும், பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புக்களை குறைப்பதற்கும், அதன் மூலம் நாட்டின் வலுவிற்கான நம்பகத்தன்மையையும், வலு வினைத்திறனையும் விருத்தி செய்வதற்கு பங்களிப்புச் செலுத்துவதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. | **பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 (II)**<br>**ஜஅடொ 365 மில்லியன்**<br>இக்கருத்திட்டமானது, பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தின் பயணிகளைக் கையாளும் இயலளவை அதிகரிப்பதனையும், விமான நிலைய உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்குவதனுடன் பயணிகளின் வசதிகளை விரிவாக்குவதற்கும் அதன் மூலம் வெளிநாடுகளுடனான தொடர்பினை அதிகரிப்பதற்கும், சுற்றுலாக் கைத்தொழில் உள்ளடங்கலாக பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்துவதனையும் குறிக்கோளாகக் கொண்டுள்ளது. |

## 2015 இன் அர்ப்பணிப்புக்கள்

2015 இல் ஜப்பானின் உத்தியோக பூர்வ உதவியின் மொத்த அர்ப்பணிப்புக்கள், விமானப் போக்குவரத்துத் துறை, சக்தியும் வலுவும், கல்வியும், பயிற்சியும், வீதிகளும் பாலங்களும், சுகாதாரமும் சமூக நலனும், டிஜிட்டல் ஊடக ஒலிபரப்புத் துறைகளில் இனங்காணப்பட்ட அபிவிருத்தி முன்னுரிமைத் துறைகளுக்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டது.


**2015 இல் மொத்த அர்ப்பணிப்புக்களின் துறை வாரியான விநியோகம் (ஜஅடொ மில்லியன்)**



## 2015 இல் மேற்கொள்ளப்பட்ட பகிர்வுகள்


2015 ஆம் ஆண்டில் ஜப்பானிய உத்தியோகபூர்வ உதவி ஜஅடொ 175.06 மில்லியன்களாகும்.

**2015 இல் மேற்கொள்ளப்பட்ட மொத்தப் பகிர்வுகள் (ஜஅடொ மில்லியன்)**




மேலே குறிப்பிடப்பட்டுள்ள மொத்தப் பகிர்வானது, வீதிகள் மற்றும் பாலங்களுக்கான ஜஅடொ 118.08 மில்லியன், நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் துறைக்கான ஜஅடொ 40.84 மில்லியன், சுகாதாரமும் சமூக நலன் துறைக்கான ஜஅடொ 10.18 மில்லியன், சக்தியும் வலுவும் துறைக்கான ஜஅடொ 4.07 மில்லியன், நிதி மற்றும் காப்புறுதித் துறைக்கான ஜஅடொ 1.04 மில்லியன், கல்வியும், பயிற்சியும் துறைக்கான ஜஅடொ 0.86 மில்லியன்களையும் உள்ளடக்கியுள்ளன.


**ஜப்பானிய கடன் உதவியின் துறைவாரியான விநியோகம் 2005 – 2015**



## 2015 இல் ஜப்பானின் நன்கொடை உதவி

2015 இல் அர்ப்பணிக்கப்பட்ட ஜப்பானிய நன்கொடை உதவியானது, ஜஅடொ 4.1 மில்லியன்களாகக் காணப்பட்டதோடு, இவ்வர்ப்பணிப்பானது, ஜப்பானிய உள்நாட்டு உற்பத்திப் பொருட்களை இலங்கையின் புகையிரத திணைக்களத்துக்கு வழங்குவதற்கான ஜப்பானின் கருத்திட்டமல்லாத நன்கொடை உதவியாகும்.

**ஜப்பானிய நன்கொடை உதவியின் துறை வாரியான விநியோகம் 2005-2015**




## 45 ஆம் யென் கடன் பொதியின் கீழான ஜப்பானிய உதவி

### பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 (II)

பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 (II) இனை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக ஜப்பானிய யென் 45,428 மில்லியன் ( அண்ணளவாக ரூபா 48,969 மில்லியன்) கடனொன்றை வழங்கும் நோக்குடன் ஜப்பானிய அரசாங்கத்தினால் உத்தியோகபூர்வ உறுதிமொழி வழங்கப்பட்டுள்ளது.

இக்கருத்திட்டத்தின் பிரதான நோக்கம், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தின் பயணிகளைக் கையாளும் இயலளவை அதிகரிப்பதும் மற்றும் விமான நிலைய உட்கட்டமைப்பு வசதிகளை விரிவாக்குவதனுடன் பணிகளின் வசதியை விருத்தி செய்வதுமாகும். வெளிநாடுகளுடன் அதிகரிக்கப்பட்ட இணைப்பானது நாட்டின் சுற்றுலா அபிவிருத்தியின் பங்களிப்புடன் பொருளாதார வளர்ச்சியை மேம்படுத்தும்.

நாட்டில் சுற்றுப்பயணிகளின் வருகையின் எண்ணிக்கையில் எதிர்பார்க்கப்பட்ட வளர்ச்சியானது, பொருளாதார வளர்ச்சிக்கும், மற்றும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பங்களிப்புச் செலுத்தும். உண்மையில், இலங்கைக்கு வருகை தரும் அண்ணளவாக 99 சதவீதமான சுற்றுப் பிரயாணிகள், நாட்டிற்கான நுழைவாயிலாக பண்டாரநாயக்காக சர்வதேச விமான நிலையத்தினைப் பயன்படுத்துகின்றனர். சர்வதேச தரத்திற்கு ஏற்ப பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினை அபிவிருத்தி செய்தலானது, சுற்றுலா மேம்பாட்டினையும் மற்றும் இலங்கையின் பொருளாதார அபிவிருத்தியை நோக்கியும் பெருமளவில் பங்களிப்புச் செலுத்தும்

அண்மையில் மீளாய்வு செய்யப்பட்ட ஒரு கேள்வி எதிர்வு கூறலானது, பயணிகளின் நகர்வானது 2020 ஆம் ஆண்டில் 14.5 மில்லியன்களை அடையும் எனக் காட்டுகின்றது. மேலும், பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் 2 (II), உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதன் மூலம் நடைமுறையிலுள்ள பயணிகள் கையாளும் இயலளவை வருடாந்தம் 7.4 மில்லியனிலிருந்து 15 மில்லியன் வரை அதிகரிப்பதற்காக பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலையத்தினை விரிவாக்குவதற்கான தேவைப்பாட்டினையும், அவசரத் தேவையையும் பூர்த்தி செய்யும்.

## தேசிய மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம்

கடந்த தசாப்த காலப்பிரிவில், இலங்கையில் மின்சாரத்திற்கான கேள்வியானது, வருடாந்தம் 5 சதவீதத்திலிருந்து 7 சதவீத சராசரி வீதமொன்றில் அதிகரித்துள்ளதோடு, இவ்வளர்ச்சியானது, நாட்டின் பொருளாதார அபிவிருத்தியுடன் மேலும் தொடர்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது. மேலும், மின்சாரத்திற்கான கேள்வியானது, அடுத்து வரும் 20 ஆண்டுகளில் வருடாந்தம் 6.67 சதவீதத்தினால் அதிகரிக்கும் என எதிர்பார்க்கப்படுவதோடு, இக்கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு இலங்கை மின்சார சபையின் நீண்ட கால உருவாக்கத் திட்டத்தை (2013 – 2032) அடிப்படையாகக் கொண்டு 2020 ஆம் ஆண்டளவில் பொருத்துவதற்கு, அண்ணளவாக 1,143 மெ.வொ மேலதிக இயலளவு தேவைப்படுகின்றது. அதன் பிரகாரம், மின் சக்தி முறைமையின் இழப்புக்களை குறைக்கும் அதே வேளை, மின் உருவாக்கத்தினை அதிகரிப்பதற்கான உபாயங்களுக்கு இணைவாக நடைமுறையிலுள்ள மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பினை அதிகரிப்பதும் மிக இன்றியமையாததாக உள்ளது.

ஜப்பானிய அரசாங்கத்தினால் பிரகடனப்படுத்தப்பட்ட உத்தியோகபூர்வ உறுதி மொழிக்கு ஏற்ப, தேசிய மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் விருத்திக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக ஜப்பானிய யென் 24,930 மில்லியன் (அண்ணளவாக ரூபா 26,873 மில்லியன்) கடன் தொகையொன்றை வழங்கும் நோக்குடன் இக்கருத்திட்டத்தினால் பாரிய கொழும்பு பிரதேசத்தில் அமைந்துள்ள தேசிய மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலைமைப்புக்களின் இயலளவினை அதிகரிக்கவும், அதனைச் சூழவுள்ள பிரதேசங்களில் மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புக்களைக் குறைப்பதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் ஊடாக மின்சக்திப் பரிமாற்ற வரிசைகள், உப நிலையங்கள் மற்றும் விநியோக வரிசைகளை நிர்மாணிப்பதற்கும் மற்றும் தரமுயர்த்துவதற்குமான இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சக்தி விநியோக வலையமைப்பின் நம்பகத் தன்மையையும் மற்றும் வினைத்திறனையும் விருத்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## 46 ஆம் யென் கடன் பொதியின் கீழ் நிதி வழங்குவதற்கு இணக்கம் தெரிவிக்கப்பட்ட கருத்திட்டங்கள் - 2015 / 2016

### தேசிய மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் II – ஜஅபொ 121.58 மில்லியன்

புதிய ஹபரனைக்கும், சாம்பூர் கப்பல்துறைக்கும் இடையில் உயர் வோல்டேஜுகளுடனான மின்சக்திப் பரிமாற்ற வரிசைகளை நிர்மாணிப்பதன் மூலம் மின்சக்திப் பரிமாற்ற இயலளவைப் பலப்படுத்துவதும், பரிமாற்ற இழப்புக்களைக் குறைப்பதுமே இக்கருத்திதட்டத்தின் நோக்கமாகும். இக்கருத்திட்டம் நாட்டின் சக்தி நிரம்பல் வலையமைப்பின் நம்பகத் தன்மையையும், வினைத்திறனையும் அதிகரிக்கும்.

### களு கங்கை நீர் வழங்கல் விரிவாக்கக் கருத்திட்டம் (I) – ஜஅபொ 285.15 மில்லியன்

இக்கருத்திட்டம் குழாய் வழியான நீர் விநியோக முறைமையினை விரிவாக்குவதன் மூலமும், விருத்தியுற்ற விநியோக வலையமைப்புடன் மாவட்ட மீற்றர் வாசிக்கும் நிலையங்களை ஸ்தாபிப்பதன் மூலமும் பாதுகாப்பான , தொடர்ச்சியான மற்றும் சமத்துவமான நீர் விநியோகத்தினை வழங்குவதோடு, வருமானமற்ற நீரினையும் குறைக்கும். இக்கருத்திட்டம் இலங்கையின் கொழும்பு மற்றும் களுத்துறை மாவட்டங்களில் வசிப்போரின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கும் உதவும்.

### அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் (கட்டம் 2) - ஜஅபொ 181.75 மில்லியன்

இக்கருத்திட்டத்தின் நோக்கம் நாள்பட்ட சிறுநீரக நோய்க்கும் (CKD), மற்றும் பல் மற்றும் எலும்பு நோய்களுக்கும் காரணமான பாதுகாப்பற்ற நிலக்கீழ் நீரில் தங்கியுள்ள மக்கள் வாழும் அனுராதபுரத்தின் வடக்குப் பிரதேசத்தில் நீர் வழங்கல் திட்டத்தினை நிர்மாணிப்பதன் மூலம் பாதுகாப்பான நீரை வழங்குவதும் மற்றும் நீர் வழங்கல் உள்ளடக்கத்தினை அதிகரிப்பதுமாகும். இக்கருத்திட்டத்தினைப் பூர்த்தி செய்வதன் மூலம், நீரினால் ஏற்படக் கூடிய சுகாதாரக் கேடுகளைக் குறைப்பதற்கும், மற்றும் இப்பிரதேசத்தில் வாழும் மக்களின் சுகாதார நிலைமைகளை விருத்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது.

### அபிவிருத்திக் கொள்கைக் கடன் - தொகை தீர்மானிக்கப்படல் வேண்டும்

அபிவிருத்திக் கொள்கைக் கடனின் நோக்கம் தொடர்புடைய கொள்கைச் செயல்களை நடைமுறைப்படுத்துவதற்கு வசதியளிப்பதன் மூலம் இலங்கையின் பேரண்டப் பொருளாதாரத்தின் நிலையான தன்மை, நல்லாட்சி, மற்றும் தனியார் துறை போட்டித் திறனை விருத்தி செய்வதும் அதன் மூலம் இலங்கையின் பொருளாதார போட்டித் திறனை அதிகரிப்பதுமாகும்.

## 2015 இல் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | கடன் தொகை ஜப்பானிய யென் மில்லியன் |
|---|---|
| நீர்த்துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 13,231 |
| களுகங்கை நீர் வழங்கல் கருததிட்டம் - கட்டம் I நிலை II | 8,388 |
| பாரிய கொழும்பு நகர்ப் போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் I | 21,917 |
| மாகாண /கிராமிய வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் (மத்திய, சப்ரகமுவ) | 9,156 |
| வறுமை ஒழிப்பு நுண் நிதிக் கருத்திட்டம் (PAMP II) | 2,575 |

## 2015 இல் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டம் | கடன் தொகை ஜப்பானிய யென் மில்லியன் |
|---|---|
| **கடன்கள்** | |
| கண்டி நகர கழிவுநீர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 14,087 |
| பாரிய கொழும்பு நகர போக்குவரத்து அபிவிருத்திக் கருத்திட்டம் - fட்டம் II | 31,688 |
| வவுனியா – கிளிநொச்சி மின்சக்திப் பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் – II | 1,422 |
| ஹபரணை – வேயங்கொடை பரிமாற்ற வரிசைக் கருத்திட்டம் | 9,573 |
| பாரிய கொழும்பு மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக இழப்புக் குறைப்புக் கருத்திட்டம் | 15,941 |
| தேசிய வீதி வலையமைப்பின் பிரதான பாலங்களின் நிர்மாணக் கருத்திட்டம் | 12,381 |
| தேசிய வீதி வலையமைப்பின் நிலச்சரிவு அனர்த்த பாதுகாப்புக் கருத்திட்டம் | 7,619 |
| அனுராதபுரம் வடக்கு நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் I | 5,166 |
| பண்டாரநாயக்கா சர்வதேச விமான நிலைய அபிவிருத்திக் கருத்திட்டம் - கட்டம் II படிமுறை I | 28,969 |
| களனி ஆற்றின் மீதான புதிய பாலத்தின் நிர்மாணக் கருத்திட்டம் | 35,020 |
| புவிக்குரிய தொலைக்காட்சி ஒளிபரப்பு டிஜிடலைசேசன் கருத்திட்டம் | 13,717 |
| காலித் துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் | 14,495 |
| தேசிய பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தியும், வினைத்திறன் விருத்திக் கருத்திட்டம் - கட்டம் I | 24,930 |
| **நன்கொடைகள்** | |
| கிளிநொச்சி நீர் வழங்கல் திட்டத்தின் புனருத்தாரணம் | 8.3 |
| மருத்துவ உபகரணங்களின் ஏற்பாட்டிற்கான கருத்திட்டமல்லாத நன்கொடை | 11.0 |
| தூர்வாரி நிர்மாணக் கருத்திட்டம் | 10.4 |
| கைத்தொழில்பொருட்களின் நிர்மாணக் கருத்திட்டம் | 3.7 |
| ஜப்பானின் சிறிய மற்றும் நடுத்தர தொழில்முயற்சிகளின் உற்பத்திப் பொருட்களின் கருத்திட்டமல்லாத நன்கொடை | 2.1 |
| இலங்கையில் அதிவேகப் பாதைகளுக்கான புலனாய்வுப் போக்குவரத்துத் தகவல் முறைமைகளின் அபிவிருத்தி | 9.9 |
| ஜப்பானிய உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் வழங்கலுக்கான ஜப்பானிய கருத்திட்டமல்லாத நன்கொடை உதவி | 500 |

# கொரியா

கொரியா அரசாங்கம் கொரியா ஏற்றுமதி இறக்குமதி வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் ஊடாக அதன் கடன் உதவியை வழங்கி வருவதோடு, நன்கொடை உதவியினை கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக வழங்கி வருகின்றது.

1990 ஆம் ஆண்டிலருந்து எக்சிம் வங்கியின் பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம், இலங்கையில் 27 கடன் கருத்திட்டங்களின் ஊடாக அண்ணளவாக ஐஅடொ 600 மில்லியன் தொகையான சலுகை அடிப்படையிலான கடன்களை வழங்கியுள்ளது. அண்மையில், பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அவசியமான உபகரணங்களின் ஆதரவுகளை வழங்குவதற்கு கட்டுக்கோப்புக் கடன் திட்டமொன்றை (ஐஅடொ 5 மில்லியன்) அறிமுகப்படுத்தியுள்ளது.

2012 – 2016 ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் பங்கேற்பு உபாயத்திற்கு ஏற்ப, பொருளாதார, சமூக உட்கட்டமைப்பு, தொழில்நுட்ப, தொழில்சார் கல்வி, பயிற்சி மற்றும் இரண்டாந்தரக் கல்வித் துறைகளிலான கல்வி, நல்லாட்சி, ஆகியன பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் அடுத்த சட்டக ஏற்பாடுகளின் முன்னுரிமை பெற்ற துறைகளாக இனங்காணப்பட்டுள்ளன.

நாட்டின் துரித உட்கட்டமைப்பு அபிவிருத்தியின் தேவையையும், முன்மொழியப்பட்ட நகர அபிவிருத்தியின் பூர்வாங்க வேலைகளைக் கருத்திற் கொண்டு, பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம், 2016 – 2018 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்காக அடுத்த வரைபுச் சட்டக ஏற்பாட்டின் தொகையை ஐஅடொ 300 – 500 மில்லியன்களாக அதிகரிப்பதற்குச் சுட்டிக் காட்டியுள்ளது.

**பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் உதவியின் தற்போதைய நியதிகளும், நிபந்தனைகளும்**

| நியதிகளும், நிபந்தனைகளும் | சாதாரண நிபந்தனைகள் | கொரியாவின் ஆலோசகர் பணியில் அமர்த்தப்பட்டுள்ளார் | உயிர் வலுத் துறை |
|---|---|---|---|
| வட்டி வீதம் | 0.20% | 0.15% | வட்டி இல்லை |
| மீளக் கொடுப்பனவு | 30 வருடங்கள் | 40 வருடங்கள் | |
| தயவுக் காலப்பிரிவு | 10 வருடங்கள் | | 10 - 15 வருடங்கள் |
| கடன் தொகை | மொத்தக் கருத்திட்டச் செலவில் 100 சதவீதம் வரை | | |
| நாணயம் | கொரியா வொன் | | |
| சாத்திய வள ஆய்வு | சாத்தியமான கருத்திட்டங்களுக்கு நன்கொடை அடிப்படையிலான உதவி | | |


## 2015 இல் அர்ப்பணிக்கப்பட்ட கருத்திட்டங்கள்

| கருத்திட்டத்தின் பெயர் | நோக்கம் | அபிவிருத்திப் பங்காளர் நிறுவனம் | தொகை ஐஅடொ மில்லியன் |
|---|---|---|---|
| ஹட்டன் - நுவரெலியா வீதி விருத்திக் கருத்திட்டம் | போக்குவரத்து நெருக்கடிகளை நீக்குதலும், வீதிப் பாதுகாப்பினை அதிகரித்தலும் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் | 17.1 |
| இலங்கையின் தடய அறிவியல் நிறுவனங்களுக்கும், பணியாளர்களுக்குமான இயலளவைக் கட்டியெழுப்பும் கருத்திட்டம் | தடய அறிவியல் திணைக்களத்திலும், குற்றப் புலனாய்வுத் திணைக்களத்திலும் டிஜிடல் சாட்சிச் சேகரிப்பு இயலளவை விருத்தி செய்தல் | கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் - நன்கொடை | 3.2 |

## 2015 ஆம் ஆண்டில் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்


| கருத்திட்டம் | வசதியளிப்பு முறை | கடன்/நன்கொடை தொகை* (ஐஅடொ மில்லியன்) | தற்போதைய நிலைமை |
|---|---|---|---|
| கொழும்பு, கண்டி, மற்றும் கண்டி மகியங்கனை வீதிகளை இணைப்பதற்கான கண்டி நகர போக்குவரத்து திசை திருப்பச் சுரங்கப் பாதையின் நிர்மாணம் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் | 150 | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தினால் நடாத்தப்பட்டு வரும் சாத்திய வள ஆய்வு |
| தேசிய இ- கற்கைத் தளத்தினை அமைத்தல் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் | 50 | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தினால் நடாத்தப்படவுள்ள சாத்திய வள ஆய்வு |
| இலங்கையின் நில வரைபடத்துடன் புவியியல் தகவல் முறைமையைப் பொருத்துதல் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் | 50 | தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் பிரேரணை முன் ஆய்வு செய்யப்பட்டுள்ளது |
| ஓசன் பல்கலைக்கழகத்தினை ஸ்தாபித்தல் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் மற்றும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் | 50 | கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் பூர்வாங்க ஆய்வு மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. |
| இலங்கையில் இலத்திரனியல் - போக்குவரத்து முறைமையினைப் பொருத்துதல் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் | 40 | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியம் தனது அக்கறையினைத் தெரிவித்துள்ளதோடு, பிரேரணையானது அபிவிருத்தி செய்யப்பட வேண்டியுள்ளது. |
| வடக்கு மாகாண சபை கட்டடத் தொகுதியின் நிர்மாணம் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கடன் | 34 | மாங்குள அபிவிருத்தி தொடர்பான பிரதான திட்டத்தினை நகர அபிவிருத்தி அதிகார சபை தயாரித்து வருகின்றது. |
| சிறிய அளவிலான நீர் சுத்திகரிப்பு வசதியளிப்பின் ( மானம்பிட்டிய மற்றும் சோமாவதிய பிரதேசங்களுக்கான 02 அலகுகள்) நிர்மாணம் | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கட்டுக்கோப்பான கடன் | 5 | சாத்திய வள ஆய்வு அறிக்கையினை கொரியா ஆலோசனையாளர் தயாரித்து வருகின்றார். |
| கழிவு சேகரிப்பு வாகனங்களின் நிரம்பல் ( உள்ளூராட்சி மன்றங்களுக்கான 151 அலகுகள்) | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் கட்டுக்கோப்பான கடன் | 5 | சாத்திய வள ஆய்வு அறிக்கையினை கொரியா ஆலோசனையாளர் தயாரித்து வருகின்றார். |
| கண்டி நகரப் போக்குவரத்து வலையமைப்பினை மேம்படுத்துவதற்கான கொள்கை ஆலோசனை (உயர்த்தப் பெற்ற வீதிகள்) | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தின் நன்கொடை | டீபீ௰ | பொருளாதார அபிவிருத்தி ஒத்துழைப்பு நிதியத்தினால் தொழில்நுட்ப உதவி நடாத்தப்படும். |
| தேசிய கல்விக் கல்லூரியின் ஸ்தாபிப்பு, மற்றும் தொழில்நுட்பத் தொடருக்கான தொழில்நுட்ப ஆசிரியர் பயிற்சி முறைமை | கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நன்கொடை | 13 | செயற்திட்டம் பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. கலந்துரையாடலின் பதிவுகளைக் (RoD) கைச்சாத்திடுவதற்கான தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| சிறிய அளவிலான நீர்நிலை பொறியினை ஸ்தாபித்தல் - கொடிகாவத்தை – முல்லேரியா | கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நன்கொடை | 9.5 | கலந்துரையாடலின் பதிவுகளைக் (RoD) கைச்சாத்திடுவதற்கான தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |
| கொரியா - இலங்கை நட்புறவு வைத்தியசாலை மாத்தறை – கட்டம் 2 | கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் நன்கொடை | 9.0 | கலந்துரையாடலின் பதிவுகளைக் (RoD) கைச்சாத்திடுவதற்கான தயாரிப்புக்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. |

## 2015 இல் அர்ப்பணிப்புக்கள்




இலங்கை கொரியாவிடமிருந்து 2015 ஆம் ஆண்டில் கடன்களாகவும், நன்கொடையாகவும் ஐஅடொ 20.3 மில்லியன்களை திரட்டியுள்ளது. அவ்வர்ப்பணிப்புக்களில், ஐஅடொ 17.143 மில்லியன் ஹட்டன் - நுவரெலியா வீதி மேம்பாட்டுக் கருத்திட்டத்துக்கு நிதி வழங்குவதற்காகப் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளதோடு, எஞ்சிய ஐஅடொ 3.2 மில்லியன் தடய அறிவியல் நிறுவனங்களினதும், அவற்றின் அதிகாரிகளினதும் இயலளவைக் கட்டியெழுப்பும் கருத்திட்டத்திற்கு நிதி வழங்குவதற்காக நன்கொடையாக கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தினால் அர்ப்பணிக்கப்பட்டுள்ளது.

## 2015 இல் பகிர்வுகள்




2015 இன் மொத்தப் பகிர்வுகள் ஐஅடொ 23 மில்லியன்களாகும். இப்பகிர்வுகள் பிரதானமாக நெடுஞ்சாலைகள் துறை (63 சதவீதம்) மற்றும் நீர் வழங்கல் துறைகளிலேயே (29 சதவீதம்) பதிவு செய்யப்பட்டிருந்தன.

## இலங்கையின் தடய அறிவியல் நிறுவனங்களினதும் , அதன் அதிகாரிகளினதும் இயலளவைக் கட்டியெழுப்புவதற்கான கருத்திட்டம்

கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம் அரசாங்க ஆராய்ச்சியாளர்களின் திணைக்களத்தினையும், (GAD) மற்றும் குற்றவியல் விசாரணைகள் திணைக்களத்தினையும் பலப்படுத்துவதற்கான ஐஅடொ 3.2 மில்லியன் நன்கொடை உதவியினை வழங்குவதன் மூலம் ஆதரவினை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது.

இக்கருத்திட்டத்தின் நோக்கம் டிஜிடல் மற்றும் டீஎன்ஏ தடயவியல் இயலளவையும், குற்றவியல் விசாரணை திணைக்களத்தின் டிஜிடல் சாட்சிச் சேகரிப்பு இயலளவை விருத்தி செய்வதன் ஊடாகவும், உத்தியோகபூர்வ தடயவியல் நிறுவனமாக அரசாங்க ஆராய்ச்சி நிறுவனத்தினை பலப்படுத்துவதாகும். அதன் பிரகாரம், அரசாங்க ஆராய்ச்சி நிறுவனத்தின் டிஜிடல் ஆராய்ச்சிக் கூடமும், குற்றவியல் விசாரணைத் திணைக்களத்தின் டிஜிடல் சாட்சிக் கையாளுகைக்கான பயிற்சி நிலையமும், தொடர்புடைய உபகரணங்கள் மற்றும் பொருட்களுடன் ஸ்தாபிக்கப்படும். கொரியா அபிவிருத்தி அனுபவங்களும், தடய அறிவியலுக்கான தொழில்நுட்ப வழிவகை நுண்ணறிவாற்றலும் கொரியா நிபுணர்களுடனும், மற்றும் தொடர்புடைய அதிகார சபைகளுடனும், பகிரப்படும்.

இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தும் நிறுவனங்களாக நீதி அமைச்சின் கீழ் அரசாங்க ஆராய்ச்சிகள் திணைக்களமும், சட்டமும் ஒழுங்கும் மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சின் கீழ் குற்றவியல் விசாரணைகள் திணைக்களமும் செயற்படவுள்ளன. இக்கருத்திட்டம் 2015 – 2017 ஆம் ஆண்டு வரையிலான மூன்று வருட காலப்பிரிவில் நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இக்கருத்திட்டத்தின் கலந்துரையாடல்களின் பதிவுகள் நீதி அமைச்சிற்கும், சட்டமும் ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், மற்றும் கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திற்கும் இடையில் 2015 டிசம்பர் மாதம் 10 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டது.

# மூலதனச் சந்தை, உலக வங்கி, சர்வதேச நாணய நிதியப் பிரிவு

## மூலதனச் சந்தை

அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு உள்ளூர் வங்கிகளிடமிருந்து உள்நாட்டு நிதியினைத் திரட்டுவதற்கும், சர்வதேச சந்தைகளிலிருந்து வெளிநாட்டு நாணயக் கடன்களுக்கு வசதி அளிப்பதற்கும் மூலதனச் சந்தைப் பிரிவு பொறுப்பாக உள்ளது.

### உள்ளூர் வங்கிகளிடமிருந்து உள்நாட்டு நிதியினைத் திரட்டல்

64 முன்னுரிமை பெற்ற வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதி வழங்குவதற்காக ரூபா 151.7 பில்லியன்கள் வரை உள்ளூர் வங்கிகளிலிருந்து நிதியைப் பெற்றுக் கொள்வதற்கு வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது. இதற்காக, 2015 டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை ரூபா 126.6 மில்லியன்கள் வீதி அபிவிருத்தி அதிகாரசபையினால் பகிரப்பட்டுள்ளதோடு, 30 வீதி புனர் நிர்மாண மற்றும் மேம்பாட்டுக் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

முன்னுரிமை பெற்ற இவ்வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு மேலதிகமாக வீதி அபிவிருத்தி அதிகார சபை, கொழும்பு - கட்டுநாயக்கா அதி வேகப்பாதைக் கருத்திட்டத்தின் செயற்பரப்பின் வேறுபாடுகளை நடைமுறைப்படுத்துவதற்கான நிதி வசதிகளை வழங்குதல், வெளிவட்ட அதிவேகப்பாதைக் கருத்திட்டம், வெளிவட்ட நெடுஞ்சாலைகள் கருத்திட்டம் - கட்டம் III மற்றும் கடவத்தையிலிருந்து கெரவலப்பிட்டிய (நிர்மாண மேற்பார்வைக்கான ஆலோசனை சேவைகளுக்கான நிதியீடு) ஆகிய இன்னோரன்ன மூன்று வெளிநாட்டு நிதி உதவி வழங்கப்பட்ட கருத்திட்டங்களுக்கான நிதியிட்டின் ஒரு பகுதிக்கு உள்ளூர் வங்கியிடமிருந்து நிதியைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருந்தது

தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை 2014 ஆம் ஆண்டு ஜூன் மாதம் ரூபா 29.1 பில்லியன் தொகை பெறுமதியான நீர் கருத்திட்டங்களுக்கு உள்ளூர் வங்கிகளை அணுகுவதற்கு 2013 இல் அங்கீகாரம் வழங்கப்பட்டதோடு, ரூபா 10.0 பில்லியன் தொகை பெறுமதியான மேலதிகமான 4 நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்கும் அனுமதி வழங்கப்பட்டது. புதிய அரசாங்கம் நாட்டில் பாதுகாப்பான குடி நீர் வசதியளிப்பு ஏற்பாட்டினை அதிகரிப்பது தொடர்பாக மிகவும் உறுதியாக இருப்பதனால், உள்நாட்டு ஒப்பந்ததாரர்களின் ஊடாக நீர் வழங்கல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக உள்நாட்டு வங்கி நிதியீட்டினை ஏற்பாடு செய்வதானது துரிதப்படுத்தப்பட்டது. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை ரூபா 34.1 பில்லியன் தொகைக்கு 09 நீர் வழங்கல் கருத்திட்டங்களுக்காக உள்நாட்டு வங்கிகளுடன் கடன் உடன்படிக்கைகளை மேற்கொள்ள அமைச்சரவை அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது.

## உள்நாட்டு வங்கிகளினால் நிதி வழங்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம்

(ரூபா. மில்லியன்)

| நீர் வழங்கல் கருத்திட்டம் (WSP) | ஓப்பந்ததாரர் | வங்கி | செலவு |
|---|---|---|---|
| கொழும்பு நகர நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் - கட்டம் 1 | வீ.வீ.கருணாரத்ன என்ட் கம்பனி | இலங்கை வங்கி | 2,792.07 |
| கொழும்பு நகரின் கிழக்கு – பொதி I (தியகமை மற்றும் பாதுக்கை எஞ்சிய பிரதேசம்) | எக்சஸ் என்ஜினியரிங் பீஎல்சீ | இலங்கை வங்கி | 4,700.00 (எதிர்பாராத தொகையான 470 இனைக் கூட்டல்) |
| பெந்தோட்டை நீர் வழங்கல் கருத்திட்டம் | கே.டீ.ஏ. வீரசிங்க என்ட் கம்பனி பிரைவட் லிமிட்டட் | தேசிய சேமிப்பு வங்கி | 1,000.00 (உள்ளடக்கச் செலவான 239.47 இனைக் கூட்டல்) |
| றுகுணுபுர விநியோகம் நீர் வழங்கல் கருத்திட்டம் | கே.டீ.ஏ. வீரசிங்க என்ட் கம்பனி பிரைவட் லிமிட்டட் | வர்த்தக வங்கி | 1,929.61 |
| அம்பாறை விநியோக வலையமைப்பு நீர் வழங்கல் கருத்திட்டம் | சன்பவர் கன்ஸ்ட்ரக்சன் பிரைவட் லிமிட்டட் | தேசிய அபிவிருத்தி வங்கி, இலங்கை வங்கி மற்றும் டீஎப்சீசீ வங்கி | 6,848.06 |
| தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் குழாய் நீர் வழங்கல் சேவை உள்ளடக்கத்தினை அதிகரிப்பதற்காக 22 நீர் வழங்கல் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல் | தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை | இலங்கை வங்கி | 3,499.00 |
| லக்கலை நீர் வழங்கல் கருத்திட்டம் | ஹொவாஎல், சீஎம்எல் - எம்டீட கூட்டு முயற்சி | ஹட்டன் நெசனல் வங்கி | 3,670.97 (ஏற்பாட்டுத் தொகையான 824.90 இனைக் கூட்டல்) |
| வில்கமுவை நீர் வழங்கல் கருத்திட்டம் | ஹொவாஎல், சீஎம்எல் - எம்டீட கூட்டு முயற்சி | ஹட்டன் நெசனல் வங்கி தேசிய அபிவிருத்தி வங்கி | 3,113.41 (எதிர்பாராத தொகையான 311.34 இல் 10 சதவீதத்தினைக் கூட்டல் விலை ஏற்றத் தாழ்வுத் தொகையான 155.67 இல 5 சதவீதத்தினைக் கூட்டல் |
| கொழும்பு நகர நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் - பொதி III –ஹோமாகமை, பாதுக்கை, மற்றும் சீதாவக பிரசே செயலாளர் பிரிவுகளின் விநியோக வலையமைப்புக்களுக்கான எச்டீபீ / டீஐ குழாய்களை வழங்கலும், பொருத்துதலும் | சியெரா கன்ஸ்ட்ரக்சன் பிரைவட் லிமிட்டட் | இலங்கை வங்கி | 8,716.97 (ஏற்பாட்டுத் தொகையான 460.75 இனைக் கூட்டல் எதிர்பாராத தொகையான 871.69 இல் 10 சதவீதத்தினைக் கூட்டல்) |
| ஊரகஸ்மங்ஹந்திய , கோனபினுவல, திக்கும்புர. வேலிகமை நீர் வழங்கல் கருத்திட்டம் | ஸ்க்யொர் மெக் என்ஜினியரிங் பிரைவட் லிமிட்டட் | இலங்கை வங்கி, மக்கள் வங்கி | 1,595.26 (எதிர்பாராத தொகையான 159.52 இல் 10 சதவீதத்தினைக் கூட்டல்) |
| கொழும்பு நகர நீர் வழங்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் - கட்டம் II | மாகா என்ஜினியரிங் லிமிட்டட் | இலங்கை வங்கி | 3,663.61 (ஏற்பாட்டுத் தொகையான 793.00 இனைக் கூட்டல் எதிர்பாராத தொகையான 366.36 இல் 10 சதவீதத்தினைக் கூட்டல்) |
| கலகெதரை/ மாவத்தகமை நீர் வழங்கல் கருத்திட்டம் | மாகா என்ஜினியரிங் லிமிட்டட் | டீஎப்சீசீ வங்கி | 2,564.12 (ஏற்பாட்டுத் தொகையான 220.58 இனைக் கூட்டல் எதிர்பாராத தொகையான 278.47 இனைக் கூட்டல் தீர்வை வரி 53.06 இனைக் கூட்டல் ) |
| கொஸ்கமை, அவிசாவளை ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் | இன்டர்நெஷனல் கன்ஸ்ட்ரக்சன் கொன்சோடியம் பிரைவட் லிமிட்ட | இலங்கை வங்கி | 1,062.39 (ஏற்பாட்டுத் தொகையான 213.80 இனைக் கூட்டல் எதிர்பாராத தொகையான 106.23 இல் 10 சதவீதத்தினைக் கூட்டல்) |
| மெதிரிகிரிய நீர் வழங்கல் கருத்திட்டம் | சுங்கென் கன்ஸ்ட்ரக்சன் பிரைவட் லிமிட்டட் | இலங்கை வங்கி | 1,363.66 ( 136.37 எதிர்பாராத தெகையான 136.37 இல் 10 சதவீதத்தினைக் கூட்டல்) |

இந்நீர் வழங்கல் கருத்திட்டங்களில் அநேகமானவைகள், சராசரி நிறையிடப்பட்ட முதன்மைக் கடன் விகித வட்டி வீதத்துடன் சேர்க்கப்பட்ட 22.5 சதவீத வருடாந்த வட்டி வீதத்தின் மீது, 14½ வருட முதிர்வு காலத்துடனும், 2½ வருட தயவுக் காலப்பிரிவுடனும், உள்ளூர் வங்கிகளினால் நிதி வழங்கப்படும். இக்கருத்திட்டங்களில் ஒரு சில இலகுவில் பாதிக்கப்படக்கூடிய தீராத சிறுநீரகநோய்களுக்கும் (CKD) உள்ளடக்கப்பட்டுள்ளன.

**உட்கட்டமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கான அரசுடமை தொழில்முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட உள்நாட்டுப் பெறுகைகள்**

(ரூபா பில்லியனி)

| அரசுடமை நிறுவனங்கள்/கருத்திட்டம் | வங்கி | 31.12.2015 இல் மொத்த அர்ப்பணிப்புக்கள் | 31.12.2014 இல் மொத்தப் பகிர்வுகள் |
|---|---|---|---|
| வீதி அபிவிருத்தி அதிகார சபை (RDA) – முன்னுரிமை பெற்ற வீதி அபிவிருத்திக் கருத்திட்டங்கள் | இலங்கை வங்கி | 36.70 | 29.80 |
| | மக்கள் வங்கி | 14.60 | 13.96 |
| | தேசிய சேமிப்பு வங்கி | 55.40 | 54.33 |
| | ஹட்டன் நெஷனல் வங்கி | 28.26 | 15.41 |
| | வர்த்தக வங்கி | 7.20 | 6.04 |
| | டீஎப்சீசீ | 1.30 | 1.04 |
| | தேசிய அபிவிருத்தி வங்கி | 8.35 | 5.98 |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை – கொழும்பு கட்டுநாயக்கா அதிவேகப்பாதைக் கருத்திட்டம் | மக்கள் வங்கி | ஐஅடொ 44.7 மில்லியன் | ஐஅடொ 43.56 மில்லியன் |
| வீதி அபிவிருத்தி அதிகார சபை – வெளிவட்ட அதிவேகப்பாதைக் கருத்திட்டம் ( நிர்மாணத்தின் மேற்பார்வைக்கு ஆலோசனை சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கான நிதியீடு) | இலங்கை வங்கி | 1.80 | ரூபா. 297.02 மில்லியன் |
| இலங்கைக் காணிச் சீர்திருத்த அபிவிருத்திக் கூட்டுத்தாபனம்- வெராஸ் கங்கை புயல் நீர் வடிகாலமைப்பு மற்றும் சுற்றாடல் கருத்திட்டம் | தேசிய சேமிப்பு வங்கி | 14.20 | 2.79 |
| தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை | தேசிய சேமிப்பு வங்கி, இலங்கை வங்கி, மக்கள் வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, தேசிய அபிவிருத்தி வங்கி, வர்த்தக வங்கி | 52.13 | 9.38 |
| வர்த்தக முகாமைத்துவத்திற்கான தேசிய பாடசாலை (NSBM)- ஹோமாகமையில் வரையறுக்கப்பட்ட வர்த்தக முகாமைத்துவ தேசிய பாடசாலையின் முன் மொழியப்பட்ட பலக்கைக்கழகக் கட்டடத்தின் நிர்மாணம் | இலங்கை வங்கி | 8.60 | ரூபா. 4.9 பில்லியன் |
| கொத்தலாவல பாதுகாப்புப் பல்கலைக்கழகம் (KDU) | தேசிய சேமிப்பு வங்கி | ஐஅடொ 201.6 மில்லியன் | ரூபா 3.16 பில்லியன் ஐஅடொ 104.43 மில்லியன் |
| வரையறுக்கப்பட்ட இலங்கை கப்பற் கூட்டுத்தாபனம் 02 கப்பல்களைக் கொள்வனவு செய்தல் (02 பெனாமெக்ஜ் பல்கர்ஸ்)- Panamax Bulkers) | மக்கள் வங்கி | ஐஅடொ 80.0 மில்லியன் | ஐஅடொ 51.81 மில்லியன் |
| உயர் கல்வி அமைச்சு – மொறட்டுவைப் பல்கலைக் கழகத்தின் தொழில்நுட்ப நிறுவனத்தை மீளமைத்தலும், அபிவிருத்தி செய்தலும் | வர்த்தக வங்கி, ஹட்டன் நெஷனல் வங்கி, | 10.30 | 3.71 |

## சர்வதேச சந்தைகளிலிருந்தான வெளிநாட்டு நாணயங்களுக்கான நியதிக் கடன் வசதிகள் உள்நாட்டுப் படுகடன்

2015 மே மாதத்தில், பொருளாதார அலுவல்கள் தொடர்பான அமைச்சரவை உப குழுவானது ஆரம்பத்தில் வெளிநாட்டு நாணய நியதிக் கடன் வசதியளிப்பினை அணுகுவதற்கான அங்கீகாரத்தினை வழங்கியிருந்தது. வெளியிடப்பட்டிருந்த பிரேரணைகளின் வேண்டுகோள்களுக்குக் கிடைக்கப் பெற்ற பதில்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு, பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதோடு, 2016 இன் 2 ஆம் அரைப் பகுதியில் பூர்த்தி செய்வதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

## மூலதனச் சந்தையைக் கண்காணித்தலும், இலங்கையின் அரச முறிகளை வழங்குவதற்கான வசதியளித்தலும்

இலங்கை 2007 ஆம் ஆண்டில் 5 வருட முதிர்வுக் காலப்பிரிவுடன் ஐஅடொ 500 மில்லியன் பெறுமதியான சர்வதேச நாணய முறியொன்றை 8.75 சதவீத வட்டிக்கு வழங்குவதன் மூலம் சர்வதேச கடன் மூலதனச் சந்தைக்குள் பிரவேசித்தது. பின்னர், முறையே 2009, 2010, 2011, மற்றும் 2012 ஆம் ஆண்டுகளிலும் இலங்கை சர்வதேச கடன் மூலதனச் சந்தையைப் பயன்படுத்தியது.

2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில், 2015 மே மாதத்தில் ஐஅடொ 650 மில்லியன் பெறுமதியான சர்வதேச அரச முறிகளும், 2015 அக்டோபர் மாதத்தில் ஐஅடொ 1,500 மில்லியன் பெறுமதியான சர்வதேச நாணய முறிகளும் வழங்கப்பட்டன. இந்நாணய முறிகள் முறையே 6.125 சதவீதத்திலும் மற்றும் 6.850 சதவீதத்திலும் 10 ஆண்டு முதிர்வு காலப்பிரிவுடன் விலை நிர்ணயிக்கப்பட்டன.

**இலங்கை சர்வதேச நாணய முறிகளின் வழங்கல்கள் தொடர்பான விபரங்கள்**

| பெயர் | வழங்கப்பட்ட திகதி | தரப்படுத்தல் (Moody's/S&P/Fitch) | பெறுமதித் தொகை ஐஅடொ மில்லியன் | கூப்பன் பெறுமதி (%) | முதிர்வுக் காலம் (வருடங்கள்) | முதிர்வுத் திகதி | 31.12. 2015 ஆம் திகதியில் விலை | 31.12.2015 (%) ஆம் திகதியில் விளைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| SL'12 | 17/10/2007 | --/B+/BB- | 500 | 8.250 | 5 | 17/10/12 | முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது | முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது |
| SL'15 | 22/01/2009 | --/B+/BB- | 500 | 7.400 | 6 | 22/01/15 | முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது * | முதிர்வு காலம் முடிவுற்று செலுத்தித் தீர்க்கப்பட்டது * |
| SL'19 | 06/01/2014 | B1/B+/BB- | 1,000 | 6.000 | 5 | 14/01/19 | 98.07 | 6.712 |
| SL'19 | 07/04/2014 | B1/B+/BB- | 500 | 5.125 | 5 | 07/04/19 | 95.25 | 6.758 |
| SL'20 | 30/10/2010 | B1/B+/BB- | 1,000 | 6.250 | 10 | 30/10/20 | 96.76 | 7.059 |
| SL'21 | 27/07/2011 | B1/B+/BB- | 1,000 | 6.250 | 10 | 27/07/21 | 95.29 | 7.291 |
| SL'22 | 25/07/2012 | B1/B+/BB- | 1,000 | 5.875 | 10 | 25/07/22 | 91.31 | 7.577 |
| SL'25 | 28/05/2015 | B1/B+/BB- | 650 | 6.125 | 10 | 28/05/25 | 88.98 | 7.797 |
| SL'25 | 27/10/2015 | B1/B+/BB- | 1,500 | 6.850 | 10 | 27/10/25 | - | - |

**மூலம்:** பாக்லேஸ் வங்கி, எச்எஸ்பீசீ, சிட்டி வங்கி (Joint Lead Managers for the Issuances)

*2015 ஜனவரி மாதத்தில் முதிர்வு காலம் முடிந்து செலுத்தித் தீர்க்கப்பட்டது

**இலங்கை சர்வதேச நாணய முறிகளின் வழங்கலின் விபரங்கள்**

| பெயர் | வழங்கப்பட்ட திகதி | தரப்படுத்தல்* | பெறுமதித் தொகை ஐஅடொ மில்லியன் | கூப்பன் பெறுமதி (%) | முதிர்வுக் காலம் (வருடங்கள்) | முதிர்வுத் திகதி | 31.12. 2015 ஆம் திகதியில் விலை | 31.12.2015 (%) ஆம் திகதியில் விளைவு |
|---|---|---|---|---|---|---|---|---|
| இலங்கை வங்கி'17 | 03/05/2012 | --/--/BB- | 500 | 6.875 | 05 | 03/05/17 | 100.63 | 6.373 |
| இலங்கை வங்கி'18 | 16/04/2013 | --/--/BB- | 500 | 5.325 | 05 | 16/04/18 | 96.88 | 6.811 |
| தேசிய சேமிப்பு வங்கி'18 | 18/09/2013 | --/B+/BB- | 750 | 8.875 | 05 | 18/09/18 | 102.25 | 7.930 |
| டீஎப்சீசீ'18 | 31/10/2013 | --/B/B+ | 100 | 9.625 | 05 | 31/10/18 | பொருத்தமற்றது | பொருத்தமற்றது |
| தேசிய சேமிப்பு வங்கி''19 | 10/09/2014 | --/B+/BB- | 250 | 5.150 | 05 | 10/09/19 | 92.50 | 7.507 |
| விமான சேவைகள் | 23/06/2014 | --/B+/BB- | 175 | 5.300 | 05 | 23/06/19 | 93.50 | 7.445 |

**மூலம்:** பாக்லேஸ் வங்கி,

# உலக வங்கி, சர்வதேச நாணய நிதியப் பிரிவு

## உலக வங்கிக் குழுவுடனான அபிவிருத்திப் பங்கேற்பு

நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு ஆதரவளிப்பதற்காக வெளிநாட்டு வளங்களைத் திரட்டுவதில் இலங்கை அரசாங்கம் உலக வங்கியுடன் நீண்ட பங்கேற்பினை மேற்கொண்டு வந்துள்ளது. நாட்டின் உதவி உபாயம் எனப்படும் தொழில் ஏற்பாட்டின் கீழ் உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு மற்றும் புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் ஊடாக இவ்வவுதவிகள் செலுத்தப்படுகின்றன. தற்போதைய உதவி உபாயம் 2013 - 2016 ஆம் ஆண்டு காலப்பிரிவில் அமுலில் இருந்து வந்துள்ளது.

புனர் நிர்மாணம் மற்றும் அபிவிருத்திக்கான சர்வதேச வங்கியின் நிதியீடுகள் சலுகை அடிப்படையிலானதும், சலுகை அடிப்படையிலல்லாத இறுக்கமானதுமான நியதிகளுடன் கலக்கப்பட்டவையாக இருந்தாலும் கூட, 2015 ஆம் ஆண்டில் அரசாங்கம் சலுகை அடிப்படையிலான நிதி நியதிகளின் கீழோ அல்லது நன்கொடைகளாகவோ உலக வங்கியின் நிதியிட்டினைப் பயன்படுத்துவதற்கான சகல முயற்சிகளையும் எடுத்துள்ளது. தற்போதைய நாட்டின் உதவி உபாயத்தின் கீழான செயற்பாட்டில் உள்ள கடன் தொகுதி ஐ.அ.டொ 1819.5 மில்லியன்களாகும்.

**2015 இல் உலக வங்கியின் செயற்பாட்டில் உள்ள கடன் தொகுதி**
**(ஐஅடொ மில்லியன்)**

| நிகழ்ச்சித் திட்டம் / கருத்திட்டம் | தொகை |
|---|---|
| திறன்கள் அபிவிருத்தி | 101.5 |
| அணை பாதுகாப்பும், நீர் வளங்களின் திட்டமிடல் | 65.3 |
| உபாய ரீதியான நகரங்களின் அபிவிருத்திக் கருத்திட்டம் | 147.0 |
| அவசர காலநிலை அனர்த்தத்திற்கான விஷேட கடன் நிகழ்ச்சித் திட்டம் | 102.0 |
| காலநிலை மாற்றத்தினால் ஏற்படும் பாதிப்புக்களைக் குறைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டம் | 110.0 |
| அனர்த்த இடர் முகாமைத்துவக் கருத்திட்டம் | 0.4 |
| கல்வித்துறை அபிவிருத்தி வேலைச்சட்டக நிகழ்ச்சித் திட்டம் | 128.3 |
| வட கிழக்கு உள்ளுராட்சி மன்ற சேவைகளை விருத்தி செய்வதற்கான கருத்திட்டம் | 70.8 |
| இரண்டாம் சுகாதாரத் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 196.0 |
| கொழும்பு பெரு நகர் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் | 213.9 |
| ஜீபீஓபீஓ - துப்புரவாக்கலுக்கான இலங்கையின் அடைவுக் கருத்திட்டம் | 5.1 |
| இருபத்தி ஓராம் நூற்றாண்டிற்கான உயர் கல்விக் கருத்திட்டம் | 40.0 |
| மாகாண வீதிகளின் கருத்திட்டம் | 105.0 |
| சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகளின் அபிவிருத்தி வசதியளிப்புக் கருத்திட்டம் | 57.4 |
| களஞ்சியங்களுக்கான உறுதிச் சீட்டு நிதியீட்டுக் கருத்திட்டம் | 6.9 |
| இரண்டாம் மேலதிக நிதியீடு – வீதித்துறை உதவிக் கருத்திட்டம் | 100.0 |
| திரி சவிய | 2.5 |
| பாடசாலைக் கல்வி முறைமையை மாற்றியமைத்தல் - நன்கொடை | 28.0 |
| அணை பாதுகாப்பும், நீர் வளங்களின் திட்டமிடல் - மேலதிக நிதியீடு | 83.0 |
| வட கிழக்கு உள்நாட்டுச் சேவை மேம்பாட்டுக் கருத்திட்டம் - நன்கொடை | 20.5 |
| கொழும்பு பெருநகர் நகர அபிவிருத்திக் கருத்திட்டம் - நன்கொடை | 0.9 |

| நிகழ்ச்சித் திட்டம் /கருத்திட்டம் | தொகை |
|---|---|
| முன் குழந்தைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம் | 50.0 |
| நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் மேம்பாட்டுக் கருத்திட்டம் | 165.0 |
| வட கிழக்கு உள்ளூர் சேவை மேம்பாட்டுக் கருத்திட்டம் - மேலதிக நிதியீடு | 20.0 |
| மொத்தத் தொகை | **1,819.5** |

## அர்ப்பணிப்புக்கள்

இலங்கை அரசாங்கம் 2015 ஆம் ஆண்டில் ஐஅடொ 235 மில்லியன்களைக் கடன்களாகவும், நன்கொடைகளாகவும் உலக வங்கியிடமிருந்து திரட்டியுள்ளது. ஆயினும், இவ்வர்ப்பணிப்புக்கள் தெரிவு செய்யப்பட்ட 7 மாவட்டங்களில் குழாய் நீர் சேவைகளை அதிகரிப்பதற்கும், துப்புரவாக்கலை விருத்தி செய்வதற்கும் ஐஅடொ 165 மில்லியன்களை செலுத்துவதன் மூலம் மொத்த நீர்த்துறைக்கான பிரதான அபிவிருத்திப் பங்காளராக நிலை நிறுத்தியுள்ளது. இவ்வாறான துறைகளில் அதிக அளவிலான முதலீடுகளின் மூலம் பிரதிபலிப்பது என்னவென்றால், நீர் மற்றும் ஆரம்பக் குழந்தைப் பருவ அபிவிருத்தி போன்ற நன்மையைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக காலத்தை எடுக்கும் முதலீட்டுத் துறைகளுக்கு உலக வங்கி போன்ற சலுகை அடிப்படையிலான நிதி மூலங்களின் மூலம் கடனைப் பெற்றுக் கொள்வதே அரசாங்கத்தின் நோக்கமாகும் என்பதாகும்.


**2015 இல் உலக வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட நிதி உடன்படிக்கைகள**

| கருத்திட்டம் | கடன் / நன்கொடை தொகை ஐ.அ.டொ மில்லியன் | நோக்கங்கள் |
|---|---|---|
| நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் விருத்திக் கருத்திட்டம் | 165.0 | நீர் வழங்கல் துப்புரவாக்கல் மேம்பாட்டுக் கருத்திட்டமானது உலக வங்கியின் நிதியீட்டின் கீழ் தெரிவு செய்யப்பட்ட 7 மாவட்டங்களில் குழாய் நீர் சேவைகளையும் மேம்படுத்தப்பட்ட துப்புரவாக்கலையும் அதிகரிப்பதற்கும், தேசிய சமூக நீர் வழங்கல் திணைக்களத்தின் இயலளவைப் பலப்படுத்துவதற்கும் நடைமுறைப்படுத்தப்படுகின்றது. தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களாக முல்லைத்தீவு, கிளிநொச்சி, நுவரெலியா, பதுளை, கேகாலை, மொனராகலை, மற்றும் இரத்தினபுரி ஆகிய மாவட்டங்கள் விளங்குகின்றன. |
| முன் குழந்தைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம் | 50.0 | 0 – 5 வயதுக்கிடைப்பட்ட சிறுவர்களின் சுகாதாரத் தரம், துப்புரவாக்கல் மற்றும் போசாக்கு ஆகியனவற்றை விருத்தி செய்வதன் மூலம் அவர்களுக்கு பாதுகாப்பான சுற்றாடலை உறுதிப்படுத்தல். |
| வட கிழக்கு உள்ளூர் சேவைகளின் மேம்பாட்டுக் கருத்திட்டம் - மேலதிக நன்கொடை நிதி | 20.0 | இது வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள உள்ளூராட்சி மன்றங்களின் சேவைகளையும் மற்றும் உள்ளூர் உட்கட்டமைப்புக்களையும் பதிலளிக்கக் கூடிய முறையில் ஆதரவளிப்பதற்காக நடைமுறைப்படுத்தப்பட்டு வரும் நடைமுறையிலுள்ள ஒரு கருத்திட்டமாகும். நடைமுறையிலுள்ள இக்கருத்திட்டம் 65 பிரதேச சபைகளையும், 12 நகர சபைகளையும், 3 மாநகர சபைகளையும் உள்ளடக்குகின்றது. மேலதிக நிதியீடானது அரசாங்கத்தின் மூல எதிரணி நிதியீட்டின் ( ஐஅடொ 34 மில்லியனில் ஐஅடொ 20 மில்லியன்) பற்றாக்குறைக்கு நிதி வழங்குவதற்குப் பயன்படுத்தப்படும். |

## 2015 இல் பகிர்வுகள்

2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் இலங்கையினால் உலக வங்கியிடமிருந்து ஐ.அ.டொ 155 மில்லியன் தொகையினை பகிரக் கூடியதாக இருந்தது. அத்தொகையில் உயர்வான பகிர்வானது சுகாதாரத் துறைக்கு அறிக்கையிடப்பட்டிருந்தது.

**2015 இல் பகிர்வின் துறை வாரியான விநியோகம்**




## முன் நோக்கிய வழி

- துறைகளின் சீர்திருத்தங்களுக்கு இலக்காகக் கொள்ளப்படவுள்ள அபிவிருத்திக் கொள்கைக் கடன்களைப் (DPL) பெற்றுக் கொள்வதற்கான கலந்துரையாடல்களை அரசாங்கத்தினால் ஆரம்பிக்கக் கூடியதாக இருந்தது. இது தொடர்பான கலந்துரையாடல்களின் தொடர்களும், ஆலோசனைகளும் தொடர்புடைய பங்காளர்களுடன் மேற்கொள்ளப்பட்டன.
- முறையான நாட்டின் கண்டறிதல் (SCD) – உலக வங்கியானது இலங்கைக்கான முறையான நாட்டின் கண்டறிதலைத் (SCD) தயாரிப்பதற்கு தொடர்புடைய அமைச்சுக்கள் மற்றும் ஏனைய குறிப்பிட்ட பங்கேற்பாளர்களையும் கலந்தாலோசிப்பதன் மூலம் முறையான நாட்டின் கண்டறிதலை (SCD) நடாத்தியது. புதிய நாட்டு பங்கேற்பு உபாயம் (2017 – 2020 ) முறையான நாட்டின் கண்டறிதலின் (SCD) கண்டுபிடிப்புக்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும்.
- இலங்கை அரசாங்கம் 2016 இல் நடைமுறைக்குக் கொண்டுவரப்படவுள்ள பின்வரும் விரிவான கலந்துரையாடல்களை நடாத்தியது.
  - சூழல் அமைப்புக்கள் பாதுகாப்பு மற்றும் முகாமைத்துவக் கருத்திட்டம் - ஐஅடொ 45 மில்லியன்
  - உபாய ரீதியான நகரங்களின் அபிவிருத்திக் கருத்திட்டத்திற்கான மேலதிக நிதியீடு (யாழ்ப்பாண மாவட்டம் வரை மூல நோக்கத்தினை விரிவடையச் செய்தல் ) – ஐஅடொ 55 மில்லியன்
  - விவசாயத் துறை நவீனமயமாக்கல் கருத்திட்டம் - ஐஅடொ 125 மில்லியன்
  - நிதித்துறை மதிப்பீட்டுக் கருத்திட்டம் - ஐஅடொ 100 மில்லியன்
  - போக்குவரத்து இணைப்புக் மற்றும் சொத்து முகாமைத்துவக் கருத்திட்டம் - ஐஅடொ 125 மில்லியன்
  - சமூக பாதுகாப்பு வலையகள் கருத்திட்டம்- ஐஅடொ 75 மில்லியன்

# சீனாப் பிரிவு


சீனாவானது, நன்கொடை மற்றும் கடன் ஆகிய வடிவங்களில் நிதி உதவியினை வழங்கும் பிரதான அபிவிருத்திப் பங்காளர்களுள் ஒருவராக விளங்குகின்றது. சீன அரசாங்கத்தினால் நன்கொடைகளும், வட்டியில்லாக் கடன்களும் வழங்கப்படும் அதே வேளை, கடன்களைச் சீன ஏற்றுமதி இறக்குமதி வங்கி, சீன அபிவிருத்தி வங்கி, மற்றும் சீனக் கைத்தொழில் வர்த்தக வங்கி ஆகியன வழங்குகின்றன.

2011–2015 ஆம் ஆண்டு வரையிலான கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் சீனாவினால் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்கள் ஐஅடொ 4,977 மில்லியன்களாகும். கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் மேற்கொள்ளப்பட்ட மொத்த அர்ப்பணிப்புக்களில் உயர் நிலையிலான அர்ப்பணிப்புக்கள் அதாவது ஐஅடொ 2,612 மில்லியன்கள் 2014 ஆம் ஆண்டில் அறிக்கையிடப்பட்டதோடு, அதனைத் தொடர்ந்து முறையே 2012 ஆம் ஆண்டில் ஐஅடொ 1,056 மில்லியன்களையும், மற்றும் 2010 ஆம் ஆண்டில் ஐஅடொ 829 மில்லியன்களையும் அறிக்கையிட்டது.

2014 இல் வெளிவட்ட அதிவேகப்பாதைக் கருத்திட்டம் கட்டம் III இன் நிர்மாணம், தெற்கு அதி வேகப் பாதைக் கருத்திட்டத்தின் நீடிப்பு (பகுதி 1,4) மற்றும் அம்பாந்தோட்டை கேந்திர அபிவிருத்திக் கருத்திட்டம் ஆகியனவற்றின் நிர்மாணத்திற்காக சீன எக்சிம் வங்கி அர்ப்பணித்துள்ள அதே வேளை, சீன அபிவிருத்தி வங்கி முன்னுரிமை வீதிக் கருத்திட்டம் III இற்கும் (கட்டம் 1,2) அர்ப்பணித்துள்ளது. (கட்டம் I & II) கருத்திட்டம்.

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில் சீனாவினால் நிதி உதவி வழங்கப்பட்ட அபிவிருத்திக் கருத்திட்டங்களிலிருந்து அறிக்கையிடப்பட்ட மொத்தப் பகிர்வுகள் ஐஅடொ 3,370 மில்லியன்களாகும். 2015 சீனா எக்சிம் வங்கியும் சீன அபிவிருத்தி வங்கி இரண்டும் இணைந்து மொத்தப் பகிர்வு ஐஅடொ 488 மில்லியன்களுடன் இலங்கைக்கான உயர் நிலையிலான பகிர்வினை பதிவு செய்திருந்தன.

## 2011 - 2015 வரையிலான காலப்பிரிவில் அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்





*அரசுடமை தொழில்முயற்சிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களின் பகிர்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

# துறை வாரியான விநியோகம்

கடந்த ஐந்து வருட காலப்பிரிவில், சீன உதவியானது பிரதானமாக வீதிகளும் பாலங்களும், சக்தியும் வலுவும், துறைமுகங்களும், கப்பற் போக்குவரத்துத் துறையும் மற்றும் விமானப் போக்குவரத்துத் துறைகளின் அபிவிருத்திக்கே பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளது.

**துறைவாரியான விநியோகத்தின் பகிர்வுகள் – 2015**




* அரசுடமை தொழில்முயற்சிகளிடமிருந்து பெற்றுக் கொண்ட கடன்களின் பகிர்வுகளும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

உயர்ந்த அளவிலான பங்கானது வீதிகள் மற்றும் பாலங்கள் துறைகளுக்கு உரித்தானதாக இருந்ததோடு, ஐ.அ.டொ 109 மில்லியன்கள் பாரிய அளவிலான பகிர்வுத் தொகை முன்னுரிமை வீதிக் கருத்திட்டம் 3 – கட்டம் I அறிக்கையிட்டுள்ளது.

**2015 இல் பின்வரும் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டன.**

- புத்தளம் அனல் மின் கருத்திட்டம் - கட்டம் II
- அம்பாந்தோட்டை துறைமுக அபிவிருத்திக் கருத்திட்டம் - குறை நிரப்பு வேலைகள்
- வடக்கிலுள்ள வீதிகளின் புனர் நிர்மாணக் கருத்திட்டமும், 113 கி மீ நீளமான புத்தளம் - மரிச்சிகடை- மன்னார் வீதியின் புனர் நிர்மாணமும், மேம்பாடும்.
- வடக்கிலுள்ள வீதிகளின் புனர் நிர்மாணக் கருத்திட்டமும், 67 கி மீ நீளமான நாவற்குழி – காரைத்தீவு- மன்னார் வீதியின் புனர் நிர்மாணமும், மேம்பாடும் ( ஏ032)

கருத்திட்டங்களின் செயலாற்றுகைகளுக்கு மேலதிகமாக, கூட்டுக் குழுவின் கீழ் தொழிற்படும் பொருளாதார ஒருங்கிணைப்பு தொடர்பான தொழிற்குழுவானது 2016 ஜனவரி மாதம் 06 ஆம் திகதி இடம் பெற்றது. இக்கூட்டமானது, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் ஆர் எம் பீ ரத்னாயக்கா அவர்களினதும் சீன அரசாங்கத்தின் வர்த்தக் அமைச்சின் ஆசிய அலுவல்கள் திணைக்களத்தின் வர்த்தக ஆலோசனையாளர் திரு. யுங் வெய்குன் அவர்களினாலும் இணைத் தலைமை வகிக்கப்பட்டது.

இக்கூட்டுக் குழுவின் நோக்கம், இரு நாடுகளுக்குமிடையிலான நட்புறவுகளை மேலும் பலப்படுத்தலும், அபிவிருத்தி செய்தலும், பொருளாதார மற்றும் வர்த்தக ஒருங்கிணைப்பினை ஊக்குவித்தலுமாகும். இதுவானது இரு நாடுகளுக்குமிடையிலான பொருளாதார மற்றும் வர்த்தக உறவுகள் தொடர்பான பல்வேறு பிரச்சினைகளையும், மற்றும் தடைகளையும் தீர்ப்பதற்கான உற்பத்தித் திறன் வாய்ந்த ஒரு தளமாக இருந்துள்ளது.

"பொருளாதார ஒருங்கிணைப்பு" மற்றும் "வர்த்தக ஒருங்கிணைப்பு" பரப்புகள் தொடர்பான பிரேரணைகளையும், பரிந்துரைகளையும் சமர்ப்பிப்பதற்கான கூட்டுக் குழுவின் கீழ் இரண்டு தொழில்நுட்ப தொழில் குழுக்கள் தொழில்பட்டு வருகின்றன. பொருளாதார ஒருங்கிணைப்பு தொழிற்குழுவானது முதலீட்டு ஊக்குவிப்பு, உட்கட்டமைப்பு அபிவிருத்தி, மற்றும் சீன உதவி ஆகியனவற்றை மையமாகக் கொண்டிருக்கும் அதே வேளை, வர்த்தக ஒருங்கிணைப்பு தொடர்பான தொழிற்குழு வர்த்தக ஊக்குவிப்பு மற்றும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கை தொடர்பாக தொழிற்படவுள்ளது. இலங்கை அரசாங்கம், 2016 ஆம் ஆண்டின் நடுப்பகுதியில் கூட்டுக் குழுக்கான 7 ஆம் தொடரை நடாத்தவுள்ளது. கூட்டுக் குழுவிற்கான இலங்கை தூதுவர் குழுவை தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் கௌரவ இராஜாங்க அமைச்சர் தலைமை தாங்கவுள்ளார்.

சீன அரசாங்கம் இலங்கை அரசாங்கத்தினை மூல அங்கத்தவராக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியில் இணைந்து கொள்ளுமாறு உத்தியோகபூர்வ அழைப்பொன்றை விடுத்துள்ளது. சீன அரசாங்கத்தின் நிதி அமைச்சினால் விடுக்கப்பட்ட அழைப்பினை இலங்கையின் நிதித் திட்டமிடல் அமைச்சு ஏற்றுக் கொண்டதோடு, ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஸ்தாபிப்பு தொடர்பான பல்தரப்பு ஆலோசனைக் கூட்டங்களில் பங்கேற்றது.

ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியின் ஸ்தாபிப்பானது, ஆசியாவின் உள் மற்றும் வெளிப் பிரதேசங்களிலிருந்து அதிகளவில் தேவைப்படும் மேலதிக வளங்களை திரட்டுவதற்கும், ஆசியாவின் தனிப்பட்ட பொருளாதாரங்களினால் முகங்கொடுக்கப்படும் நிதித் தடைகளை நீக்குவதற்கும், மற்றும் ஆசியாவில் நிலையான உறுதியான வளர்ச்சியொன்றை ஊக்குவிப்பதற்கு நடைமுறையிலுள்ள பல்தரப்பு வங்கிகளுடன் ஒருங்கிணையவும் உதவும்.

அமைச்சரவையினால் வழங்கப்பட்ட அங்கீகாரத்தினை அடிப்படையாகக் கொண்டு இலங்கை அரசாங்கம், மூல அங்கத்தவராக ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியுடன் இணைந்து கொள்வதற்கு 22 நாடுகளுடன் புரிந்துணர்வு ஒப்பந்தங்களை மேற்கொண்டுள்ளது.

உடன்படிக்கையின் ஒழுங்கு விதிகளைக் கைச்சாத்திடுவதற்கான உத்தியோகபூர்வ நிகழ்வானது சீனாவின் பீஜிங்கில் 2015 ஜூன் மாதம் 29 ஆம் திகதி இடம் பெற்றதோடு, இலங்கை அரசாங்கம் சார்பாக கௌரவ நிதி அமைச்சர் இப்புரிந்துணர்வு ஒப்பந்தங்களில் கைச்சாத்திட்டார். ஆசிய உட்கட்டமைப்பு முதலீட்டு வங்கியானது, செயற்பட்டுள்ளதோடு, உள்வாரியான அங்கீகாரங்கள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# மத்திய கிழக்கும் தென்னாசியப் பிரிவும்


## மத்திய கிழக்கு

மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்கேற்பாளர்கள் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் குறிப்பிடத்தக்க பங்கைச் செலுத்தியுள்ளன. 1970களின் நடுப்பகுதியிலிருந்து நாட்டின் அபிவிருத்தி முன்னுரிமைகளை மையமாகக் கொண்டு மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்கேற்பாளர்கள் மூலம் ஐ.அ.டொ 1,177 மில்லியன் வழங்கப்பட்டுள்ளது.


அபிவிருத்திக்கான சவூதி நிதி, அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதி, ஈரானிய ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி போன்ற மத்திய கிழக்குப் பிராந்தியத்தின் அபிவிருத்திப் பங்காளர்கள் சலுகை அடிப்படையிலான கடன்கள் மற்றும் ஏற்றுமதிக் கடன்களின் ஊடாக மத்திய கிழக்கின் கடன் தொகுதியை அதிகரித்துள்ள அதே வேளை, பஹ்ரைன் அரசாங்கம், கஸகஸ்தான் அரசாங்கம், ஓமான் அரசாங்கம் ஆகியன இலங்கை அரசாங்கத்திற்கு நன்கொடைகளை வழங்கியுள்ளது. மத்திய கிழக்குப் பிராந்தியத்துடனான இரு தரப்பு உறவினை விரிவடையச் செய்யும் நோக்குடன் இஸ்ரேல் மற்றும் அபுதாபி ஆகிய நாடுகளுடன் பூர்வாங்க பேச்சுவார்த்தைகளை மேற்கொண்டுள்ளது.

மத்திய கிழக்கு நாடுகளிலிருந்தான கடன் பெறுகைகளின் பிரதான பங்கு நீர்ப்பாசனம், வீதிகளும், பாலங்களும், சக்தியும். வலுவும், மற்றும் சுகாதாரத் துறைகளில் முதலிடப்பட்டுள்ளன. சவுகை அடிப்படையிலான, நிரந்தர நிதி நியதிகளும், நீண்ட முதிர்வும் மற்றும் மத்திய கிழக்கிலுள்ள அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுகை வழிகாட்டல்கள் போன்ற நிதியீட்ட வசதியளிப்புக்களின் நெகிழ்வான நிபந்தனைகள் நாட்டிற்கு அதிகளவில் நன்மைகளை பெற்றுக் கொடுக்கக் கூடியனவாகவுள்ளன.

**மத்திய கிழக்கின் கடன் தொகுதியின் அர்ப்பணிப்புக்கள் - 2007 -2015 (ஐஅடொ மில்லியன்)**



## அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்





பின்வரும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக அபிவிருத்திக்கான சவுதி நிதியத்துடனும், மற்றும் சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியுடனும், 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் நான்கு கடன் உடன்படிக்கைகள் முடிவுறுத்தப்பட்டு கைச்சாத்திடப்பட்டன. கடந்த ஆண்டுகளுடன் ஒப்பிடுகையில், மத்திய கிழக்கு நாடுகளின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான அர்ப்பணிப்புக்கள் குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. இவ்வர்ப்பணிப்புக்களில் அநேகமானவை வீதிகள் மற்றும் பாலங்கள் துறையின் அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ளன.

**2015 இல் அர்ப்பணிக்கப்பட்ட கடன் வசதியளிப்புக்கள் (ஐஅடொ மில்லியன்)**

| | | தொகை |
|---|---|---|
| **அபிவிருத்திக்கான சவுதி நிதியம்** | | |
| - | பேராதனை – பதுளை – செங்கலடி வீதிகளை தரமுயர்த்துவதற்கான கருத்திட்டம் | 60.0 |
| - | காக்கை வி வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களின் கருத்திட்டம் (மேலதிகக் கடன்) | 12.0 |
| **சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்** | | |
| - | பதுளையிலிருந்து செங்கலடி வரையிலான ஏ5 வீதி நடைபாதையின் புனர்நிர்மாணம் | 60.0 |
| - | மேல் மாகாண நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக் கருத்திட்டம் | 17.0 |

**துறை வாரியான அர்ப்பணிப்புக்கள்**




மேலே குறிப்பிடப்பட்டுள்ள உடன்படிக்கைகளுக்கு மேலதிகமாக, அராபிய பொருளததார அபிவிருத்திக்கான குவைட் நிதியமானது, கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத்தொகுதியின் நிர்மாணத்திற்காக ஐஅடொ 34 மில்லியன்களை வழங்ககுவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் பேச்சு வார்த்தைகளும் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

# 2015 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கருத்திட்டங்கள்

**மத்திய கிழக்குக் கடன் தொகுதி**

(ஐஅடொ மில்லியன்)

| | | கடன் தொகை |
|---|---|---|
| **அபிவிருத்திக்கான சவூதி நிதியம்** | | |
| - | காக்கை வலி வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களின் கருத்திட்டம் | 20.0 |
| - | களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | 46.0 |
| - | வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 60.0 |
| - | தட்டுத்துறை பாலத்தின் நிர்மாணம் | 0.6 |
| **அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம்** | | |
| - | தென் கிழக்குப் பல்கலைக்கழகக் கருத்திட்டம் (கட்டம் B-1) | 10.5 |
| - | களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | 37.0 |
| - | 25 பாலங்களின் புனர் நிர்மாணம் | 35.0 |
| **சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதியம்** | | |
| - | களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் | 16.0 |
| - | தேசிய நெடுஞ்சாலைகள் துறை அபிவிருத்திக் கருத்திட்டம் | 8.0 |
| - | வீதி வலையமைப்பு அபிவிருத்திக் கருத்திட்டம் | 40.0 |
| - | கொழும்பு தேசிய நெடுஞ்சாலைகள் அபிவிருத்திக் கருத்திட்டம் | 50.0 |
| **ஈரானிய ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி** | | |
| - | உமா ஓயா பல நோக்கு அபிவிருத்திக் கருத்திட்டம்* | 450.0 |
| - | கிராமிய மின்மயமாக்கல் கருத்திட்டம் 8** | 83.4 |


**குறிப்பு:**

* ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஈரான் மீது தடை விதித்ததன் காரணமாக இக்கருத்திட்டத்துக்கான வெளிநாட்டு நிதியீட்டினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளது. எனவே, ஈரான் மீதான தடையை நீக்கும் வரை இலங்கை அரசாங்கம் தற்காலிக ஏற்பாடொன்றாக உள்நாட்டு நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் கருத்திட்டத்தினை தொடர்கின்றது. .

** இக்கருத்திட்டத்துக்கு வெளிநாட்டு நிதியைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளதன் காரணமாக உள்நாட்டு நிதியைப் பயன்படுத்துவதன் மூலம் இக்கருத்திட்டமானது இலங்கை மின்சார சபையினால் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது.

குறிப்பிட்ட ஆண்டில், மத்திய கிழக்கின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான மொத்தப் பகிர்வானது ஐஅடொ 40.7 மில்லியன்களாக இருந்தது. அத்தொகையில் 55 சதவீதமானது, வீதிகளும், பாலங்களும் துறைக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**துறை வாரியான பகிர்வுகள் - 2015**



## 2015 இல் பூர்த்தி செய்யப்பட்ட கருத்திட்டங்கள்

2015 இல் பின்வரும் கருத்திட்டங்கள் பூர்த்தி செய்யப்பட்டுள்ளன.

| கருத்திட்டம் | நிறுவனம் | தொகை ஐஅடொ மில்லியன் |
|---|---|---|
| **கடன்கள்** | | |
| - மூன்றாந்தரக் கல்வியைப் பலப்படுத்தலும், சுனாமியினால் பாதிக்கப்பட்ட பிரதேசங்களில் நிர்வாக உட்கட்டமைப்பு | அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம் | 20.5 |
| - பாலங்களின் புனர் நிர்மாண மற்றும் புனருத்தாரணக் கருத்திட்டம் | அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம் | 17.0 |
| - கிராமிய மின்மயமாக்கல் கருத்தமிட்டம் 8* | ஈரானிய ஏற்றுமதி அபிவிருத்தி வங்கி | 83.4 |
| **நன்கொடைகள்** | | |
| - உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கான பஹ்ரைன் வீடமைப்புக் கருத்திட்டம் | பஹ்ரைன் அரசாங்கம் | 1.1 |
| - அனர்த்த நெகிழ்வு வீடமைப்புக் கருத்திட்டம் | ஓமான் அரசாங்கம் | 1.0 |
| - கஸகஸ்தான் நிதியுடனான வீடமைப்புக் கருத்திட்டம் | கஸகஸ்தான் அரசாங்கம் | 0.2 |

**குறிப்பு:**

* * ஐக்கிய அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் ஈரான் மீது பொருளாதாரத் தடை விதித்ததன் காரணமாக வெளிநாட்டு நிதியீட்டினை பெற்றுக் கொள்ள முடியாத நிலையிலுள்ளது. எனவே, இக்கருத்திட்டத்துக்கு வெளிநாட்டு நிதியீட்டினை பெற்றுக் கொள்ள முடியாததனால், இலங்கை மின்சார சபையினால், உள்நாட்டு நிதியினைப் பயன்படுத்துவதன் மூலம் இக்கருத்திட்டம் பபூர்த்தி செய்யப்பட்டது.

## முன் நோக்கிய வழி

பின்வரும் கருத்திட்டங்கள் மத்திய கிழக்கின் அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்தான நிதியீட்டத்திற்காக இனங்காணப்பட்டுள்ளதோடு, 2016 இல் நிதி உடன்படிக்கைகளை பூர்த்தி செய்வதற்கும் எதிர்பார்க்கப்படுகின்றது. அபிவிருத்திக்கான சவூதி நிதியமானது அதனிடம் சமர்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளை முன் ஆய்வு செய்வதற்கான முன் ஆய்வுத் தூதுவர் குழு விஜயம் செய்ததோடு, அபிவிருத்திக்கான அபுதாபி நிதியத்துடன் உறவுகளை மீண்டும் அழைப்பதற்கான ஆரம்பக் கலந்துரையாடல்கள் இடம் பெற்று வருகின்றன.

**மத்திய கிழக்கு அபிவிருத்திப் பங்காளர்களுடன் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள் (*ஐஅடொ மில்லியன்*)**

| | |
|---|---|
| **அபிவிருத்திக்கான சவூதி நிதியம்** | |
| - வயம்ப பல்கலைக்கழக நகரமயமாக்கல் கருத்திட்டம் | 20.0 |
| - மகாவலி இடது கரை அபிவிருத்திக் கருத்திட்டம் | 60.0 |
| - குருநாகலை மற்றும் கம்பஹா மாவட்டங்களில் ஏற்றுமதி விவசாய மற்றும் பாற்பண்ணைத் துறை விருத்தியின் ஊடாக ஒன்றிணைக்கப்பட்ட கிராமிய அபிவிருத்தி | 25.0 |
| **அராபிய பொருளாதார அபிவிருத்திக்கான குவைட் நிதியம்** | |
| - கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சுகாதாரப் பராமரிப்பு விஞ்ஞான பீடத்திற்கான கட்டடத் தொகுதி | 34.0 |
| - களுகங்கை அபிவிருத்திக் கருத்திட்டம் (மேலதிக நிதியீடு) | 26.0 |
| **அபிவிருத்திக்கான அபுதாபி நிதியம்** | |
| தேசிய இ- கற்கைத் தளத்தினை (பொ.அஒநிதியத்துடன் கொரி ஏற்றுமதி இறக்குமதி வங்கி) ஸ்தாபித்தல் | 25.0 |

# தென்னாசியா நாடுகள்

## இந்தியா

இந்திய அரசாங்கம் நாற்பது ஆண்டுகளுக்கும் மேலாக தென்னாசியப் பிராந்தியத்தில் இலங்கையின் பிரதான அபிவிருத்திப் பங்காளராக விளங்கி வருகின்றது. கடந்த சில ஆண்டுகளாக இலங்கையில் இந்தியாவின் நேரடி முதலீடு குறிப்பிடத்தக்க அளவில் அதிகரித்துள்ளது. தற்போது இந்தியாவின் அபிவிருத்தி உதவியானது, கடன்கள், நன்கொடைகள் மற்றும் தொழில்நுட்ப உதவியானது, பிரதானமாக பொருளாதார உட்கட்டமைப்பு வசதியளிப்புக்கள், வாழ்வாதார அபிவிருத்தி, கல்வி, சுகாதாரப் பராமரிப்பு, இயலளவுக் கட்டமைப்பு மற்றும் பொருளாதார புத்துயிரூட்டல், போன்றனவற்றின் விருத்தியையே மையமாகக் கொண்டு பாய்ச்சப்படுகின்றது.

தற்போது கடன் உதவியானது இந்திய எக்சிம் வங்கியினால் வழங்கப்படும் அதே வேளை, நன்கொடை உதவியானது விஷேட கருத்திட்டங்கள் மற்றும் சிறிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் ஆகியனவற்றின் ஊடாக இந்திய அரசாங்கத்தினால் வழங்கப்படுகின்றது.

2015 மார்ச் மாதத்தில் இந்தியாவின் கௌரவ பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்கள் இலங்கைக்கு விஜயம் செய்ததோடு, 27 ஆண்டுகளின் பின்னர் இந்தியப் பிரதமர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் செய்த முதலாவது உத்தியோகபூர்வ விஜயமாகும். அவரது விஜயத்தின் போது அவர் இலங்கையின் புகையிரதத் துறையின் அபிவிருத்திக்காக ஐஅடொ 318 மில்லியன் புதிய கடன் வரிசையொன்றை பிரகடனப்படுத்தினார். இக்கடன் வரிசை வசதியளிப்பு தற்போது காணப்படும் புகையிரத வீதியை விருத்தி செய்தி செய்வதற்கும், மற்றும் புகையிரத தளங்களையும், ரயில் இயந்திரங்களையும் கொள்வனவு செய்வதற்கு பயன்படுத்துவதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும். 2008 ஆம் ஆண்டிலிருந்து இந்தியாவின் எக்சிம் வங்கி சலுகை அடிப்படையிலான நியதிகளின் கீழ் ஒரே நோக்கத்திற்காக நான்கு கடன் வரிசைகளின் மூலம் அண்ணளவாக ஐஅடொ 967 மில்லியன்களை ஏற்கனவே வழங்கியுள்ளது.

மேலும், இந்திய அரசாங்கம், அதன் நன்கொடை திட்டத்தின் கீழ் பல அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நிதி உதவி வழங்கியுள்ளது. ஐஅடொ 267 மில்லியன் பெறுமதியான 50,000 இந்திய வீடமைப்புக் கருத்திட்டம், யாழ்ப்பாணத்தின் கலாச்சார நிலையத்தின் புனர் நிர்மாணம், டிக்கோயா வைத்தியசாலையின் நிர்மாணமும், அதற்கான மருத்துவ உபகரணங்களை வழங்கலும், வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கான 200 கட்டில்களைக் கொண்ட வாட் கட்டடத் தொகுதியும், மருத்துவ உபகரணங்களை வழங்கலும், யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் விவசாய மற்றும் பொறியியல் பீடங்களுக்கு அவசியமான கட்டடத் தொகுதியும், அவசியமான வசதிகளும். றுகுணு பல்கலைக்கழகத்தின் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட கலையரங்கம் ஆகியன இந்திய உதவியுடன் அண்மையில் நடைமுறைப்படுத்தப்பட்ட ஒரு சில கருத்திட்டங்களாகும்.

### 2015 இல் அர்ப்பணிப்புக்கள்

ரூபா 300 மில்லியன் பெறுமதியான றுகுணு பல்கலைக்கழகத்தின் நவீன தொழில்நுட்ப வசதிகளைக் கொண்ட கலையரங்கத்தின் நிர்மாணத்திற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது.

2015 மார்ச் மாதத்தில் இந்தியாவின் கௌரவ பிரதமர் திரு நரேந்திர மோடி அவர்களின் இலங்கைக்கான விஜயத்தின் போது, இலங்கையில் அவசர முன் மருத்துவப் பராமரிப்பு நடைமுறை நோயாளர் வானூர்தி (ஆம்புயூலன்ஸ் ) சேவையை ஆரம்பிப்பதற்காக ஐஅடொ 7.6 மில்லியன்களை (ரூபா 1,000 மில்லியன்களை) நன்கொடையொன்றை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்தார். இக்கருத்திட்டத்திற்கான “கடிதப் பரிமாற்றம்”, ரூபா 100 மில்லியன்


பெறுமதியான வவுனியா மாவட்ட வைத்தியசாலைக்கான 200 கட்டில்களைக் கொண்ட வாட்டுக்களுக்கான கட்டடத் தொகுதிக்கு மருத்துவ உபகரணங்களை வழங்குவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தம் 2015 செப்தெம்பர் மாதத்தில் இலங்கையின் கௌரவ பிரதமர் இந்தியாவுக்கு விஜயம் செய்த போது கைச்சாத்திட்டார்.

**இலங்கையில் அவசர முன் வைத்தியசாலைப் பராமரிப்பு நோயாளர் வானூர்தி (ஆம்புயூலன்ஸ் ) சேவையை ஸ்தாபித்தல்**

இலங்கையில் வீதி விபத்துக்கள், இருதய தாக்கங்கள், நஞ்சு, மற்றும் அனர்த்தப் பாதிப்புக்கள் போன்ற பல்வேறு காரணங்களினால் அவசர சிகிச்சைக்கான தேவை துரிதமாக அதிகரித்து வருகின்றது. அவ்வாறான நிலைமைகளுக்கு உள்ளாகுவோரைப் பாதுகாப்பதற்கு உடனடியாக மருத்துவ கவனிப்புக்கள் தேவையாக உள்ளது. இத்தேவையை இனங்கண்டு இலங்கை அரசாங்கமானது, இந்திய அரசாங்கத்தின் ஆதரவுடன் இலங்கையில் அவசர முன் மருத்துவ மனை பராமரிப்பு நோயாளர் வானூர்தி (ஆம்புயூலன்ஸ்) சேவையொன்றை ஸ்தாபிப்பதற்கான பூர்வாங்க வேலைகளை மேற்கொண்டுள்ளது.


இக்கருத்திட்டம் நாடு பூராவும் 297 ஆம்பியூலன்ஸ்களைப் பயன்படுத்துவதன் மூலம் 4 கட்டங்களில் நடைமுறைப்படுத்துவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இந்திய அரசாங்கம் 88 ஆம்பியூலன்ஸ்களைப் பயன்படுத்துவதன் மூலம் மேல் மற்றும் தென் மாகாணங்களை உள்ளடக்கவுள்ள இக்கருத்திட்டத்தின் முதலாம் கட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு ஐஅடொ 7.6 மில்லியன்களை நன்கொடையாக வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. முதலாம் கட்டத்தின் வெற்றியைப் பொருத்து அடுத்த கட்டங்கள் தொடரப்படும்.

## துறைவாரியான அர்ப்பணிப்புக்கள் - 2008 – 2015



## 2015 இன் பகிர்வுகள்

2015 ஆம் ஆண்டிற்கான பகிர்வுகள் மொத்தம் ஐ.அ.டொ 105 மில்லியன்களைப் பதிவு செய்துள்ளது. அம்மொத்தப் பகிர்வில், ஐ.அ.டொ 73 மில்லியன் கடன்களாகவும், ஐஅடொ 32 மில்லியன்கள் நன்கொடையாகவும் பகிரப்பட்டுள்ளன.




## பாகிஸ்தான்

பாகிஸ்தானும், இந்தியாவும் தென்னாசியப் பிராந்தியத்தில் அமைந்துள்ள இரண்டு நாடுகளாக உள்ளதோடு, இலங்கை பாகிஸ்தானிடமிருந்து கடன் மற்றும் நன்கொடைகள் வடிவில் உதவியினைப் பெற்றுக் கொண்டுள்ளது. இலங்கை பாகிஸ்தானிடமிருந்து பெற்றுக் கொண்ட முதலாவது நிதி உதவி, 1991 ஆம் ஆண்டில் புகையிரதப் பெட்டிகளுக்காகப் பெற்றுக் கொண்ட ஐ.அ.டொ 5 மில்லியன்களாகும். மேலும், பாகிஸ்தான் அரசாங்கம் 2006ஆம் ஆண்டில் கடன் வரிசையொன்றாக ஐஅடொ 50 மில்லியன்களை வழங்கியுள்ளது. 2014 ஆம் ஆண்டில் மன்னார் மற்றும் வவுனியா மாவட்டங்களில் உள்நாட்டில் இடம் பெயர்ந்த மக்களுக்கான வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்திற்காக பாகிஸ்தானிடமிருந்து ஐஅடொ 1 மில்லியன் நன்கொடை உதவியொன்றை பெற்றுக் கொண்டுள்ளது. மேலும், 2014 ஆம் ஆண்டில் 6 அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு நன்கொடையாக மொத்தம் ஐஅடொ 350,000 இனை வழங்கியுள்ளது.

மேலும், பாகிஸ்தான் அரசாங்கம் இலங்கைக்கு ஐஅடொ 200 மில்லியன் கடன் ஒன்றினை வழங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளதோடு, தற்போது வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் பாகிஸ்தானின் அதிகாரிகளுடன் கடனின் நியதிகளும், நிபந்தனைகளும் தொடர்பாகப் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது.

# ரஷ்யா, அவுஸ்திரேலியா, மேற்குப் பிரிவு


இலங்கைக்கான மேற்கு அரைக்கோளத்திலுள்ள நாடுகளிலிருந்தான நிதி உதவியானது, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் முன்னேற்றப் பொருளாதாரப் பிரிவின் ஊடாகத் திரட்டப்படுகின்றது. இலங்கைக்கு நிதி உதவியை வழங்கும் பிரதான கடன் வழங்குவோராக ஜேர்மன், நெதர்லாந்து, சுவீடன், ஐரோப்பிய ஒன்றியம், ஐக்கிய அமெரிக்கா, பிரான்ஸ், ஸ்பெய்ன், ஒஸ்ட்ரியா, டென்மார்க், பெல்ஜியம் ரஷ்யா, அவுஸ்திரேலியா, ஐக்கிய இராச்சியம், மற்றும் ஹங்கேரி போன்ற இன்னோரன்ன நாடுகளை உள்ளடக்கியுள்ளது.

2010 ஆம் ஆண்டில் இலங்கை நடுத்தர வருமான மட்டத்திலான பொருளாதார நிலைமைக்கு தரமுயர்த்தப்பட்டதனால் மேலைத் தேய நாடுகளிலிருந்தும், கடன் வழங்கும் நிறுவனங்களிலிருந்தும் வெளிநாட்டு நிதி வடிவத்தில் கிடைக்கப் பெற்ற உதவியும் அதன் சேர்க்கையும், கணிசமான அளவில் மாற்றமடைந்துள்ளது. சலுகை அடிப்படையிலான நிதி அல்லது குறைந்த வட்டி வீதத்துடனான மென் கடன்களின் வீழ்ச்சியின் காரணமாக இந்நாடுகளிலிருந்தும் கடன் வழங்கும் நிறுவனங்களிடமிருந்தும் கிடைக்கப் பெற்ற அபிவிருத்தி உதவி சலுகை அடிப்படையிலல்லாத மற்றும் சலுகை அடிப்படையிலான கடன்களின் கலவை மற்றும் ஏற்றுமதிக் கடன் வசதியளிப்புக்கள் போன்றனவற்றை நோக்கி மாறுபட்டுள்ளது.

இந்நிதியானது விசேடமாக i.ஏற்றுமதிக் கடன்கள் ii. வர்த்தகக் கடன்கள் iii. மரபு ரீதியான கடன் உதவி iv. நன்கொடை போன்ற இன்னோரன்ன வடிவங்களில் பெற்றுக் கொள்ளப்பட்டுள்ளன. ஏற்றுமதிக் கடன்களின் கீழான வெளிநாட்டு உதவியானது, அடிப்படையில் போதிய அளவிலான பொருளாதார நன்மைகளை உருவாக்கக் கூடிய வர்த்தக ரீதியான சாத்தியமான கருத்திட்டங்களில் அல்லது கடன் மீள் கொடுப்பனவுகளை உள்ளடக்குவதற்கான காசுப்பாய்ச்சல்களில் முதலிடப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், மேலைத் தேய நாடுகளிலிருந்தான அநேகமான வர்த்தக ரீதியான கடன் பெறுகைகள், வீதிகளும், பாலங்களும், நீர் வழங்கல் மற்றும் சமூக உட்கட்டமைப்பு, நீர் வழங்கல் மற்றும் , மருத்துமனைகளின் அபிவிருத்தி போன்ற சமூக உட்கட்டமைப்பு, மக்களுக்குத் தரமான, உயர் தொழில் நுட்பத்திலான, நம்பகமான சுகாதார வசதிகளை வழங்கும் நோக்குடன் சுகாதாரப் பராமரிப்பு வசதிகளின் விருத்தி போன்ற போன்ற அவசரமானதும், முன்னுரிமை அளிக்கப்பட்டதுமான அபிவிருத்திக் கருத்திட்டங்களைப் பூர்த்தி செய்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

## அர்ப்பணிப்புக்களும், பகிர்வுகளும்

முன்னேற்றமடைந்த பொருளாதாரங்களிலிருந்தான வெளிநாட்டு நிதியின் அாப்பணிப்புக்களும் பகிர்வுகளும் 2006 – 2015 (ஐஅடொ மில்லியன்)



| | 2006 | 2007 | 2008 | 2009 | 2010 | 2011 | 2012 | 2013 | 2014 | 2015 | மொத்தம் |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| அர்ப்பணிப்புக்கள் | 398 | 337 | 439 | 138 | 547 | 124 | 234 | 488 | 370 | 224 | 3,299 |
| பகிர்வுகள் | 283 | 264 | 313 | 295 | 361 | 202 | 223 | 312 | 246 | 307 | 2,806 |

## 2015 இல் வெளிநாட்டு நிதியீட்டின் அர்ப்பணிப்புக்கள்

முன்னேற்றப் பொருளாதாரங்களிலிருந்தான ஏற்றுமதிக் கடன் வசதியளிப்புக்கள், சலுகை அடிப்படையிலான நிதியீடு, அதே போல நன்கொடை உதவி ஆகியனவற்றின் கீழான பின்வரும் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் நோக்கத்துடன் நிதி ஏற்பாடுகளை முடிவுறுத்துவதற்கு தேவையான நடவடிக்கைகள் 2015 ஆம் ஆண்டில் எடுக்கப்பட்டன.

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ஐஅடொ மில்லியன் |
|---|---|---|
| **கடன் உதவி** | | |
| பிரான்ஸ் அபிவிருத்தி நிறுவனம் (AFD) | நான்கு கட்ட உப நிலையங்களினதும், மற்றும் தொடர்புடைய பரிமாற்ற வரிசைகளினதும் நிர்மாணம் | 33.6 |
| | பசுமை சக்தி அபிவிருத்தியும் வினைத்திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் (ஆசிய அபிவிருத்தி வங்கியின் இணை நிதி உதவியுடன்) | 24.6 |
| ஸ்பெய்ன் அரசாங்கம் | கனேமுல்லை, பொல்கஹவலை, ராஜகிரிய ஆகிய இடங்களில் மூன்று மேம்பாலங்களின் நிர்மாணம் (இரு தரப்புப் பங்கு) | 41.2 |
| ஏபீ ஸ்வென்ஸ்க் ஏற்றுமதிக் கடன் | இரத்மலானை மற்றும் ஜாஎலை கழிவு நீர் வசதியளிப்புக் கருத்திட்டம் (சுவீடன்) – விரிவாக்கம் | 3.1 |
| அவுஸ்திரேலியா மற்றும் நியூசிலாந்து வங்கியும் அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதி நிதி மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | அம்பாறை ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் III (விரிவாக்கம்) | 7.5 |
| பெங்கோ விஸ்கயா ஆஜன்டாரியா எஸ்.ஏ. | கனேமுல்லை, பொல்கஹவலை, ராஜகிரிய ஆகிய இடங்களில் மூன்று மேம்பாலங்களின் நிர்மாணம் (இரு தரப்புப் பங்கு) | 17.7 |
| அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதி நிதி மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | தேவையான வைத்தியசாலைகளுக்கான மருத்துவக் கழிவு முகாமைத்துவ முறைமைகள் கருத்திட்டம் (ஏற்றுமதிக் கடன் பங்கு) | 13.8 |
| ஹொங்கொங் சாங்ஹாய் பேங்கிங் கோப்பரேசன் லிமிட்டட் ( ஈகேஎப் டென்மார்க்கின் உத்தரவாதத்துடன்) | பதலகமயில் பால் பதப்படுத்தல் நிலையத்தினை ஸ்தாபித்தல் | 74.5 |
| | **உப மொத்தம் (கடன்)** | **216.0** |
| **நன்கொடை உதவி** | | |
| ஜேர்மன் | வில்பத்துவில் தேசிய பூங்கா மற்றும் பாதுகாப்பு வலய முகாமைத்துவம் | 2.2 |
| | சமூக ஒற்றுமைக்கான கல்வி [ESC] | 4.2 |
| ஐக்கிய அமெரிக்கா | சமூக ஒன்றிணைப்புக்கான பலப்படுத்தப்பட்ட பங்கேற்பு | 2.1 |
| | **உப மொத்தம் (நன்கொடை)** | **8.5** |
| | **மொத்த அர்ப்பணிப்பு** | **224.5** |

## 2015 இல் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட கருத்திட்டங்கள்

முன்னேற்றப் பொருளாதாரங்களிலிருந்தான கடன் உதவியின் கிழ் 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் பேச்சு வார்த்தைகள் மேற்கொள்ளப்பட்ட பிரதான கருத்திட்டங்களின் பட்டியல் பின்வருமாறு:.

| அபிவிருத்திப் பங்காளர் | கருத்திட்டம் | தொகை ஐஅடொ மில்லியன் |
|---|---|---|
| ஸ்பெய்ன் | ஆனமடுவை ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் | 32.20 |
| ஓஸ்ட்ரியாவின் ரய்பென்சென் வங்கி | கொச்சிக்கடை பாலங்கள் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தல் | 9.70 |
| நெதர்லாந்தின் ரபோ வங்கி | சிறப்பியல்பு செற்ற தாய்மார் சிறுவர் வைத்தியசாலையொன்றாக களுத்துறை பொது வைத்தியசாலையை அபிவிருத்தி செய்தல் | 32.14 |
| ஓஸ்ட்ரியா ஏஜீ யுனி கிரடிட் வங்கி | கிராம கடுவான ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் | 11.60 |
| நெதர்லாந்தின் ரபோ வங்கி மற்றும் அவுஸ்திரேலியாவின் ஏற்றுமதி நிதி மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 20,000 பாற்பண்ணை கால்நடைகளின் இறக்குமதிக் கருத்திட்டம் | 73.90 |
| பீபீவீஏ வங்கியும், ஸ்பெய்ன் சோசியேட் பொது வங்கி | அனுராதபுரம் தெற்கு ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் II | 109.00 |
| பிரான்ஸ் அபிவிருத்தி வங்கி (AFD) | அனுராதபுரம் ஒன்றிணைக்கப்பட்ட நகர அபிவிருத்திக் கருத்திட்டம் (AIUDP) | 58.00 |
| பிரான்ஸ் அபிவிருத்தி வங்கி (AFD) | நகரங்களுக்கான துப்புரவாக்கல் மற்றும் சுகாதார பூர்வாங்க வேலைகள் கருத்திட்டம் | 85.00 |
| கிரடிட் எக்ரிகோலே, மற்றும் கோப்பரேட் இன்வெஸ்ட்மன், நெவக்சிஸ் மற்றம் பீஎன்பீ பாரிபாஸ், பிரான்ஸ் யுனி கிரடிட் வங்கி | பாரிய மாத்தளை நீர் வழங்கல் கருத்திட்டம் | 139.00 |
| கிரடிட் எக்ரிகோலே, மற்றும் கோப்பரேட் இன்வெஸ்ட்மன், | களனி இடது கரை நீர் வழங்கல் கருத்திட்டம் - கட்டம் II | 107.30 |
| | **மொத்தம்** | **657.84** |

## 2015 இல் நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த பிரதான கருத்திட்டங்கள்

### அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை விருத்திகளும், வலு சேமிப்புக் கருத்திட்டம்

கொழும்பு நகரத்தை உலக தரத்திலான ஒரு நகரமாக மாற்றியமைக்கும் நோக்குடன், நகரத்தில் வாழ்வோருக்கு தடையற்ற நீர் வழங்கல் மற்றும் துப்புரவாக்கல் சேவைகளை உறுதிப்படுத்துவதற்கு பாரிய கொழும்பு நீர் மற்றும் கழிவு நீர் முகாமைத்துவ விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டத்தினை நடைமுறைப்படுத்துகின்றது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் கருத்திட்டங்களின் தொடரொன்று பட்டியலிடப்பட்டுள்ளதோடு, தேவையான நிதி உதவியை ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்தும், மற்றும் ஏஜன்சி பிரென்சைஸ் டிவலப்மன்ட் ஒப் பிரான்சிடமிருந்தும் எதிர்பார்க்கின்றது. மேலே குறிப்பிடப்பட்டுள்ள இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பல்வேறு ஆக்கக் கூறுகளுக்கு நிதி வழங்குவதற்கான ஆசிய அபிவிருத்தி வங்கியின் அர்ப்பணிப்புக்களுக்கு மேலதிகமாக, அம்பத்தளை நீர் வழங்கல் முறைமை விருத்திகள் மற்றும்

வலு சேமிப்புக் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்தவதற்கான மதிப்பிடப்பட்ட செலவு ஐஅமெ டொ 70 மில்லியன் ஏஎப்டீயினால் வழங்கப்படும்.

அம்பத்தளை தலைமை வேலை முறைமையின் முழுமையான திருத்த வேலைகள், கொத்தடுவைளிலுள்ள 15,000 $m^3$ இயலளவுடனான நிலக்கீழ் நீர்த்தேக்கமொன்றின் நிர்மாணம், 14.2 கி.மீ நீளமுடைய புதிய பரிமாற்ற குழாய் வரிசைகளைப் பொருத்துதல், ஆகியன இக்கருத்திட்டத்தின் கீழ் திட்டமிடப்பட்டுள்ளன. அம்பத்தளை தலைமை வேலை முறைமையின் 30 வருடங்களைக் கொண்ட பழைய வினைத்திறனற்ற குழாய்கள், காலங்கடந்த உட்கட்டமைப்புக்கள், 2040 ஆம் ஆண்டளவில் நீருக்கான கேள்வியினைப் பூர்த்தி செய்வதற்கு இத்திட்டம் போதிய கொள்ளளவினைக் கொண்டுள்ளது என்பதை உறுதிப்படுத்துவதற்காக பூரணமாக நவீனமயப்படுத்தப்படும். அத்தோடு, நவீனமயப்படுத்தப்பட்ட குழாய் முறைமை வருடாந்தம் 4-6 சதவீதத்தில் அம்பத்தளை குழாய் மனையின் வினைத்திறனை அதிகரிக்கும். மிக முக்கியமாக நீர் முறைமையினை கண்காணித்தல் மற்றும் கட்டுப்படுத்தும் கணணிக் கட்டுப்பாட்டுடனான தன்னியக்கி முறைமையானது, நீர் வழங்கல் பொறிமுறையின் சுமுகமான ஓட்டத்துக்குப் பொருத்தப்படும்.

## பதல்கமையில் பால் பதப்படுத்தும் நிலையமொன்றினை ஸ்தாபித்தல்

பால் உற்பத்திப் பொருட்களின் தயாரிப்புக்களை மேம்படுத்துவதன் ஊடாக சமூக பொருளாதார நன்மைகளை அடைவதற்கு எதிர்பார்க்கப்படுவதோடு, பால் உற்பத்தியில் தன்னிறைவினை அடைவதற்கு நாட்டிற்கு உதவுகின்றது. ஆயினும், நாட்டின் பால் பதப்படுத்தல் துறையிலான நவீன தொழில்நுட்பத்தின் பற்றாக்குறையானது, இலங்கையின் பாற்பண்ணைக் கைத்தொழிலின் அபிவிருத்தியைப் பாதித்துள்ளது.

மில்கோ பிரைவட் லிமிட்டட்டின் நடைமுறையிலுள்ள பால் பதப்படுத்தும் தொழிற்சாலை, அதிக அளவில் நகரமயமாக்கப்பட்ட நாரஹேன்பிட்ட பிரதேசத்திலிருந்து கம்பஹா மவாட்டத்தின் பதல்கமைக்கு மீண்டும் ஸ்தாபிக்கப்பட்டதன் ஊடாக நாளாந்தம் 200,000 லீட்டர் பால் பதப்படுத்துவதனையும், உள்ளூர் சந்தைக்கு தரமான பாலையும், பால் உற்பத்திப் பொருட்களையும் உள்ளூர் சந்தைக்கு வழங்குவதனை உறுதிப்படுத்தும். இக்கருத்திட்டத்தின் செலவான ஐஅமெ டொ 74.5 மில்லியன் ஹொங்கொங் சாங்ஹாய் பேங்கிங் கொப்பரேசனினால் வழங்கப்பட்ட ஏற்றுமதிக் கடன் வசதியளிப்பின் கீழ் வழங்கப்பட்டது. இக்கருத்திட்டத்தின் கீழ் சகல தேவையான உட்கட்டமைப்பு மற்றும் வசதிகளுடன் பதல்கமையில் புதிய தொழிற்சாலையில் சுத்திகரிக்கப்பட்ட பால், யோகட், ஐஸ்கிரீம், பட்டர், மற்றும் சீஸ் போன்றனவற்றை உற்பத்தி செய்வதற்கு பால் பதப்படுத்தும் நிலையமொன்றினை ஸ்தாபிப்பதற்கு முன் மொழியப்பட்டுள்ளது. இக்கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதுடன் வருடாந்த பால் உற்பத்தியை அதிகரிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது. அத்தோடு, வருடாந்தம் அந்நியச் செலாவணியை சேமிக்கக் கூடியதாகவும் இருக்கும். முன் மொழியப்பட்ட இக்கருத்திட்டமானது, நாட்டின் கிராமிய வறுமையையும் மற்றும் போசாக்கின்மையையும் குறைக்கவும் பாரிய அளவில் பங்களிப்புச் செலுத்தும்.

## வட மாகாணத்தில் தொழில்சார் பயிற்சி நிலையமொன்றினை ஸ்தாபித்தல

வட மாகாணத்தின் தொழில்நுட்ப மற்றும் தொழில்சார் பயிற்சியின் அளவினையும், தரத்தினையும் விருத்தி செய்யும் நோக்குடன் 2012 – 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் இக்கருத்திட்டத்தின் பூர்வாங்க வேலைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இக்கருத்திட்டத்தின் கீழ், இணைக்கப்பட்ட கட்டடடங்கள், தொழில்நுட்ப உதவிக்கான ஏற்பாடு, உபகரணங்கள், இயந்திரங்கள், பயிற்சிச் சாதனங்கள் உள்ளடங்கலாக கிளிநொச்சியில் பூரணமாக வாக்குறுதியளிக்கப்பட்ட தொழில்சார் பயிற்சி நிலையம் ஜேர்மன் அரசாங்கத்தின் நன்கொடை உதவி ஐஅமெ டொ 4.4 மில்லியனுடனும், ஜேர்மன் கேஎப்டப்ளியு வங்கியின் கடன் நிதியுடனும் ஸ்தாபிக்கப்பட்டுள்ளது. இதில் சுமார் 400 மாணவர்களுக்கு உலோக தொழில்நுட்பம், இலத்திரனியல், தன்னியக்கத் துறை, தகவல் தொழில்நுட்பம், , விவசாயம், உணவுப் பாதுகாப்பு வழங்கல் ஆகிய துறைகளில் குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களை வழங்குவதற்கான கொள்ளளவைக் கொண்டுள்ளது.

ஜேர்மன் அரசாங்கம் கிளிநொச்சி தொழில்சார் பயிற்சி நிலையத்துடன் இணைத்து வட மாகாணத்தில் 8 சூரிய சக்தியினாலான நிலையங்களை ஸ்தாபிப்பதற்கு ஜேர்மன் கேஎப்டப்ளியு வங்கியினூடாக ஐஅடொ 8.4 மில்லியன் மேலதிக நன்கொடை உதவியுடன் இக்கருத்திட்டத்திற்கு 2014 ஆம் ஆண்டில் அதன் நிதி உதவியை அதிகரித்துள்ளது. இச்சூரிய சக்தியினாலான நிலையங்கள் கிளிநொச்சியிலுள்ள தொழில்சார் பயிற்சி நிலையத்தின் மூலம் வழங்கப்படும் என்வீகியூ 4,5 மற்றும் 6 பயிற்சிப் பாடநெறிகளுக்குப் பிரவேசிப்பதற்கு பயிலுனர்களுக்கு வசதியளிக்கும் நோக்குடன் தேசிய தொழில்சார் தகைமை 3 சான்றிதழ் (என்வீகியு-3 ) பாடநெறிகளை அடிப்படையாகக் கொண்டு விசாலமான பயிலுனர்களுக்குப் பயிற்சி வாய்ப்புக்களை வழங்குவதற்காக முல்லைத்தீவு, யாழ்ப்பாணம், கிளிநொச்சி, வவுனியா, மற்றும் மன்னார் மாவட்டங்களில் ஸ்தாபிக்கப்பட்டுள்ளன.

மேலும், ஜேர்மன் அரசாங்கம் நடைமுறையிலுள்ள தொழில்சார் வடக்குக் கருத்திட்டத்தின் கீழ் ஆய்வு கூடங்களின் வளங்களையும் மற்றும் நடமாடும் பயிற்சி நிலையங்களையும் பலப்படுத்தவும் 2015 ஆம் ஆண்டில் ஐஅடொ 4.4 மில்லியன் மேலதிக நன்கொடை நிதியை வழங்குவதன் மூலம் இக்கருத்திட்டத்துக்கு அதன் பங்களிப்பினை அதிகரித்துள்ளது.

# ஐக்கிய நாடுகள் நிறுவனங்களும், தொழில்நுட்ப உதவியும், அரச சார்பற்ற நிறுவனங்களின் பிரிவும்

## ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள்

1952 ஆம் ஆண்டிலிருந்து இலங்கை பிரதானமாக விவசாயம், கடற்றொழில், சுற்றாடல், சுகாதாரம், கல்வி, வாழ்வாதார அபிவிருத்தி, அனர்த்த நிவாரணம் போன்ற இன்னோரன்ன துறைகளில் உள்ள பல்வேறுபட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்காக ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP), உணவு மற்றும் விவசாய நிறுவனம் (FAO), ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதி (UNICEF), உலக உணவு அமைப்பு (WFP), ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி (UNFPA), ஐக்கிய நாடுகள் அகதிகளுக்கான உயர் ஸ்தானிகர் (UNHCR), உலக சுகாதார அமைப்பு (WHO), ஐக்கிய நாடுகள் குடியிருப்புக்கள் (UN Habitat), சர்வதேச தொழில் அமைப்பு (ILO), விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி (IFAD) போன்ற இன்னோரன்ன ஐக்கிய நாடுகள் நிறுவனங்களிடமிருந்து குறிப்பிடத்தக்க அளவிலான நிதி மற்றும் தொழில்நுட்ப உதவிகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள், இலங்கை அரசாங்கத்தினாலும் மற்றும் ஐக்கிய நாடுகள் நிறுவனங்களினாலும் ஒன்றிணைந்து இணக்கம் தெரிவிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவி வேலைச்சட்டகத்தின் ஊடாக அதன் உதவியை நிலைப்படுத்தியுள்ளது.

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் தற்போதைய வேலைச்சட்டகத்தின் கீழ், 2013 ஆண்டு தொடக்கம் ஐந்தாண்டு காலப்பிரிவில் அண்ணளவாக ஐ.அ.டொ 405 மில்லியன் வரை அதிகரிப்பதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இலங்கைக்கான ஐக்கிய நாடுகள் நிறுவனங்கள் பிரதானமாக நன்கொடைகள் வடிவில் கிடைக்கின்றது. ஆயினும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதி நன்கொடைகளின் ஊடாக மாத்திரமன்றி கடன்களின் ஊடாகவும் வெளிநாட்டு நிதியை வழங்குகின்றது.


### அர்ப்பணிப்புக்கள்

2015 இல் இலங்கை அரசாங்கத்திற்கும், ஐக்கிய நாடுகள் நிறுவனங்களுக்கும் இடையில் பின்வரும் பிரதான கருத்திட்டங்கள் கைச்சாத்திடப்பட்டன.

| நிறுவனம் | கருத்திட்டம் | தொகை ஐ.அ.டொ மில்லியன் |
|---|---|---|
| உவிநி (FAO) | விவசாய பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டம் | 2.41 |
| உஉநி (WFP) | நீடித்த நிவாரண மீட்புச் செயற்பாடுகள் (விரிவாக்கம்) | 29.34 |
| ஐநாஅநி (UNDP) | சுற்றாடல் ரீதியாக எளிதில் பாதிக்கப்படக் கூடிய பிரதேசங்களில் பல்லுயிர்களின் பாதுகாப்பையும், மற்றும் சுற்றுச் சூழல் முறைமைச் சேவைகளின் வாழ்வாதாரத்தினையும் அதிகரித்தல் | 9.13 |
| | வலு உருவாக்கத்தில் பொருத்தமான மட்டுப்படுத்தல் நடவடிக்கையும், மற்றும் இலங்கை தரவுக் கருத்திட்டத்தின் இறுதிப் பயனாளிகள் துறைகள் | 2.04 |
| | உலகளாவிய சுற்றாடல் நலன்களையும் மற்றும் இலங்கையின் துரித அபிவிருத்திச் செயன்முறையில் மரபு ரீதியற்ற சிறந்த நடைமுறைகள் | 0.96 |

மேலே குறிப்பிடப்பட்டவைகளுக்கு மேலதிகமாக, ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி உதவி வேலைச்சட்டகத்திற்கு ஏற்ப, 2013 இல் இலங்கை அரசாங்கத்திற்கும், தொடர்புடைய நிறுவனங்களுக்கும் இடையில் கைச்சாத்திடப்பட்ட 2013 – 2017 ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் நிகழ்ச்சித் திட்டத்தின் செயற்திட்டத்தின் கீழ் 2015 ஆம் ஆண்டிற்கான வருடாந்த நிகழ்ச்சித் திட்ட வேலைத் திட்டங்கள் ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதி மற்றும் ஐக்கிய நாடுகள் சனத்தொகை நிதி ஆகியனவற்றினால் கைச்சாத்திடப்பட்டன.


**2016 - 2017 இல் ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியினால் நிதி உதவி வழங்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் துறைவாரியான விநியோகம்**




## பகிர்வுகள்

பின்வரும் வரைபில் காட்டப்பட்டுள்ளது போல, பிரதான நிறுவனங்களுக்கிடையில் பகிரப்பட்ட மொத்தப் பகிர்வின் பிரதான பங்கு விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியினாலும், ஐக்கிய நாடுகள் சர்வதேச சிறுவர் நிதியினாலும் நிதி உதவி வழங்கப்பட்ட விஷேடமாக பெருந்தோட்டம், கல்வி, சுகாதாரம், நீர், சிறுவர் பாதுகாப்பு போன்ற இன்னோரன்ன துறைகளில் நடைமுறைப்படுத்தப்பட்ட கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களே அறிக்கையிட்டன.

**2015 இன் பகிர்வுகள் (சதவீதம்)**




## 2015 இல் பூர்த்தி செய்யப்பட்ட பிரதான கருத்திட்டங்கள்

விவசாயம், இயலளவு அபிவிருத்தி, மற்றும் மனிதாபிமான உதவி போன்ற இன்னோரன்ன துறைகளில் ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்வரும் பிரதான கருத்திட்டங்கள் 2015 இல் பூர்த்தி செய்யப்பட்டன.

| நிறுவனம் | கருத்திட்டம் | தொகை (ஐஅடொ மில்லியன்) |
|---|---|---|
| உஉநி (WFP) | நீடித்த நிவாரண மீட்புச் செயற்பாடுகள் (விரிவாக்கம்) | 29.34 |
| உவிநி (FAO) | இலங்கையில் விவசாயத்தில கிருமிநாசினி பயனபாட்டுடன் இணைந்த இடர்களின் முகாமைத்தவம் | 0.27 |
| ஐநாஅநி (UNDP) | கருத்திட்ட முகாமைத்துவம் மற்றும் கண்காணிப்புத் திணைக்களத்தினை (DPMM) உபாய ரீதியாக நிலைப்படுத்தல் | 0.22 |

# 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள கருத்திட்டங்கள் / நிகழ்ச்சித் திட்டங்கள்

## ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்தினால் நிதி உதவி வழங்கப்படவுள்ள 2016 – 2017 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் நிகழ்ச்சித் திட்ட செயற்திட்டம்

ஐக்கிய நாடுகள் நிறுவனத்தின் உலக உணவு நிகழ்ச்சித் திட்டம், 2016 – 2017 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் நிகழ்ச்சித் திட்ட செயற்திட்டத்தின் ஊடாக உணவு உதவியினை வங்குவதற்கு இணக்கம் தெரிவித்துள்ளது. இவ்விரண்டு ஆண்டு காலப்பிரிவிற்கான நாட்டின் நிகழ்ச்சித் திட்ட செயற்திட்டத்தின் நோக்கம், உணவு மற்றும் போசாக்குப் பாதுகாப்பினை விருத்தி செய்தலும், மற்றும் காலநிலைத் தாக்கங்களுக்கு எளிதில் பாதிக்கப்படக்கூடிய சமூகங்களின் பலத்தைக் கட்டியெழுப்பலுமாகும். மேலே குறிப்பிடப்பட்ட நன்கொடையின் மதிப்பிடப்பட்ட மொத்தத் தொகை ஐஅடொ 19,705,165 ஆகும்.

அதன் பிரகாரம், உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் பாடசாலை மதிய போசண நிகழ்ச்சித் திட்டம், 5 வயதுக்குக் குறைந்த குழந்தைகள், கா்ப்பிணிகள் பால் கொடுக்கும் தாய்மாா் போன்றோருக்கு ஆதரவளிக்கும் போசாக்கு நிகழ்ச்சித் திட்டம், கொள்கை அபிவிருத்திக்கான இயலளவு அபிவிருத்திக்கு மேலதிகமாக அனா்த்தத்தினல் பாதிக்கப்பட்ட சமூகத்தின் பலத்தினைக் கட்டியெழுப்பல் ஆகியனவற்றின் ஊடாக அண்ணளவாக 274,000 பயனாளிகளுக்கு பொருட்கள் வடிவிலும் (in-kind) மற்றும் காசை அடிப்படையாகக் கொண்டதுமான மாற்றல் முறைமைகளைப் பயன்படுத்துவதன் மூலம் ஆதரவினை வழங்கவுள்ளது.

இந்நிகழ்ச்சித் திட்டம், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சினால் நிறைவேற்றப்படுவதோடு, ஜனாதிபதி செயலகம், சுகாதாரம், போசாக்கு, மற்றும் சுதேச வைத்திய அமைச்சு, கல்வி அமைச்சு, சுற்றாடல் அமைச்சு, வட மாகாண சபையின் தொடா்புடைய அமைச்சுக்கள் மற்றும் குறிப்பிட்ட மாவட்ட செயலகங்கள் ஆகியனவற்றின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும்.

## சிறு உடமையாளா்களின் தேயிலை, இறப்பா் புத்துயிரூட்டும் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்காக விவசாய அபிவிருத்திக்கான சா்வதேச நிதியிலிருந்தான நிதி உதவி

பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அமைச்சினால் நடைமுறைப்படுத்தப்படவுள்ள சிறு உடமையாளா்களின் தேயிலை, இறப்பா் புத்துயிரூட்டும் கருத்திட்டத்தினை நடைமுறைப்படுத்துவதற்கு விவசாய அபிவிருத்திக்கான சா்வதேச நிதி தனது நிதி உதவியினை வழங்க இணக்கம் தெரிவித்துள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தின் பிரதான நோக்கம், நிலையான இலாபகரமான விவசாயப் பண்ணை தொழில்முயற்சிகளைக் கட்டியெழுப்புவதன் மூலம் தேயிலை மற்றும் இறப்பா் சிறு உடமையாளா்களின் வருமானத்தை அதிகரித்தலும் மற்றும் அவா்களைப் பலப்படுத்தலுமாகும். மேலும், இக்கருத்திட்டம் தேயிலை மற்றும் இறப்பரின் தேசிய உற்பத்தியை அதிகரிப்பதோடு, தெரிவு செய்யப்பட்ட மாவட்டங்களில் உற்பத்தித் திறன் மற்றும் சந்தைத் தொடா்புகளுடன் தொடா்புடைய பிரச்சினைகளுக்குத் தீா்வு காணும்.

இக்கருத்திட்டத்தின் கீழ் 3 பிரதான ஆக்கக் கூறுகள் காணப்படுகின்றன: அவையாவன: (அ) தேயிலை சிறு உடமையாளர் அபிவிருத்தி (ஆ) இறப்பர் சிறு உடமையாளர் அபிவிருத்தி (இ) கிராமிய நிதி ஆகியனவாகும். இந்நிகழ்ச்சித் திட்டத்தின் மொத்த முதலீடு ஐஅடொ 65.4 மில்லியன்களாக உள்ளதோடு, அத்தொகையில் ஐஅடொ 25.8 மில்லியன் விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியினால் வழங்கப்படும். இக்கருத்திட்டத்தின் காலப்பிரிவு 6 வருடங்களாக உள்ளதோடு, இதன் மூலம் 32,000 குடும்பங்களுக்கு (144,000 மக்கள்) நன்மையளிக்கவும் எதிர்பார்க்கப்படுகின்றது.

மேலே குறிப்பிடப்பட்ட இக்கருத்திட்டத்திற்கான பேச்சு வார்த்தைகள் 2015 நவம்பர் மாதம் 26 ஆம் திகதி இலங்கை அரசாங்கத்துக்கும், விவசாய அபிவிருத்திக்கான சர்வதேச நிதியத்துக்குமிடையில் முடிவுறுத்தப்பட்டது.

# தொழில்நுட்ப உதவி

வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களைத் திரட்டுவதற்கான இலங்கையின் தேசிய குவி மையப் புள்ளியாக விளங்கும் வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அரசாங்கத் துறையிலுள்ள மனித வளங்களை அபிவிருத்தி செய்வதற்கும், இயலளவைக் கட்டியெழுப்புவதற்குமான கேள்வியை அடிப்படையாகக் கொண்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களைப் பெற்றுக் கொள்வதற்காக காலத்துக்குக் காலம் அவுஸ்திரேலியா, சீனா, ஜப்பான், கொரியா, இந்தியா, சிங்கப்பூர், தாய்லாந்து, மலேசியா, இந்தோனேசியா, போன்ற இரு தரப்பு அபிவிருத்திப் பங்காளர்கள், மற்றும் ஆசியா அபிவிருத்தி வங்கி, கொழும்புத் திட்டம், உலக வங்கி, பொதுநலவாயச் செயலகம் போன்ற பல் தரப்பு அபிவிருத்திப் பங்காளர்களுடன் பேச்சு வார்த்தைகளை மேற்கொண்டு வருகின்றது.

இலங்கை அரசாங்கம் 15 இற்கும் அதிகமான அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து வருடாந்தம் தொழில்நுட்ப உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் சுமார் 600 வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களை நீண்ட கால ( 8 மாதங்களும், 8 மாதங்களை விட அதிகமானவைகளும்) மற்றும் குறுகிய கால வடிவில் பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்கின்றது. அதன் பிரகாரம், 2015 ஆம் ஆண்டில் மொத்தம் 1,243 பயிற்சி வாய்ப்புக்களைப் பெற்றுக் கொண்டதோடு, அவற்றில் 69 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களாகவும், எஞ்சியவை குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களாகவும் இருந்தன.

பின்வரும் அட்டவணை 2015 ஜனவரி மாதம் 1 ஆம் திகதி முதல் டிசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரை இலங்கை அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கையைக் காட்டுகின்றது.


**2015 ஆம் ஆண்டில் அபிவிருத்திப் பங்காளர்களினால் வழங்கப்பட்ட வெளிநாட்டுப் பயிற்சி வாய்ப்புக்களின் எண்ணிக்கை**

| அபிவிருத்திப் பங்காளர் | குறுகிய காலம் | நீண்ட காலம் |
|---|---|---|
| ஆசிய அபிவிருத்தி வங்கி (ADB) | 85 | |
| கொழும்புத்திட்டம் | 7 | |
| தொழில்நுட்ப உதவிக்கான பொதுநலவாயம் (CFTC) | 4 | |
| அவுஸ்திரேலியா | | 35 |
| சீனா | 699 | 2 |
| மலேசியா | 18 | |
| சிங்கப்பூர் | 42 | |
| தாய்லாந்து | 19 | 2 |
| கொரியா | 104 | 13 |
| இந்தியா | 43 | |
| ஜப்பான் | 149 | 17 |
| சார்க் செயலகம் | 4 | |
| **மொத்தம்** | **1,174** | **69** |

கடந்த சில ஆண்டு காலப்பிரிவுகளில், பயிற்சி வாய்ப்புக்களில் எதிர்பாராததும், முன்னெப்போதும் நிகழாததுமான விருத்தி காணப்பட்டது. உதாரணமாக, 2015 ஜனவரி மாதத்திலிருந்து டிசம்பர் மாதம் வரை சீனாவில் வெளிநாட்டு அனுபவத்தினைப் பெற்றுக் கொள்வதற்கு 453 இற்கும் அதிகமான உத்தியோகத்தர்கள் தெரிவு செய்யப்பட்டதோடு, கூடியது ஒரு நிகழ்ச்சித் திட்டத்துக்கு 8 உத்தியோகத்தர்கள் வரை தெரிவு செய்யப்பட்டனர். 2015 இல் இலங்கைக்குக் கிடைக்கப் பெற்ற மொத்த பயிற்சி வாய்ப்புக்களில் சுமார் 56 சதவீதத்தினை இது பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. சீன அரசாங்கம் இந்நிகழ்ச்சித் திட்டங்களுக்கு விண்ணப்பித்த சகல விண்ணப்பதாரர்களையும் தெரிவு செய்வதற்கு இயன்ற வரை தனது முயற்சியினை எடுத்துள்ளது. அவுஸ்திரேலிய அரசாங்கமும் 2015 இற்கான தமது அவுஸ்திரேலிய அபிவிருத்திப் புலமைப்பரிசிலின் உட்சேர்ப்பினை சுகாதாரம் ,கல்வி, மற்றும் நிலையான பொருளாதார அபிவிருத்தி ஆகிய பரப்புகளில் அதிகரித்துள்ளதோடு, 35 உத்தியோகத்தர்கள் முதுமாணிப்பட்டப்படிப்பினை மேற்கொள்வதற்கு

நேர்முகப் பரீட்சை மூலம் தெரிவு செய்யப்பட்டனர். கொரியா அரசாங்கம், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்தின் ஊடாக 104 குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களையும், 13 நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களையும் வழங்கியுள்ளது. 2015 ஆம் ஆண்டில் இலங்கைக்குக் கிடைக்கப் பெற்ற மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் 9 சதவீதத்தினைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. ஜப்பானிய அரசாங்கம் 166 பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளதோடு, அவை குறுகிய கால மற்றும் நீண்ட கால பயிற்சி வாய்ப்புக்களை உள்ளடக்கியுள்ளதோடு, அவை மொத்தப் பயிற்சி வாய்ப்புக்களில் 13 சதவீதத்தினையும் பதிவு செய்துள்ளது. அதே போல இந்திய அரசாங்கம், சிங்கப்பூர் அரசாங்கம் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி போன்றன 2015 இல் குறிப்பிடத்தக்க அளவிலான பயிற்சி வாய்ப்புக்களை வழங்கியுள்ளது.

**2014 மற்றும் 2015 ஆம் ஆண்டுகளில் கிடைக்கப் பெற்ற குறுகிய கால பயிற்சி வாய்ப்புக்களின் ஒப்பீடு**




அரசாங்கத்தினால் பெற்றுக் கொள்ளப்பட்ட நீண்ட காலப்பயிற்சி வாய்ப்புக்களை பொருத்த வரை, அநேகமான பட்டப்பின்படிப்பு டிப்ளோமா மற்றும் முதுமாணிப்பட்டப் பாடநெறிகள், கனிஷ்ட மற்றும் நடுத்தர மட்ட உத்தியோகத்தர்கள் அவர்களது எதிர்கால தொழில் அபிவிருத்திக்குத் தேவையான கல்வி ரீதியான மற்றும் உத்தியோகபூர்வ திறன்களை விருத்தி செய்வதற்கு வழங்கப்பட்டுள்ளன. பெரும்பாலும், இப்பயிற்சிப் பாடநெறிகள் உலகில் உள்ள சிறந்த பிரதான பயிற்சி நிறுவனங்களினாலும், பல்கலைக்கழகங்களினாலும் நடாத்தப்படுகின்றன. இப்பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் விவசாயம், கால்நடை, கடற்றொழில் நீர்ப்பாசனம், வீதி, போக்குவரத்து, சுகாதாரம், தொழில் முயற்சி அபிவிருத்தி, சூழல், கல்வி, பொது நிர்வாகமும், நல்லாட்சியும், அபிவிருத்தியும், அரச கொள்கையும் ஆகிய இன்னோரன்ன துறைகளை மையமாகக் கொண்டிருந்தன. தனிப்பட்ட பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு மேலதிகமாக அபிவிருத்திப் பங்காளர்கள் அரச துறை உத்தியோகத்தர்களுக்கு பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள், செயலமர்வுகள், மற்றும் ஆய்வுப் பயணங்கள் போன்றனவற்றையும் வழங்கியுள்ளனர்.

## தன்னார்வாளர் சேவை

பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்களுக்கு அப்பால் தொழில்நுட்ப உதவிப்பிரிவானது அபிவிருத்திப் பங்காளர்களுடனும், மற்றும் நிரல் அமைச்சுக்களுடனும் ஒன்றிணைந்து வெளிநாட்டு நிபுணர்கள் மற்றும் தன்னார்வாளர்களின் சேவைகளின் நிகழ்ச்சித் திட்டங்களை ஒருங்கிணைப்புச் செய்கின்றது. நிரல் அமைச்சுக்களினால் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களை அடிப்படையாகக் கொண்டு, பொருத்தமான நிபுணர்கள் மற்றும் தன்னார்வாளர்கள் இனங்காணப்படுவதோடு, அவர்களை வேலையில் சேர்த்துக் கொள்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்படும். 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில், இலங்கை அரசாங்கம், கொரியா சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், ஜப்பானிய சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனம், மற்றும் அவுஸ்திரேலியா போன்ற அபிவிருத்திப் பங்காளர்களிடமிருந்து தன்னார்வாளர்களைப் பெற்றுக் கொண்டுள்ளதோடு, அவை சுகாதாரம், சமூகவியல், சமூக அபிவிருத்தி, விளையாட்டுக்கள், கல்வி, மொழி, நெசவு மற்றும் தகவல் தொழில் நுட்பம் ஆகிய துறைகளில் முறையே 51, 40 மற்றும் 01 தன்னார்வாளர்களின் சேவைகளைப் பெற்றுக் கொண்டுள்ளது.

## விஷேட நிகழ்வுகள்

### முதலாவது பாலின குவி மையப் புள்ளிகளின் மாநாடு – 2015 நவம்பர் மாதம் 26 – 27 ஆம் திகதி வரை (ஹில்டன் ஹோட்டல், கொழும்பு)

1951 ஆம் ஆண்டிலிருந்து 7 அங்கத்துவ நாடுகளுடன் இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட ஒரே ஒரு சர்வதேச நிறுவனமான கொழும்புத் திட்டச் செயலகம் ஆலோசனைக் குழுவினதும் மற்றும் சபையினதும் செயலகமாகச் செயற்பட்டு வருகின்றது.

கொழும்புத் திட்டச் செயலகத்தின் பிரதான நிகழ்ச்சித் திட்டங்களுள் ஒன்றாக விளங்கும் பாலினத்தை அடிப்படையகக் கொண்ட நிகழ்ச்சித் திட்டங்கள் விளங்குவதனால், அவர்கள் அண்மையில் கொழும்புத் திட்டத்தில் பாலினத்தை அடிப்படையாகக் குவி மையப் பள்ளி ஆரம்பித்ததோடு, வெளிநாட்டு வளங்கள் திணைக்களம், வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சு மற்றும் மகளிர் அலுவல்கள் அமைச்ச ஆகியன இக்குவி மையப் புள்ளியின் அங்கத்தவர்களாகத் தெரிவு செய்யப்பட்டன.

அதன் பிரகாரம், முதலாவது பாலின குவி மையப் புள்ளிகளுக்கான மாநாடு 2015 நவம்பர் மாதம் 26 – 27 ஆம் திகதி வரை ஹில்டன் ஹோட்டலில் கொழும்புத் திட்டத்தின் 27 அங்கத்துவ நாடுகளின் பங்கேற்புடன் நடாத்தப்பட்டது. வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் கொழும்புத் திட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் குவி மையப் புள்ளியாக விளங்குவதனாலும், பாலின குவி மையப் புள்ளியின் அங்கத்தவராக விளங்குவதனாலும், வெளிநாட்டு வளங்கள் திணைக்களம் அவ்வங்கத்துவ நாடுகளிலிருந்து வருகை தந்த பங்கேற்பாளர்களுக்கான வரவேற்பு இரவு விருந்தினை ஏற்பாடு செய்தது.

# படுகடன் முகாமைத்துவப் பிரிவு

## படுகடன் முகாமைத்துவப் பிரிவின் பங்கு

- இப்பிரிவானது பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமை (CS-DRMS) தரவு அடிப்படை என அழைக்கப்படும் படுகடன் முகாமைத்துவ முறைமைக்கான புதிய அர்ப்பணிப்புக்களின் விபரங்களைப் பதிவு செய்தலும், படுகடன் / நன்கொடை அர்ப்பணிப்புக்களின் இரத்துச் செய்தல்கள், விரிவாக்கம், பெற்றுக் கொள்ளும் காலப்பிரிவுகளின் நீடிப்பு போன்ற தொடர்புடைய இன்னோரன்ன விபரங்களைப் புதுப்பித்தல்.

- பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்தலும், இலங்கை மத்திய வங்கிக்குச் செலுத்த வேண்டிய தொகையினை உரிய நேரத்தில் செலுத்துவது தொடர்பாக அவசியமான பரிந்துரைகளை முன் வைத்தல்.

- பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பாத்து, கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் படியுள்ள வேறுபாடுகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரிவின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்.

- கடன் உடன்படிக்கைகள் தொடர்பான பகிர்வுகள், கடன் மீள் கொடுப்பனவுகள், வட்டிக் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு உட்படுத்தல்.

- புதிய கடன் அர்ப்பணிப்புக்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான சுருக்கத்தினைத் தயாரித்தலும், மற்றும் அவற்றை கடன் உடன்படிக்கைகளின் பிரதிகளுடன் இலங்கை மத்திய வங்கியின் பொருளியல் ஆய்வுத் திணைக்களத்துக்குச் சமர்ப்பித்தல். கடன் / நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல் ஒன்றைப் பிரசுரித்தல்.

- படுகடன் புள்ளி விபரங்களைத் திறைசேரிச் செயற்பாடுகள் திணைக்களத்துக்கும் ஏனைய நிறுவனங்களுக்கும் வழங்குதலும், பகிர்வுகள் தொடர்பாக (கருத்திட்ட வாரியான) பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமையிலிருந்து தயாரிக்கப்பட்ட 814 அறிக்கைகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பொது இணையத்தளத்தில் வெளியிடல்.

- வெளிநாட்டு உதவி மீளாய்வு, வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான செயலாற்ற அறிக்கை, வருடாந்த அறிக்கை, வரவு செலவுத்திட்ட வெளியீடு மற்றும் ஏனைய வெளியீடுகள் தொடர்பாக அவசியமான ஏற்பாடுகளை மேற்கொள்ளலும், ஒருங்கிணைப்பினை மேற்கொள்ளலும்.

- இலங்கையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான அவசியமான பொருளாதார ஆய்வு ரீதியான அறிக்கைகளையும், தரவுகளையும் குறிப்பிட்ட பிரிவுகளுக்கு உரிய நேரத்திலும் கிடைக்கச் செய்தல்.

- வெளிநாட்டு அரசாங்கக் கடன்கள் தொடர்பான பாராளுமன்றக் கேள்விகளுக்குப் பதில்களைத் தயாரித்தல்.

- பொதுநலவாயச் செயலகத்தினால் தயாரிக்கப்பட்ட "Horizon" எனும் கடன் முகாமைத்துவம் மற்றும் ஆய்வுச் சாதனமாகப் பயன்படுத்தப்பட வேண்டிய தேவையான படிவங்களில் இலங்கை மத்திய வங்கிக்கான பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமையில் பதிவு செய்யப்பட்ட வெளிநாட்டுப் படுகடன் தரவுகளை வழங்கல்.

- வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான பிரச்சினைகள் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் குறிப்பிட்ட பிரிவின் ஒத்துழைப்புடன் குறிப்பிட்ட அபிவிருத்திப் பங்காளர் நிறுவனங்களுடன் தொடர்ந்து செயற்படல்.

- வெளிநாட்டு நிதியீடு மற்றும் படுகடன் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திறைசேரிச் செயலாளரிடம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்கள் தொடர்பாக நடவடிக்கைகளை எடுத்தல்.

- நாட்டின் படுகடன் முகாமைத்துவத்தின் இயலளவினை விருத்தி செய்யும் நோக்குடன் இலங்கை மத்திய வங்கியின் வேண்டுகோளின் பேரிலும் பொதுநலவாயச் செயலகத்தின் சார்பில் வருகை தரும் தூதுவர் குழுக்களுக்கு வசதிகளை ஏற்படுத்திக் கொடுத்தல்.

- உத்தியோகபூர்வ வெளிநாட்டுப் படுகடன் தரவுகளை பிரசுரிக்கும் நோக்குடன் காலாண்டு வெளிநாட்டுப் படுகடன் புள்ளி விபரங்களின் முன்னெடுப்புக்களின் ஊடாக உலக வங்கியினாலும், சர்வதேச நாணய நிதியத்தினாலும் வேண்டப்பட்ட தனிப்பட்ட படிவங்களில் காலாண்டு அடிப்படையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான தரவுகளை வெளியிடல்.

## 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

- 2015 ஆம் ஆண்டு தொடர்பான பொதுநலவாயச் செயலகப் படு கடன் முகாமைத்துவ பதிவு முறைமை (CS-DRMS) தரவு அடிப்படையில் புதிய அர்ப்பணிப்புக்கள் பதிவு செய்யப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் கடன் உடன்படிக்கைகளுக்கு ஏற்ப, குறிப்பிட்ட கடன் மீளச் செலுத்தல்களின் தவணைகள் உள்ளடங்கலாக ஏனைய கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்காக இலங்கை மத்திய வங்கிக்கு அவசியமான பரிந்துரைகள் முன் வைக்கப்பட்டன.

- பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு ஏற்ப, கொடுப்பனவுகளுக்கான மதிப்பீடுகளின் பெறுமதிகளை கடன் வழங்கும் அபிவிருத்திப் பங்காளர்களின் பெறுமதிகளுடன் ஒப்பிட்டுப் பார்த்து, கடன் உடன்படிக்கையின் ஏற்பாடுகளின் படியுள்ள வேறுபாடுகள் தொடர்பாக குறிப்பிட்ட பிரிவின் மூலம் உறுதிப்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில் பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமையில் உள்ள கடன் உடன்படிக்கைகள் தொடர்பான பகிர்வுகள், கடன் மீளச் செலுத்தல்கள், வட்டிக் கொடுப்பனவுகள், மற்றும் ஏனைய கொடுப்பனவுகளை பொதுநலவாயச் செயலகக் கடன் முகாமைத்துவ பதிவு முறைமைக்கு உட்படுத்தப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில், மேற்கொள்ளப்பட்ட குறிப்பிட்ட அர்ப்பணிப்புக்களின் நியதிகள் மற்றும் நிபந்தனைகள் தொடர்பான கடன் / நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல் ஒன்று தயாரிக்கப்பட்டு பிரசுரிக்கப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவிற்கான கடன் புள்ளிவிபரங்கள் திறைசேரித் திணைக்களம், மற்றும் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்குத் தேவையேற்படும் போது வழங்கப்பட்டன.

- பகிர்வுகள் தொடர்பாக (கருத்திட்ட வாரியான) பொதுநலவாயச் செயலகக் படுகடன் முகாமைத்துவ பதிவு முறைமையிலிருந்து தயாரிக்கப்பட்ட 814 அறிக்கைகளை வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பொது இணையத்தளத்தில் வெளியிடப்பட்டது.

- 2015 ஆம் ஆண்டு காலப்பிரிவில், வெளிநாட்டுக் கடன் தொடர்பான செயலாற்ற அறிக்கை, வருடாந்த அறிக்கை, வரவு செலவுத்திட்ட வெளியீடு மற்றும் ஏனைய வெளியீடுகள் தயாரிக்கப்பட்டன.

- வெளிநாட்டு நிதி மற்றும் கடன் தொடர்பாக வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகம் மற்றும் திறைசேரிச் செயலாளரிடம் பல்வேறு நிறுவனங்களிடமிருந்து மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்கள் தொடர்பாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.

- 2015 ஆம் ஆண்டில் வெளிநாட்டு அரசாங்கக் கடன்கள் தொடர்பான 4 பாராளுமன்றக் கேள்விகளுக்கு பதில்கள் தயாரிக்கப்பட்டன.

- வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் ஏனைய பிரிவுகளினாலும், ஏனைய திறைசேரித் திணைக்களங்களினாலும் வேண்டப்பட்ட இலங்கையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான அவசியமான பொருளாதார ஆய்வு ரீதியான அறிக்கைகளையும், தரவுகளையும் உரிய நேரத்தில் வழங்கப்பட்டது.

- நாட்டின் படுகடன் முகாமைத்துவத்தின் இயலளவினை விருத்தி செய்யும் நோக்குடன் பொதுநலவாயச் செயலகத்திலிருந்தும், உலக வங்கி மற்றும் சர்வதேச நாணய நிதியிலிருந்தும் 3 தூதுவர் குழுக்கள் வருகை தந்தன.

- வெளிநாட்டுப் படு கடன்கள் தொடர்பான பிரச்சினைகளுககான விபரங்களை, வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் குறிப்பிட்ட பிரிவின் ஊடாக அபிவிருத்திப் பங்காளர்களுடன் தொடர்பு கொள்ளப்பட்டு பெற்றுக் கொள்ளப்பட்டதோடு, அவ்விபரங்கள் சமர்ப்பிக்கப்பட்டன.

- சர்வதேச நாணய நிதியம் / உலக வங்கியினாலும் மேற்கொள்ளப்பட்ட வேண்டுகோள்களுக்கிணங்க, காலாண்டு அடிப்படையில் வெளிநாட்டுப் படு கடன் தொடர்பான தேவையான தரவுகள் வழங்கப்பட்டன.

# கொள்கைத் திட்டமிடல் பிரிவு

## கொள்கைத் திட்டமிடல் பிரிவின் பங்கு

இப்பிரிவானது, வெளிநாட்டு உதவி ஒன்றிணைப்பினை மேம்படுத்தல், வெளிநாட்டு நிதியை ஒன்று திரட்டுதல், வெளிநாட்டு உத்தியோகபூர்வ அபிவிருத்தி உதவியின் முகாமைத்துவம், மற்றும் அரசாங்க அபிவிருத்தி கொள்கைச் சட்டகத்தின் பிரகாரம் இனங்காணப்பட்ட முன்னுரிமைக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தவதற்கான புதிய வெளிநாட்டு நிதிய வளங்களைக் கவர்தல் ஆகிய நடவடிக்கைகளுக்குப் பொறுப்பாக உள்ளது:

பின்வரும் நோக்கங்களை அடையும் நோக்குடன் இப்பிரிவினால் பின்வரும் செயற்பணிகள் மேற்கொள்ளப்பட்டன.

- அரசாங்க அபிவிருத்தி முன்னெடுப்புக்களாக நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய அபிவிருத்திக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களுககு அவசியமான நிதி வசதிகளை வழங்குவதற்கு நிரல் அமைச்சுக்களுடனும் மற்றும் அபிவிருத்திப் பங்காளர்களுடனும் ஒருங்கிணைப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.

- நிரல் அமைச்சுக்களினால் சமா்ப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளுக்கான தேசிய திட்டமிடல் திணைக்களத்தின் சிபாரிசுகளை பெற்றுக் கொள்ளல்.

- தேசிய திட்டமிடல் திணைக்களத்தினால் சிபாரிசு செய்யப்பட்ட கருத்திட்டப் பிரேரணைகளை வெளிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்வதற்காக சிரேஷ்ட பணியாளரின் ஆலோசனையுடன் சாத்தியமான அபிவிருத்திப் பங்காளர்களின் பிரிவுக்குச் சமா்ப்பித்தல்.

- வெளிநாட்டு உதவியுடன் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய புதுப்பிக்கப்பட்ட கருத்திட்டப் பிரேரணைத் தொகுதியினை தயாரித்தலும், பராமரித்தலும்.

- திணைக்களத்தின் செயலாற்றுகை அறிக்கையினைத் தயாரித்தலும், ஒருங்கிணைத்தலும்.

- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் அறிக்கைகளுக்கான உள்ளீடுகளை வழங்குதல்.

- வெளிநாட்டு உதவியின் பயன்பாடு தொடர்பாக அவசியமான சுற்றறிக்கைகளைப் பிரசுரித்தல்.

- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சுக்குச் சமா்ப்பிக்கப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனம் தொடர்பாக அமைச்சரவை அவதானிப்புக்களை வழங்குவதற்கு ஒருங்கிணைப்புச் செய்தல்.

- 2016 ஆம் ஆண்டிற்கான நடைமுறையிலுள்ள மற்றும் புதிய கருத்திட்டப் பிரேரணைகளுக்கு வெளிநாட்டு நிதியீட்டு வரவு செலவுத் திட்ட மதிப்பீடுகளை ஒன்றிணைத்தலும், தயரித்தலும்.

- வெளிநாட்டு நிதியீடு தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணப்பாளர் நாயகத்தினால் பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப'படும் வேண்டுகோள்களுக்கான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.

- வெளிநாட்டு நிதியீட்டுடன் தொடர்புடைய மீளாய்வு அறிக்கைகளை குறிப்பிட்ட காலத்தில் தயாரித்தல்.
- இலங்கையில் வெளிநாட்டு நிதியீடு தொடர்பான தேவையான பொருளாதார ஆய்வு அறிக்கைகளும், தரவுகளும் உரிய நேரத்திலும் திருப்திகரமான மட்டத்திலும் தொகுத்தல்.
- வெளிநாட்டு உதவி தொடர்பான கூட்டங்கள் மற்றும் அபிவிருத்திச் சம்மேளனங்களுக்கு ஒருங்கிணைப்புச் செய்தல்.
- அபிவிருத்தி உதவிக் குழுக்களின் கலந்துரையாடல்களையும், வெளிநாட்டு உதவிக் கூட்டங்களையும் ஒருங்கிணைப்புச் செய்தல்.

## 2015 ஆம் ஆண்டின் செயலாற்றுகை

- 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த செயலாற்ற அறிக்கை தயாரிக்கப்பட்டு வெளியிடப்பட்டது.
- நிதித்திட்டமிடல் அமைச்சின் 2014 ஆம் ஆண்டிற்கான வருடாந்த அறிக்கைக்கான வெளிநாட்டு நிதியீட்டு அத்தியாயம் தயாரிக்கப்பட்டது.
- தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் “2015 முன்னேற்ற அறிக்கை மற்றும் 2016 அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள் வெளியீட்டிற்கான வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் அத்தியாயத்தினைத் தயாரித்தல்.
- நிரல் அமைச்சுக்களினால் முன் வைக்கப்பட்ட 41 கருத்திட்டப் பிரேரணைகளை வெளிநாட்டு நிதியினைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு அபிவிருத்திப் பங்காளர்களின் பிரிவுகளுக்கு சமர்ப்பிக்கப்பட்டது.
- மூன்று புரிந்துணர்வு ஒப்பந்தங்களுக்கு (MOUs) அங்கீகாரம் வழங்கப்பட்டது.
- 2016 ஆம் ஆண்டில் நடைமுறைப்படுத்தப்படும் புதிய கருத்திட்டங்கள் உள்ளடங்கிய வெளிநாட்டு நிதியீட்டு வரவு செலவுத்திட்ட மதிப்பீட்டினைத் தயாரித்தலும், ஒருங்கிணைத்தலும்
- வெளிநாட்டு நிதியீடு தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர், தேசிய கொள்கைகள் மற்றும் பொருளாதார அலுவல்கள் அமைச்சின் செயலாளர், வெளிநாட்டு வளங்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் நாயகத்தினால் பல்வேறு நிறுவனங்களினால் மேற்கொள்ளப்படும் வேண்டுகோள்களுக்கான தேவைப்பாடுகளுக்கு ஏற்ப பொருத்தமான நடவடிக்கைகளை எடுத்தல்.
- உயர் மட்ட அதிகாரிகளினால் கேட்கப்படும் வெளிநாட்டு நிதியீட்டுடன் தொடர்புடைய பல்வேறு பொருளாதார ஆய்வு அறிக்கைகளையும், தரவுகளையும் உரிய நேரத்தில் தயாரித்தல்.

# நிதி ரீதியான மீளாய்வு

## செலவினம் தொடர்பான நிதி வாரியான தகவல்கள்

இத்திணைக்களம் ஈட்டிக் கொடுக்கும் நிறுவனமாக இனங்காணப்படவில்லை. எனவே, 2015 ஆம் ஆண்டில் வரவு செலவுத் திட்டத் தலைப்பு இலக்கம் 239 இன் கீழான திணைக்களத்தின் ஆளுக்கான வேதனாதிகள் தொடர்பான ஒதுக்கீடு எதிரான செலவினங்கள் மீதான நிதி ரீதியான தகவல்கள், ஏனைய மீண்டெழும் செலவுகள், மூலதனச் செலவினம், மற்றும் திணைக்களத்தின் முற்பணக் கணக்குச் செயற்பாடுகள் பின்வரும் அட்டவணைகளில் தரப்பட்டுள்ளன.

**ஆளுக்கான வேதனாதிகள்**

| **ரூபா** | |
|---|---|
| மூல ஒதுக்கீடுகள் | 59,600,000 |
| **கூட்டு :** | |
| குறை நிரப்பு ஒதுக்கீடு | |
| நிதி ஒழுங்குகள். 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | 56,000 |
| **கழி:** | |
| நிதி ஒழுங்குகள். 66இன் கீழான மாற்றல்கள் | - |
| **மொத்த ஒதுக்கீடு** | 59,656,000 |
| குறிப்பிட்ட ஆண்டிற்கான மொத்த செலவினம் | 57,454,199 |

**ஏனைய மீண்டெழும் செலவுகள்**

| **ரூபா** | |
|---|---|
| நிதி ஒதுக்கீடுகள் | 281,930,000 |
| **கூட்டு** : | |
| குறை நிரப்பு ஒதுக்கீடு | |
| நிதி ஒழுங்குகள். 66 மற்றும் 69 இன் கீழான மாற்றல்கள் | |
| **கழி**: | |
| நிதி ஒழுங்குகள். 66இன் கீழான மாற்றல்கள் | -(8,344,375) |
| **மொத்த ஒதுக்கீடு** | 273,585,625 |
| குறிப்பிட்ட ஆண்டிற்கான மொத்த செலவினம் | 139,513,302 |

மூலதனச் செலவினம்

| செலவு விடயக் குறியீடு | செலவு விடயத் தலைப்பு | 2015 ஒதுக்கீடு ரூபா | 2015 தேறிய ஒதுக்கீடு ரூபா | செலவினம் ரூபா. |
|---|---|---|---|---|
| 2002 | பொறித் தொகுதி, இயந்திராதிகள், மற்றும் உபகரணங்களின புனருத்தாரணங்களும், மேம்படுத்தல்களும் | 700,000 | 700,000 | 440,110 |
| 2003 | வாகனங்களின் திருத்தங்களும், மற்றும் மேம்படுத்தல்களும் | 1,000,000 | 1,000,000 | 427,449 |
| 2102 | தளபாடங்களினதும், அலுவலக உபகரணங்களினதும் கொள்வனவு | 1,200,000 | 1,200,000 | 13,027 |
| 2103 | பொறிகளும், இயந்திரங்களும், உபகரணங்களும் | 5,000,000 | 5,000,000 | 2,963,801 |
| 2204(21) | ஆசிய அபிவிருத்தி வங்கி - சாதாரண மூலதன அபிவிருத்தி | 547,000,000 | 550,094,900 | 550,094,900 |
| 2204-3- (11) | உகண்டாவில் தொழில்சார் மற்றும் பயிற்சி நிலையம் | 97,000,000 | 105,199,500 | 105,199,088 |
| 2204-5- (11) | உலக உணவு நிகழ்ச்சித் திட்டத்துக்கான உணவு உதவி | 2,000,000,000 | 2,000,000,000 | 13,008,172 |
| 2401 | பயிற்சியும், இயலளவுக் கட்டமைப்பும் | 2,200,000 | 4,920,375 | 4,920,373 |
| 2502 (17) | வெளிநாட்டு தூதுவர் இல்லங்களுக்கான பெ.சே.வரியின் மீள் கொடுப்பனவு | 3,500,000 | 868,500 | 868,127 |
| 2502-4-(13) | வெளிநாட்டு மாற்றல்கள் – (முதலீடு) | 5,630,000 | 5,630,000 | 0 |
| | மொத்தம் | **2,663,230,000** | **2,674,613,275** | **677,855,047** |

வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டின் பயன்பாட்டின் சுருக்கம்

| செலவீனத்தின் விபரம் | 2015 ஒதுக்கீடுகள் ரூபா. | 2015 தேறிய ஒதுக்கீடு ரூபா. | 2015 உண்மையான செலவீனம் ரூபா. |
|---|---|---|---|
| மீண்டெளும் செலவீனம் | 341,530,000 | 333,241,625 | 196,967,501 |
| மூலதனச் செலவீனம் | 2,663,230,000 | 2,674,613,275 | 677,855,047 |
| **மொத்தம்** | **3,004,760,000** | **3,007,854,900** | **874,822,548** |

## அரச ஊழியர்களின் முற்பணக் கணக்குகள்

இத்திணைக்களத்தின் 2015 ஆம் ஆண்டிற்கான அரச ஊழியர்களின் முற்பணக் கணக்கின் விபரங்கள் பின்வருமாறு:.

| விபரம் | அங்கீகரிக்கப்பட்ட எல்லை ரூபா | உண்மைச் செலவினம் ரூபா. |
|---|---|---|
| செலவினத்தின் உச்ச எல்லை | 4,500,000 | 4,495,686 |
| வரவுகளின் குறைந்த எல்லை | 2,500,000 | 3,715,158 |
| கடன் மீதியின் உச்ச எல்லை | 27,000,000 | 16,845,541 |

## கணக்காய்வாளர் நாயகத்தின் விசாரணைகள்

2015 ஆம் ஆண்டில், நிதி அமைச்சின் முகாமைத்துவக் கணக்காய்வுத் திணைக்களத்திடமிருந்து 02 கணக்காய்வு விசாரணைகளும், கணக்காய்வாளர் நாயகத் திணைக்களத்திடமிருந்து 06 கணக்காய்வு விசாரணைகளும், கிடைக்கப் பெற்றதோடு, சகல விசாரணைகளுக்கும் விடையளிக்கப்பட்டன.

## 2015 ஆம் ஆண்டின் ஒதுக்கீட்டுக் கணக்கு

2015 ஆம் ஆண்டிற்கான ஒதுக்கீட்டுக் கணக்கு 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 31 ஆம் திகதி கணக்காய்வாளர் நாயகத்திடம் சமர்ப்பிக்கப்பட்டது.

2015 ஜனவரி – டிசம்பர் வரை கைச்சாத்திடப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டின் கடன் உடன்படிக்கைகளின் பட்டியலும், அவற்றின் நிதிசார் நியதிகளும்

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம் | கடன் தொகை | | | வருடாந்த வட்டி வீதம் | | | அர்ப்பணிப்புக் கட்டணம் (பகிரப்படாத மீதியிலிருந்து) | ஏனைய கொடுப்பனவுகள் | காலப்பிரிவு (வருடங்கள்) | முதிர்வு (தயவுக் காலப்பிரிவு உட்பட) (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | மூலத் தொகை மில்லியன் | ஐஅடொ மில்லியன் | வட்டியின் வகை | வீதம் (%) | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | | | | |
| **இரு தரப்பு** | | | | | | | | | | | | |
| ஜப்பான் | 11/8/2015 | தேசிய மின்சக்திப் பரிமாற்ற மற்றும் விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் மேம்பாட்டுக் கருத்திட்டம் | ஜப்பானிய யென் | 23,900 | 199.9 | நிலையானது | கட்டம் 1 - 0.3%<br>கட்டம் 2- 0.01% | பொருத்தமற்றது | – | ஆரம்பக் கட்டணம் - ஜப்பானிய யென் 49,860,000 | 10 | 40 |
| பிரான்ஸ் | 2/10/2015 | மாலிபொட, நாவலபிட்டிய, வேவல்வத்தை மற்றும் ராகல ஆகிய இடங்களில் நான்கு கட்ட உப நிலையங்களை நிர்மாணித்தல் | யூரோ | 30 | 33.6 | மாறக்கூடியது | யூரிபோர் (LIBOR) – 6 மாதங்கள் | 1.31% | 0.50% | முன்ஆய்வுக் கட்டணம் - யூரோ 150,000 | 5 | 20 |
| | 2/10/2015 | பச்சை சக்தி அபிவிருத்தியம், வலு விளைத்திறன் விருத்தி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் | யூரோ | 22 | 24.6 | மாறக்கூடியது | யூரிபோர் (LIBOR) – 6 மாதங்கள் | 1.31% | 0.50% | முன்ஆய்வுக் கட்டணம் - யூரோ 110,000 | 5 | 20 |
| கொரியா | 22/6/2015 | ஹட்டன் - நுவரெலியா விருத்திக் கருத்திட்டம் | கொரியா வொன் | 19,166.00 | 17.3 | நிலையானது | 0.15% | பொருத்தமற்றது | – | – | 10 | 40 |
| ஸ்பெய்ன் | 14/12/2015 | கனேமுல்லை, பொல்கஹவலை, மற்றும் ராஜகிரிய (இரு தரப்பு பங்கு) ஆகிய இடங்களில் மூன்று மேம்பாலங்களை ஸ்தாபித்தல்) | யூரோ | 37.60 | 41.2 | நிலையானது | 0.15% | பொருத்தமற்றது | 0.10% | முகாமைத்துவக் கட்டணம்- யூரோ 18,798.32 | 5 | 40 |
| அபிவிருத்திக்கான சவூதி நிதியம் | 30/10/2015 | பேராதனை – பதுளை - செங்கலடி வீதிக் கருத்திட்டத்தின் விருத்தி | சவூதி ரியாழ் | 225.00 | 60 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | – | – | 5 | 25 |
| | 30/10/2015 | கால்-கை வலிப்பு வைத்தியசாலை மற்றும் சுகாதார நிலையங்களின் கருத்திட்டம் (மேலதிக நிதி) | சவூதி ரியாழ் | 45 | 12 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | – | – | 5 | 20 |
| ஏற்றுமதிக் கடன் | | | | | | | | | | | | |
| ஏபீ ஸ்வென்ஸ்க் ஏற்றுமதிக் கடன் | 25/5/2015 | இரத்மலானை மற்றும் ஜாஎலை கழிவுநீர் சுத்திகரிப்பு வசதிகள் கருத்திட்டம் (சுவீடன்) – விரிவாக்கம் | ஐஅடொ | 3.1 | 3.1 | நிலையானது | 0.92% | பொருத்தமற்றது | 0.15% | நிர்வாகக் கட்டணம் - 0.03%(கடன் தொகை ), முகாமைத்துவக் கட்டணம் ஐஅடொ 91,918.97 , ஏற்பாட்டுக் கட்டணம் - ஐஅடொ 3,141.69 , அர்ப்பணிப்புக் கட்டணம்- ஐஅடொ 5260.93 | 10 | 25 |
| அவுஸ்திரேலியாவிலுள்ள அவுஸ்திரேலியா, , நியூசிலாந்து வங்கி | 29/05/2015 | அம்பாறை மாவட்டத்தின் ஒன்றிணைக்கப்பட்ட நீர் வழங்கல் திட்டம் - விரிவாக்கம் | ஐஅடொ | 7.5 | 7.5 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதங்கள்) | 1% | – | உத்தரவாதக் கட்டணம் ஐஅடொ 14,495,000 | 3 | 14 |

2015 ஜனவரி – டிசம்பர் வரை கைச்சாத்திடப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டின் கடன் உடன்படிக்கைகளின் பட்டியலும், அவற்றின் நிதிசார் நியதிகளும் தொடர்ச்சி…..

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைகத் திகதி | கருத்திட்டம் | கடன் தொகை | | | வருடாந்த வட்டி வீதம் | | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | அர்ப்பணிப்புக் கட்டணம் (பகிரப்படாத மீதியிலிருந்து) | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (வருடங்கள் ) | முதிர்வு (தயவுக் காலப்பிரிவு உட்பட) (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | தொகை | ஐ அ டொ மில்லியன் | வட்டியின் வகை | வீதம் (%) | | | | | |
| பேங்கோ பில்பாஓ விஸ்காயா ஆஜன்டாரியா எஸ். ஏ. | 14/12/2015 | கனேமுல்லை, பொல்கஹவலை, மற்றும் ராஜகிரிய ஆகிய பிரதேசங்களில் மூன்ற மேம்பாலங்களை ஸ்தாபித்தல் (ஏற்றுமதிக் கடன்) | யூரோ | 16.10 | 17.7 | மாறக்கூடியது | யூரிபோர் (LIBOR) – 6 மாதங்கள் | 1.95% | – | முகாமைத்துவக் கட்டணம் யூரோ 80,564.24 | 3 | 13 |
| ஏற்றுமதி நிதி மற்றும் காப்புறுதிக் கூட்டுத்தாபனம் | 17/12/2015 | மருத்துவக் கழிவு வெளியேற்ற முறைமைகள் மற்றும் தொடர்புடைய உபகரணங்களை வழங்கலும், கொள்வனவு செய்தலும் | ஐஅடொ | 13.80 | 13.8 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதங்கள்) | 1% | – | ஏனையவை - ஐஅடொ 243,106 & ஐஅடொ 100,00 | 2 | 11 |
| எச்எஸ்பீசீ (ஈகேஎப் டென்மார்க்கின் உத்தரவாதத்துடன்) | 14/8/2015 | புதல்கமையில் பால் பதப்படுத்தும் நிலையத்தினை ஸ்தாபித்தல்- | யூரோ | 66.60 | 74.20 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதங்கள்) | கட்டம 1 -5 %<br>கட்டம் 2- 1.9% | –<br>0.50% | கட்டமைப்புக் கட்டணம் - யூரோ 9,975,863<br>கட்டமைப்புக் கட்டணம் - யூரோ 285,759 , வரிக்கட்டணங்கள் -2,234,919 | 3 | 13 |
| **பல் தரப்பு** | | | | | | | | | | | | |
| ஆசிய அபிவிருத்தி வங்கி | 28/5/2015 | ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | விஎஉ | 6.1 | 8.6 | நிலையானது | 2% | பொருத்தமற்றது | – | - | 5 | 25 |
| | 28/5/2015 | ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 2 | ஐஅடொ | 98 | 98 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதங்கள்) | 0.50% | 0.15% | முதிர்வுத் தவணை 0.1% | 5 | 25 |
| | 17/9/2015 | மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | விஎஉ | 53.6 | 71.8 | நிலையானது | 2% | பொருத்தமற்றது | – | - | 5 | 25 |
| | 17/9/2015 | மகாவலி நீர்ப்பாதுகாப்பு முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 1 | ஐஅடொ | 76 | 76 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதங்கள்) | 0.50% | 0.15% | முதிர்வுத் தவணை 0.1% | 5 | 25 |
| | 11/12/2015 | ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 3 | ஐஅடொ | 175 | 175 | மாறக்கூடியது | லைபோர் (LIBOR) – (ஐஅடொ இற்கான 6 மாதங்கள்) | 0.50% | 0.15% | - | 5 | 25 |
| | 11/12/2015 | ஒன்றிணைக்கப்பட்ட வீதி முதலீட்டு நிகழ்ச்சித் திட்டம் - கட்டம் 3 | விஎஉ | 17.7 | 24.3 | நிலையானது | 2.00% | பொருத்தமற்றது | – | – | 5 | 25 |

## 2015 இல் கைச்சாத்திடப்பட்ட வெளிநாட்டு நிதியீட்டின் கடன் உடன்படிக்கைகளின் பட்டியலும், அவற்றின் நிதிசார் நியதிகளும் தொடர்ச்சி...

| அபிவிருத்திப் பங்காளர் / கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைகத் திகதி | கருத்திட்டம் | கடன் தொகை | | | வருடாந்த வட்டி வீதம் | | எல்லை (100 அடிப்படை புள்ளி விபரங்கள்) | அர்ப்பணிப்புக் கட்டணம் (பகிரப்படாத மீதியிலிருந்து ) | ஏனைய கொடுப்பனவுகள் | தயவுக் காலப்பிரிவு (வருடங்கள்) | முதிர்வு (தயவுக் காலப்பிரிவு உட்பட) (வருடங்கள்) |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | நாணயம் | மூலத் தொகை மில்லியன் | ஐஅடொ மில்லியன் | வட்டியின் வகை | வீதம் (%) | | | | | |
| உலக வங்கியின் சர்வதேச அபிவிருத்தி அமைப்பு | 06/11/2015 | நீர் வழங்கல் விருத்திக் கருத்திட்டம் | விவஉ | 117.4 | 163.2 | நிலையானது | 1.26% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| | 23/10/2015 | முன் குழந்தைப் பருவ அபிவிருத்திக் கருத்திட்டம் | விவஉ | 35.6 | 50 | நிலையானது | 1.25% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| | 09/12/2015 | வட கிழக்கு உள்ளூர் சேவைகள் விருத்திக் கருத்திட்டத்திற்கான [NELSIP] மேலதிக நிதியீடு | விவஉ | 14.3 | 19.6 | நிலையானது | 1.25% | பொருத்தமற்றது | 0.50% | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (0.75%) | 5 | 25 |
| சர்வதேச அபிவிருத்திக்கான ஒபெக் நிதி | 26/6/2015 | மேல் மாகாண வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | ஐஅடொ | 17 | 17 | நிலையானது | 2.60% | பொருத்தமற்றது | _ | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (1%) | 5 | 20 |
| | 26/6/2015 | பதுளை செங்கலடி வீதி அபிவிருத்திக் கருத்திட்டம் | ஐஅடொ | 60 | 60 | நிலையானது | 2.50% | பொருத்தமற்றது | _ | தீர்ப்பனவுக் கட்டணங்கள் (1%) | 5 | 20 |
| | | | **மொத்தம்** | | **1,268.40** | | | | | | | |

**குறிப்பு:** 1. LIBOR = லண்டன் வங்கிகளுக்கு இடையிலான சலுகை வீதம்

2. EURIBOR = யூரோ வங்கிகளுக்கு இடையிலான சலுகை வீதம்

3. கடன் உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்பட்ட திகதியில் வேறுபட்ட நாணயங்களுக்குக் காணப்பட்ட செலாவணி வீதங்களே அறிக்கைக்கான பரிவர்த்தனை வீதங்களாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

4. அரசுடமை வர்த்தக தொழில்முயற்சிகளினால் பெற்றுக் கொள்ளப்பட்ட வெளிநாட்டுக் கடன் அர்ப்பணிப்புக்கள் உள்ளடக்கப்படவில்லை

## 2015 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் டிசம்பர் மாதம் வரை கைச்சாத்திடப்பட்ட நன்கொடை உடன்படிக்கைகளின் பட்டியல்

| அபிவிருத்திப் பங்காளர்/ கடன் வழங்கும் நிறுவனம் | உடன்படிக்கைத் திகதி | கருத்திட்டம் | அர்ப்பணிக்கப்பட்ட தொகை | | |
|---|---|---|---|---|---|
| | | | கைச்சாத்திடப்பட்ட நாணயம் | தொகை மில்லியன் | ஐஅடொ மில்லியன் |
| | | | | | |
| இந்தியா | 11/27/2015 | முழுமையான அவசர பதில் சேவைகள் - கட்டம் I | ஐஅடொ | 7.6 | 7.6 |
| ஜப்பான் | 8/14/2015 | ஜப்பானிய உள்ளூர் உற்பத்திப் பொருட்களின் ஏற்பாட்டிற்கான ஜப்பானின் கருத்திட்டமல்லாத நன்கொடை உதவி 2014 | ஜப்பானிய யென் | 500.0 | 4.1 |
| கொரியா | 6/22/2015 | இலங்கையின் தடய அறிவியல் நிறுவனங்கள் மற்றும் அதன் உத்தியோகத்தர்களுக்கான இயலளவுக் கட்டியெழுப்பும் கருத்திட்டம் | ஐஅடொ | 3.2 | 3.2 |
| ஜேர்மன் | 11/26/2015 | சமூக ஒற்றுமைக்கான கல்வி [ESC] | யூரோ | 4.0 | 4.2 |
| | 4/24/2015 | வில்பத்துவில் தேசிய பூங்கா மற்றும் பாதுகாப்பு வலயம் | யூரோ | 2.0 | 2.2 |
| ஐக்கிய அமெரிக்கா (USA) | 8/20/2015 | சமூக ஒன்றிணைப்பிற்கான பலப்படுத்தப்பட்ட பங்கேற்பு | ஐஅடொ | 2.1 | 2.1 |
| பல் தரப்பு | | | | | |
| உணவு விவசாய நிறுவனம் (FAO) | 2/25/2015 | விவசாய பொருளாதார அபிவிருத்திக் கருத்திட்டம் | கனேடிய டொலர் | 3.0 | 2.4 |
| ஐக்கிய நாடுகள் அபிவிருத்தி நிகழ்ச்சித் திட்டம் (UNDP) | 9/23/2015 | சுற்றாடல் ரீதியாக எளிதில் பாதிக்கக் கூடிய பிரதேசங்களில் பல்லுயிர்களின் பாதுகாப்பினையும், மற்றும் சுற்றுச் சூழல் முறைமை சேவைகளின் வாழ்வாதாரம் | ஐஅடொ | 9.1 | 9.1 |
| | 11/4/2015 | மேம்படுத்தப்பட்ட தகவல்களின் ஊடாக பின் நெருக்கடி துரித அபிவிருத்தியில் உலகளாவிய சுற்றாடல் நலன்கள் மற்றும் முக்கிய சிறந்த நடைமுறைகளும் | ஐஅடொ | 1.0 | 1.0 |
| உலக உணவு நிகழ்ச்சித் திட்டம் (WFP) | 4/10/2015 | நீடித்த நிவாரண மீட்புச் செயற்பாடுகள் (PRRO) | ஐஅடொ | 29.3 | 29.3 |
| **மொத்தம்** | | | | | **65.2** |